பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

256

சித்திரை
01.04.2025

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



அருண்மொழிவர்மன்/ வனஜா நடராசா / கே.எஸ்.சுதாகர்/ எஸ்.எம்.ஜே.பைஸ்தீன்/ எம்.எம்.மன்ஸூர்/ இ.புஷ்பா/ சி.குமரலிங்கம்/ ஜலீலா முஸம்மில்/ பேராசிரியர் சபா ஜெயராசா சி.சிறீறங்கன்/ இ.சு.முரளிதரன்/ ஐங்கரன் விக்கினேஸ்வரா/ சுபாஷினி துவராஜ்/ த.ஜெயசீலன்/ மு.அநாதரட்சகன்/ மொழிவரதன்/ ந.இரவீந்திரன்/ கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்/ கோகிலா மகேந்திரன்/ தமிழ்க்கவி / கனிவுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2025 - சித்திரை (01.04.2025)

# பொருளடக்கம்

**சிறுகதைகள்**
கே.எஸ்.சுதாகர் - 07
இ.புஷ்பா - 12
சி.சிறீறங்கன் - 18
சுபாஷினி துவராஜ் - 26

**கவிதைகள்**
வனஜா நடராசா - 06
எம்.எம்.மன்ஸுர் - 11
சி.குமரலிங்கம் - 14
ஜலீலா முஸம்மில் - 15
த.ஜெயசீலன் - 28
மொழிவரதன் - 30
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் - 33

**கொமிக்ஸ் தொடர்**
இ.சு.முரளிதரன் - 20

**நூல் விமர்சனம்**
கே.எஸ்.சுதாகர்- 22

**தொடர் நாவல்**
தமிழ்க்கவி - 37

**உள் ஓவியங்கள்**
கனிவுமதி

**கட்டுரைகள்**

**பாரதியும் சரவணமுத்துப்பிள்ளையும்**
அருண்மொழிவர்மன் - 03

**படைப்பும் விமரிசனமும் அரசியலும்**
எஸ்.எம்.ஜே.பைஸ்தீன் - 10

**சிறுவர் இசையும் சிறுவருக்கு இசையும்**
பேராசிரியர் சபா.ஜெயராசா - 16



**சிறுவர் இலக்கியத்தில் சித்திரக்கதைகள்:**
**சிறார் மனதை கவர்ந்த முத்து காமிக்ஸ்!**
ஐங்கரன் விக்கினேஸ்வரா - 22

**காலத்தில் வாழும் படைப்பாளி கே.ஆர்.டேவிட்**
**நினைவுப் பகிர்வு**
மு.அநாதரட்சகன் - 29

**நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து - 3**
ந.இரவீந்திரன் - 32

**முடிவைத்தொடுவாய் முயன்று - 15**
கோகிலா மகேந்திரன் - 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2025 சித்திரை இதழ் - 256**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


## ஆய்வு மாநாடுகளும் ஆய்வுக்கட்டுரைகள்

ஆய்வு என்பது அறிவுத் தேடலுடன் சம்பந்தப்பட்டதாகும். ஆய்வு என்பதனைக் குறிக்கும் ஆங்கிலப்பதமான Research என்பது தேடுதல் எனப் பொருள் கொண்ட. Researcher என்ற பிரெஞ்சு மொழிச் சொல்லின் வழி வந்ததாகக் கூறப்படும். இதானலேயே The advanced learner's dictionary of current english அகராதியில் "எந்த ஓர் அறிவுத்துறையிலும் புதிய தகவல்களைக் குறிப்பாக தேடுவதற்கான கவனமான ஒரு பரிசீலனை அல்லது ஆராய்வு" என்பதே ஆய்வு என்பதன் பொருள் எனப்பட்டுள்ளது. ஆய்வின் அணுகு முறைகள் சார்பாகத் தெரிவிக்கப்படும் இரு கட்டளைக்கோள்கள் முக்கிய மானவை. 1. அளவறிநிலை ஆய்வு அணுகுமுறை. 2.பண்புநிலைத்தரவுகள். ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கான முக்கிய படிநிலைகளாக, ஆய்வுப் பிரச்சினை ஒன்றை இனங்காணல், பிரச்சினையைத் தெளிவு படுத்திக் கொள்ளல், ஆய்வுப்பிரச்சினையை குறிப்பாகக் கூறுதல், ஆய்வு வடி வமைப்பைத் தெரிவு செய்தலும் ஆய்வுத் திட்டத்தை தயாரித்தலும், தரவு சேகரிப்பு, தரவுப்பகுப்பாய்வு, முடிவுகளைப் பெறல் என்பன குறிப்பிடப்படு கின்றன.

ஈழத்தில் ஒவ்வொரு ஆண்டும் பல ஆய்வு மாநாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக பல்கலைக்கழகங்களால் இவ் ஆய்வு மாநாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன. தமிழ்த்துறை, கல்வியியல் துறை இந்த முன்னெடுப்புகளில் முன்னிற்கின்றன. குறித்த ஒரு பொருளை மையப்படுத்தி இந்த ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு அவை கட்டுரை வடிவம் கொள்கின்றன. இந்த ஆய்வுகள் வாயிலாக குறித்த பொருள் தொடர்பான பல விடயங்களும் அலசி ஆராயப்படுவதால் எதிர்கால சமூகம் மிகுந்த பலனை அடைவதனை அவதானிக்க முடிகின்றது. பல்துறை சார்ந்த விற்பன்னர்களும் இந்த ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிப்பதோடு மாணவர்கள், ஆசிரியர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படுவதால் அவர்களும் வளம் பெறுகின்றார்கள். ஆய்வு மாநாடுகளின் போது எழுதப்பட்ட கட்டுரைகள் அங்கு வாசிக்கப்படுவதும் அவை தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறுவதும் சந்தேகங்களை தீர்ப்பதற்கும் குறித்த பொருள் பற்றிய மேலதிக விளக்கங்களை அறிவதற்கும் சிறந்த சந்தர்ப்பமாக அமைகின்றன. இன்று "ஆய்வுக்கட்டுரை சமர்பித்தல்" என்பது உயர்கல்வி பாடநெறியில் அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது. இந்த ஆய்வு மாநாடுகளும் ஆய்வுக்கட்டுரைகள் பல்துறை சார்ந்த அறிவினை தேடல் உள்ளவர்களிடம் ஏற்படுத்த உதவுகின்றன. இந்த ஆய்வுகள் மூலம் எமது இலக்கிய உலகமும் செழுமையடையட்டும்.

- க.பரணீதரன்


ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன்,
சோ.தேவராஜா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருண்மொழி வர்மன்

# பாரதியும் சரவணமுத்துப்பிள்ளையும்

"ஆதி சிவன் பெற்று விட்டான் – என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்"

என்று தொடங்குகின்ற பாரதி எழுதிய பாடல், நாட்டுப் பாட்டு என்ற பெயரில் *1919* இல் வெளியான அவரது கவிதை / பாடல் தொகுதியில் இடம்பெற்றிருந்தது. இந்தப் பாடலில் பாரதி,

புத்தம் புதிய கலைகள் பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவ தில்லை அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்

என்றுரைத்த பேதையாகக் குறிப்பிடப்படுபவர் பச்சையப்பன் கல்லூரி தலைமை வாத்தியார் பேரா.ஜே.சி. ரோல்லோ எசோ (Prof. J.C. Rollo Eso), இவர் பச்சையப்பன் கல்லூரித் தலைமை ஆசிரியராகப் பதவி வகித்த காலம் *1912–1918* ஆகும்.[1]

எனவே, பாரதி இந்தக் கவிதையை எழுதிய காலப்பகுதி *1918* முதல் *1919* வரையாக இருக்கவேண்டும் என்பது உறுதியாகின்றது. புரட்சிக் கவி என்று உணர்ச்சிகரமாகப் புகழப்படுகின்ற பாரதி, தமிழைத் தோற்றுவித்தவன் சிவன் என்றும், அதற்கு இலக்கணம் கற்பித்தவன் அகத்தியன் என்னும் வேதியன் என்றும் சொல்கின்ற இந்தக் கவிதை, பாரதியை அவர் எழுத்துகளில் இருந்தே அம்பலப்படுத்தும் இன்னோர் சான்று. முற்போக்கான பார்வை கொண்டவராகவும், அன்றைய காலத்தில் வந்துகொண்டிருந்த பல்வேறு ஆங்கில, தமிழ் இதழ்களையும் படித்துக் கொண்டிருந்தவராகவும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியை வரவேற்றவராகவும் சொல்லப்படுகின்ற பாரதிக்கு ஒரு மொழியின் தோற்றமும், அதன் இலக்கணம் வகுக்கப்படுவதும் பற்றி இருந்த பார்வை வைதீகப் பார்வையாகவே இருக்கின்றது.

புரட்சிக்கவி என்று திருவுருவப்படுத்தப்பட்ட பாரதி *1918/1919* இல் எழுதியிருக்கக் கூடிய பாடலில் ஆதி சிவன் பெற்று விட்டான், அகத்தியன் என்றோர் வேதியன் மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான் என்றெல்லாம் பேசுவதற்குப் பின்னால் இருக்கக் கூடிய பார்ப்பனிய மனநிலை அபாயகரமானது. அதுமட்டுமல்லாமல் தமிழ்மொழியின் தோற்றம் குறித்த இந்தச் சிந்தனை பாரதியிடம் ஆரம்பம் முதலே நிலைபெற்றிருந்தமையை அவர் எழுதிய முதலாவது பாடலாகக் கருதப்படும், ஜனவரி, *1897* இல் எழுதப்பட்ட "எட்டயபுரம் மன்னருக்கு விண்ணப்பம்" என்ற பாடலிலும் இதே கருத்தினைக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அறியலாம்.

இந்தப் பாடலைத் தனது பதினைந்தாவது வயதில் பாரதி எழுதினார் என்பதனாலும், அவர் உதவி வேண்டி எழுதிய மடலது ஆதலாலும் எட்டயபுரம் மன்னரைக் குளிர்விக்கவேண்டிய தேவை இருந்திருக்கலாம் என்பதையும் நாம் கருத்திற்கொண்டாலும் கூட, *1918/19* இல் கிட்டத்தட்ட தனது இறுதிக்காலத்தில் எழுதப்பட்ட பாடலான கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் "ஆதிசிவன் பெற்றுவிட்டான்..." பாடலிலும் கூட அதே நிலைப்பாட்டுடனேயே பாரதி இருந்திருக்கின்றார்.

*000*

இவ்விடத்தில் தமிழ்மொழியின் தோற்றம் குறித்து தமிழின் முதலாவது வரலாற்று நாவலான மோகனாங்கியை எழுதியவரும் சென்னை மாநிலக் கல்லூரி நூலகத்தின் கீழைத்தேய சுவடி நிலையத்தின் பொறுப்பாளராகக் கடமையாற்றியவருமான திருகோணமலையைச் சேர்ந்த தி.த.சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் *1892*ம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியினுள் தமிழ்ச்சங்கத்தைத் தொடங்கும் போது ஆற்றிய தொடக்க உரையான "தமிழ்பாஷை" என்னும் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடும் பின்வரும் பகுதி விதந்து நோக்கத் தக்கது:

"தமிழின் சிறப்பெடுத்துரைப்பதென்ன? அதன் உற்பத்தியை நோக்குங்காலத்தே அதன் மகிமை உள்ளங்கை நெல்லிக்கனி போற்றெற்றெனப் புலப்படவில்லையா எனக் கடாவுவாரும் உளர். தமிழின் உற்பத்தி யாதோ எனப் பண்டிதரை வினவுவோமேல் அதைப்பற்றிப் பல கொள்கைகள் இருப்பதாகத்தெரியும். சப்த சமுத்திரத்தையும் ஓர் உழுந்தளவாக்கி உள்ளங்கையில் வைத்துப் பானஞ் செய்தருளிய அகத்திய மகா முனிவரால் அன்றோ தமிழியற்றப்பட்டது என்பார் ஒருசாரார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரபன்மனை வேல்கொடு தடிந்து அமரர் தம்மிடரை அடியொடு களைந்த சுப்பிரமண்ணிய சுவாமியாலன்றோ தமிழியற்றப்பட்டது என்பார் மற்றொரு சாரார். திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளன்றோ தமிழிற்கு ஆதி நாயகர் என்றறைவோர் அனேகர். ஆகவே தமிழின் மகிமை தானே புலப்படுகின்றதென நமது தமிழ்ப் பண்டிதர் மனமகிழ்ந்து இருக்கின்றனர். ஆயின் அவர் செய்த பாவமோ தமிழ் செய்த புண்ணியமோ யாதோ அறிகிலேன். தற்காலத்து அவர் மாற்றம் அவைக் கேறாது போகின்றது. ஆங்கிலேய பாஷைகற்று அணு வேனும் ஆங்கிலேய சாஸ்திரங்களிற் பயின்றோர்க்கு அவர் கூற்று நகை விளைக்கின்றது. யாதொரு பாஷையா யினும், அது எவ்வளவு அற்புதமாயிருந்த போதினும், அது ஒருவனாற் சிருஷ்டிக்கப்பட்டது என்பதைத் தற் காலத்துக் கைக்கொள்ளார். அதுநிற்க, சிவபெருமானே தமிழ்ப்பாஷையைச் சிருஷ்டித்தாரென வைத்துக் கொள்வோம். அதனாற் தமிழ்பெற்ற பயன் யாதோ? தமிழ் மாத்திரம் தானா கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்டது? மறுபாஷைகள் யாவராற் சிருஷ்டிக்கப்பட்டனவோ? அன்றித் தாமே முளைத்தனவோ? சகல பாஷைகளுங் கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்டனவாயின், தமிழ் கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்டது என உரத்துக் கூறுவதனால் தமிழ் பெற்ற ஊதியமென்னோ? அற்றன்று தமிழ் கடவுள் பேசும் பாஷை என்பராயின் மறு பாஷைகள் கடவுட்குத் தெரியாதா? மறுபாஷைகள் பேசுவோரிடத்துக் கடவுள் பேசவேண்டுமாயின் தமிழிலேயா பேசுவார்? அல்லது மொழி பெயர்ப்பதற்கு ஒருவரை வைத்திருக்கின்றனரா? அல்லது அவரவரிடத்து அவரவர் பாஷையே பேசுவாரா யின் தமிழைக் கடவுள் பேசினார் என்பதனால் தமிழ்க் கென்ன பயன்? அதுவுமன்றிக் கடவுள் ஹீப்றுபாஷை பேசினாரெனக் கிறீஸ்தவரும், அராபி பாஷைபேசினா ரென மகமதியருங் கூறில் அவர்க்கு யாதுசமாதானஞ் சொல்வரோ? அவர் சொல்வது பொய் யாம் சொல்வது மெய் எனப்பன்முறை வற்புறுத்திக் கூறுவர் போலும்.

அதுநிற்க, கடவுள் தமிழை இயற்றினார் என்பதற்கு அத்தாட்சி யாதென நமது பண்டிதரை வினவுவேமேல், வடகலை தென்கலை வரையற வுணர்ந்த சிவஞான மகாமுனிவர் காஞ்சிப்புராணத்தில் அவ்வாறு கூறினாரன்றோ? முருகமூர்த்தி திருவருள் பெற்ற கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தை யவ் வாறு கழறிப்போந்தனரன்றோ? சோமசுந்தர துணை யடிபரவும் பரஞ்சோதி மாமுனவரும் திருவிளையாடற் புராணத் தவ்வாறு கூறியிருக்கினறனர் அன்றோ என்பார்."

இதுமட்டுமல்லாமற் தமிழின் பெருமை என்று அக்காலத்தில் வழங்கிய புராண இலக்கியங்களில் சொல்லப்பட்டவற்றையும் எடுத்துரைத்து அவற்றில் உள்ள பகுத்தறிவுக்கு ஒவ்வாத தன்மைகளைக் கேள்வி கேட்பதையும் இந்த நூலில் சரவணமுத்துப்பிள்ளை செய்துள்ளார். உதாரணமாக திருவிளையாடற் புராணத் தின் 58 வது பாடலான,

"தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்தது: முதலை
உண்ட பாலனை அழைத்தது:
எலும்பு பெண் உருவாகக்
கண்டதும், மறைக் கதவினைத்
திறந்ததும், கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச்
சொற்களோ சாற்றீர்"

என்பதைச் சுட்டிக்காட்டி, இதுவெல்லாம் தமிழின் பெருமை ஆகமாட்டாது என்றுகூறி, தமிழின் தோற்றம், வளர்ச்சி, பழந்தமிழ் இலக்கியங்களின் உள்ளடக்கம் போன்றவற்றை பகுத்தறிவுடன் ஆராய்கின்றார்.

**திராவிடர், தமிழ் குறித்து தி.த. சரவணமுத்துப்பிள்ளை**

மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு என்பது பெரியார் சொன்ன புகழ்பெற்ற வசனங்களில் ஒன்றாகும். இந்த இரண்டும் இல்லாததாலோ என்னவோ அண்மைக் காலமாகச் சில நபர்கள் திராவிடம், திராவிடர் என்கிற சொற்களைக் கேட்டாலே இவையெல்லாம் தமிழர் களுக்கு எதிராக பெரியார் உருவாக்கிய கருத்தாக்கங்கள் என்கிற அவதூறுகளைப் பரப்பி வருகின்றார். தன்னெஞ்சறிந்து பொய்யுரைப்போரிடம் உரையாடிப் பலனில்லை என்றாலும், 1892 ஆம் ஆண்டில், சென்னை துரைத்தனக் கல்லூரியின் தமிழ்ச்சங்கத்தின் தொடக்க விழாவில் தி.த. சரவணமுத்துப்பிள்ளை ஆற்றிய இந்த உரையில் திராவிடம், தமிழ் குறித்து தெரிவிக்கின்ற கருத்துகள் முக்கியமானவை.

1.பரத கண்டத்தின் தென்பாகத்தில் திராவிடர் கள் இருந்தனர் என்றும், பரதகண்டத்தில் முதலில் வசித்த திராவிடர்கள் ஆரியர்கள் இமயமலையைக் கடந்து இந்தியாவிற்கு வந்து வடபாகங்களைக் கைப்பற்றிக்கொள்ள திராவிடர்கள் தெற்கே வந்தனர் ஆகிய இரண்டு கருத்துகளும் இருக்கின்றன.

2.திராவிடர் யாது பாஷைபேசினாரென்று நாம் அறியோம். திராவிட பாஷையென்பது தமிழ், மலை யாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளுக்கு பொதுப் பெயராயினும் ஆரியர் பெரும்பாலும் தமிழையே திராவிடமென கூறிவந்ததாக தோற்றுகிறது.

3.மற்றத் திராவிட பாஷைகளைப் பார்க்கிலும் தமிழ் முந்தியன்பது திண்ணம். தற்கால திராவிட பாஷை களுக்கு முன் இவையாவற்றுக்கும் பொதுவாக பாஷை யொன்றிருந்திருக்கலாம். அது ஆங்காங்கு திருந்திய பொழுது ஓரிடத்தில் தமிழாயும், ஓரிடத்தில் தெலுங்கா யும், ஓரிடத்திற் கன்னடமாயும் மாறுபட்டிருக்கலாம்.

இவ்வாறு கூறுகின்ற தி.த. சரவணமுத்துப் பிள்ளை, தமிழ் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது என்று கூறுவோர்களின் வாதங்களையும் முற்றாக மறுக் கின்றார். தமிழ் என்னும் பெயருக்கான காரணங்களை யும் ஆராய்ந்து, போப் கூறிய "தென்மொழி, தெம்மொழி, தமிழ் என மருவி வந்தது என்கிற கருத்தையும் கால்டு வெல் குறிப்பிட்ட "திராவிடம், தமிழ் ஆகிய இரண்டுமே திரமிடம் என்னும் மொழியிலிருந்து பிறந்தன" என்பதுவும் பொருத்தமானவையாகத் தெரிகின்றன என்கிறார்.

"ஆகவே யாது காரணம் பற்றியோ தமிழ் எனும் பெயருடைய இப்பாஷை, திராவிட பாஷைகளிலொன்றா யும் மற்றைய திராவிட பாஷைகள் யாவற்றிற்கும் முந்திய தாயும், அவற்றிற் சிறந்ததாயும் சமஸ்கிருதத்துக்குக் கீழ்ப் படியாததாயும் பல்லாயிரம் வருடங்களாகத் தென்னிந்தி யாவில் வழங்கி வருகின்றது" என்று கூறுகின்ற சரவணமுத்துப்பிள்ளை, அவரது சமகாலத்தில் தமிழ் வளர்ச்சி தடைப்பட்டு மிகவும் பின் தங்கிய நிலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமையையும் சுட்டிக்காட்டுகின்றார். "...ஆகவே தற்கால இங்கிலிஷிக்குந் தமிழுக்கும் அளவிறந்த பேதமுண்டாதற் கிடமாயிற்று. நம்மனோர் விழித்தெழுந்து மறுபாஷைகளைக் கற்றுத் தமிழைத் திருத்துவரேல் தமிழுஞ் சில வருடத்தில் மிகவுந் திருந்துமன்றோ! ஆங்கிலேயே பாஷையளவு சிறப்புடைத்ததாக வருவதற்குத் தடைதானென்னோ!" என்று தமிழ் வளர்ச்சிக்குப் பரிந்துரையும் சொல்கிறார்.

### பழந்தமிழ் நூல்கள்

தமிழில் முதல்நூல் அகத்தியர் எழுதிய அகத்தியம் என்று இன்றும் சிலர் கதை சொல்லிக்கொண்டிருப்பதை நாம் கேட்டிருப்போம். "இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலில" என்ற நன்னூற் சூத்திரத்தை சுட்டிக்காட்டி தமிழிலக்கியம் உண்டுபடுவதற்கு முன்னேயே அகத்தியர் தமிழிலேயொரு பேரிலக்கணம் எழுதினார் எனக்கூறல் பெரு விந்தையே என்று கூறும் தி.த. சரவணமுத்துப்பிள்ளை, நாம் அப்படிக் கேட்டால் "சப்த சமுத்திரத்தையும் ஓர் உழுந்தளவாக்கி உள்ளங்கையில் வைத்தாசனஞ் செய்தருளிய அகத்தியர்க்கு இலக்கியமின்றி இலக்கணமெழுதுதல் ஒரு பெருங் காரியமோவென சமதானம் கூறலும் பண்டிதர் பாண்டியத்திற்கு எட்டியது அன்றிச் சின்னாட்பல் பிணிச்சிற்றறிவினராகிய நமக்குப் புலப்படும் பொருளோ" என்று கேலியும் செய்கின்றார்.

இதுபோலவே முச்சங்கங்கள் பற்றிய கதையாடல்களையும் சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் பின்வருமாறு கூறுவது அவரது தீர்க்கமான, அறிவியலின் அடிப்படையிலான ஆய்வுநோக்கினைக் காட்டுகின்றது:

"ஆயின் உள்ளதை உள்ளபடி கூறல் தமிழ்ப் பண்டிதர் குணமின்மையின் உண்மையும் அவர்வாயில் வரும்பொழுது உண்மை நிறம் மாறிப் பொய்யாகின்றது. ஆகவே சங்கங்களைப் பற்றிக் கூறுபனவற்றுள் உண்மையெவ்வளவு பொய் புளுகு எவ்வளவெனக் கண்டுபிடிக்கத் தொடங்கல் பகீரதப்பிரயத்தனமாகும். இச்சங்கங்களுள் ஒவ்வொன்றும் பல்லாயிர வருடமிருந்ததாகவும் இச்சங்களில் சிவன், சுப்பிரமணியர் முதலிய கடவுளர் சங்கத்தவராய் வீற்றிருந்தனரெனவும் இச்சங்கட்குத் தெய்வீகமான சங்கப்பலகை ஒன்றிருந்ததாகவும் இவ்வித பல கதைகளைக் கூறுவதனால் உள்ள உண்மையும் மறைந்து போகின்றது."

அதுமட்டுமல்லாமல் மொழியுடன் மதத்தையும் கலந்து, குறைந்த பட்ச பகுத்தறிவுக்குக் கூட நியாயம் கற்பிக்காத அளவு புராணங்களை மொழியின் தோற்றத்துடனும் வளர்ச்சியுடனும் இணைந்துச் செய்கின்ற கட்டுக்கதைகளுக்கும் மொழிக்கே மதச்சாயம் பூசும் மதவாதப் போக்குக்கும் எதிராக அதனை ஆரம்பத்திலேயே தி.த. சரவணமுத்துப்பிள்ளை இனங்கண்டு குரலெழுப்பியிருப்பதும், அதையும் கல்லூரியொன்றின் தமிழ்ச்சங்க தொடக்கவிழாவில் ஆற்றிய உரையிலேயே சுட்டிக்காட்டியிருப்பதும் மிகப்பெரும் செயல். தமிழின் ஆரம்பகால இலக்கியங்களில் வெவ்வேறு மதங்களையும் நம்பிக்கைகளையும் சேர்ந்தவர்களும் தமிழிலக்கியத்துக்குப் பங்காற்றியுள்ளனர் என்பதைத் தெளிவாகவே குறிப்பிடுகிறார் தி.த. சரவணமுத்துப்பிள்ளை. அதேநேரம், புராணங்களைப் பற்றி இவர் வைக்கின்ற கடுமையான விமர்சனங்களும் முக்கியமானவை என்பதால் அவற்றைக் கீழே தருகின்றேன்.

- புராணந் தொடங்கிய காலத்திலேயே தமிழிக்கு அஷ்டமத்திற் சனி வந்தது. தமிழ் மகிமையிழந்தமைக்கும் சிறந்த காவிய முதலியவை எழுதப்படாது போனதற்கும் புராணமே முக்கிய காரணமென யான் நினைக்கின்றேன்.
- தமிழில் எழுதக்கூடிய பெரு நூல்களில் மிகவுஞ் சுலபமாயெழுதக்கூடியது தல புராணமே. பிற்காலத்துத் தலபுராணங்கள் கணக்கற்றுப் பெருகியதும் இதனாலேயே இப்புராணங்கள் எழுதப்பட்டிருக்கும் பாஷையிலிருந்தும் இப் புராணங்களிற் கூறப்படும் விஷயங்களிலிருந்தும் தமிழணங்கிற்கு வாக்குமாறிய விருத்தாப்பிய காலம் வந்தது தோற்றும்.
- புராணங்களை இருகூறாகப் பிரித்து முற்கூற்றை பற்றிச் சிறிது சொன்னேன். பிற்கூற்றுப் புராணங்களின் காலமே தமிழுக்குக் கலிகாலம். விருத்தாப்பியமடைந்த தமிழணங்கிற்குப் பஞ்ச புலனும் இக்காலத்துக் கெட்டன போலும். இப் புராணங்களே தமிழைப் பாழாக்கின பெரும் பேறுடையன.

சைவத்தமிழ் என்று, மதத்தை மொழிக்குள் திணித்து அதன் மூலம், மதவாதத்தையும் சனாதனத்தையும் பரப்பவும் பேணவும் முயற்சிகள் நடந்த காலத்தில் அதற்கெதிராக எழுந்தொலித்த கருத்துகளே தி.த. சரவணமுத்துப்பிள்ளையின் தமிழ்ப்பாஷை கட்டுரையின் உள்ளடக்கமாக இருக்கின்றது என்பது இக்காலத்தில் இக்கட்டுரைக்கு இன்னும் முக்கியத்துவத்தைச் சேர்க்கின்றது.

*000*

தமிழ்ப்பாஷை நூலின் பதிப்பாசிரியரும், தி.த. சரவணமுத்துப்பிள்ளை எழுதிய தமிழின் முதலாவது வரலாற்று நாவலான மோகனாங்கியை தேடிக்கண்டு பிடித்துப் பதிப்பித்ததுடன், மோகனாங்கி பற்றி அதுவரை காலம் இருந்து வந்த பிழையான, திரிவுசெய்யப்பட்ட பல அபிப்பிராயங்களையெல்லாம் உடைத்தெறிந்து மோகனாங்கியே தமிழின் முதல் வரலாற்று நாவலென்று எழுதியவரான சற்குணம் சத்யதேவன், தி.த. சரவணமுத்துப்பிள்ளையைப் பற்றி "விடுபடல்களிலிருந்து தவிர்க்கமுடியாமைக்கு" என்று குறிப்பிட்டு ஒரு கட்டுரையை எழுதியிருப்பார். உண்மையில் தி.த. சரவணமுத்துப்பிள்ளைக்கு நேர்ந்தது விடுபடல் என்று நாம் கடந்துபோய்விடக் கூடாது. மதவாதம் பாசிசமாக உருப்பெற்று வருகையில் மதச்சாயம் பலவந்தமாகப் பூசப்பட்டுக்கொண்டிருக்கையில் அதற்கெதிரான உரையாடல்களை முன்வைத்தவர்களது எழுத்துகளையும் சிந்தனைகளையும் பரவலாக்குவது முக்கியமான செயற்பாடாகும். தி.த. சரவணமுத்துப்பிள்ளை விடுபட்டவர் ஆக்கப்பட்டார். நான் தமிழைக் காட்டுமிராண்டி மொழியென்று சொன்னேன் தான், அதனை இன்னின்ன காரணங்களுக்காகச் சொன்னேன் என்று பட்டியலிட்டு அன்றைய சமகால தமிழ் மொழியினதும் தமிழர்களிலும் இருந்த வீழ்ச்சி நிலையையும், பகுத்தறிவுக்குப் புறம்பான அதேநேரம் ஒடுக்குமுறைக் கருத்துகளால் நிறைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்த தமிழரின் வாழ்க்கையையும் இலக்கியங் களையும் விமர்சித்து தமிழர் சுயமரியாதையும் அறிவும் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்று தன் வாழ்நாளெல்லாம் போராடிய பெரியாரைப் பற்றி மதவாதக் கும்பல்கள் அவதூறுகளையும் திரித்தல்களை யும் தொடர்ச்சியாகச் செய்துவருவதையும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் பாரதியை புரட்சிக் கவியென்று போற்றி, அவர் பரிசுப் போட்டிக்கு எழுதிய இரண்டு பாடல்களைச் சுட்டிக்காட்டி பாரதியின் தமிழ்ப் பற்று என்று ஒரு திருவுருவை உருவாக்குகின்ற முயற்சி கள் நடப்பதையும் பார்க்கின்றோம். பாசிஸ்டுகள் வைக் கின்ற அவதூறுகளுக்கு எதிர்வினையாற்றுவதுடன் மட்டும் நம் பணி நின்றுவிடக்கூடாது. சமூகநீதிக் கருத்தியல்களைச் சொன்னவர்களையும் அவர்களது நூல்களையும் எழுத்துகள், சிந்தனைகளையும் தேடி எடுத்து வாசித்து உரையாடிச் செயற்படுவதே அவசியம்.

பிற்குறிப்பு:

தி.த. சரவணமுத்துப்பிள்ளையின் மொழி குறித்த அறிவியல் கருத்துகளை அவரது "தமிழ்ப்பாஷை" என்கிற உரை/கட்டுரையில் பார்த்தோம். அதுபோல அவரது பெண்விடுதலைக் கருத்துகளை அவர் எழுதிய தத்தை விடுதூது, மோகனாங்கி போன்ற படைப்புகளில் பார்க்கலாம்.

பாரதி பற்றிய வாலசா வல்லவன் எழுதிய "திராவிடர் இயக்கப் பார்வையில் பாரதியார்" நூல் பாரதி பற்றிய விமர்சனபூர்வமான பார்வையை வைக்கின்ற முக்கிய நூல்.

***

[1] 2024/25 இல் வெளியான ய. மணிகண்டன் எழுதிய "யார் அந்தப் பேதை" என்கிற நூலில் பாரதி பேதையென்று விளித்திருப்பது நீலகண்ட சாஸ்திரியோ அல்லது பேரா.ஜே.சி.ரோல்லோ எசோவோ அல்ல வென்றும் அது அக்காலத்தில் அங்கு பட்டப்படிப்பு படித்துக்கொண்டிருந்த ஒரு மாணவரை விளித்து பாரதி எழுதியது என்றும் ய. மணிகண்டன் தனது ஆய்வினை முன்வைக்கின்றார்.

# வனஜா நடராசாவின் கவிதைகள்

## கர்ம யோகம்

கடமைகள் முடித்தே
கடவுள் வணக்கம்
கடமையே தெய்வம்
கடமையே வாழ்வு

கடமை ஓர் திறவுகோல்
அன்பின் பண்பின்
பற்றுறுதியின்
திறவுகோல்

கடமை வீரன்
கர்ம வீரன்
கர்ம யோகம்
பரந்தாமனை அடையும் வழி
கடமை பரந்தாமன் வழி
கடமையே கர்மயோகமாக...

கடமையில் கண்ணியம்
கடமையில் துறவு
கடமையில் பற்றின்மை
கடமையே கர்ம யோகம்.

## இரண்டல்ல

பிரமத்தின் அசைவினில்
ஒரு யுகம்
யுகத்தின் புரட்சியில்
உயிரின் பரிணாமம்

உயிரின் பரிணாமஓட்டத்தில்,
கால ஓட்டத்தில்
மனப் பரிமாணம்
மனப் பரிமாணத்திலிருந்து
மன நீக்கப் பரிணாமம்
இவை இரண்டல்ல
ஒன்றே.

## இந்த இரவு

இந்த இரவு
விடியலை நிச்சயப்படுத்தி...
இந்த இரவு
துன்பங்களை கற்றுத் தந்து...
இந்த இரவு
ஆறுதல் தந்து
இந்த இரவு
வாழ்வின் தொடர்ச்சியாகி
இந்த இரவு
நட்சத்திரங்களை தாலாட்டி
இந்த இரவு
என்னையும் தாலாட்டி...

## திருநடனம்

அம்பலத்தரசனே!
ஆடல் பிரானே
இசையின் ஊற்றே
அன்பின் பிறப்பிடமே
சக்தியின் நாதனே!
ஆடு, அம்பலத்தில் நடனம்

சுற்றிச் சுழன்றாடு
சுழன்றாடு சுற்றி சுழன்றாடு
உன்
ஆட்டத்தின் மையத்தில்
உயிர்கள்
அம்பலத்தரசனே ஆடு

கங்கையை தரித்தவனே!
சடா முடியோனே
உலகம் உய்ய என்றே
அம்பலத்தில் ஆடுவாயாக!

ஆடல் நாயகன் நீ
ஆடும் பொருள் நீ
ஆடப் படுபவனும் நீ
மையத்தின் மையம் நீ
இது உன்திருநடனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சுதாகர்

# காலம் என்ற நீட்சியுடன்



சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, தற்செய லாகத்தான் அவரைக் கண்டேன். தன்னந்தனியாக ஒரு மேசையில் அமர்ந்திருந்தார். வழுக்கைத்தலை. வெள்ளை வெளேரென்ற ஆடைக்குள் புதைந்திருக்கும் தளர்ந்த உடல். முகத்தில்கூட சுருக்கங்கள் விழுந்து விட்டன. மூக்குக்கண்ணாடியினூடாக மேசையை உற்றுப் பார்த்தபடி இருந்தார்.

அவரை எங்கேயோ பார்த்திருப்பதாக மனம் சொன்னது.

வர்ணஜால விளக்குகளின்கீழ், வட்ட வட்ட ரேபிள்களில், ஆண்களும் பெண்களுமாக சுற்றிச் சூழ இருந்து உணவருந்தும் அந்த ரம்மியமான காட்சியி லிருந்து அவரது ரேபிள் வேறுபட்டுக் காணப்பட்டது. அவர் ஏன் அப்படித் தனித்துப் போனார்?

'அட தயாளன்! என்ன அவரையே உற்றுப் பார்த்தபடி இருக்கிறாய்? ஆர் எண்டு தெரியுதா?" என்ற படி குணசேகரன் என்னை நோக்கி வந்தான். குணசேகரன் மணப்பெண்ணின் அண்ணன். என்னுடன் பாடசாலை யில் ஒன்றாகப் படித்தவன். அவனுக்காகத்தான் நான் கடல் கடந்து, அவுஸ்திரேலியாவில் இருந்து இங்கே கனடா வந்திருக்கின்றேன்.

'எங்கட இரத்தினசிங்கம் மாஸ்ரடா!"

இரத்தினசிங்கம் மாஸ்டர்!

ஒரு காலத்தில் எப்படிக் கொடிகட்டிப் பறந்த வர்! அந்த ஒரு சம்பவத்தின் பின்னர், எல்லோருக்கும் வேண்டாதவராகிப் போய் விட்டார்.

'பூச்சி இருந்திருந்தானெண்டா - இப்ப எங்களைப் போல - குழந்தை குட்டியளோடை நல்லா இருந்திருப்பான். என்ன குணம்?"

'நடந்து முடிஞ்சதுகளைப் பற்றிக் கதைச்சு இனிப் பிரயோசனம் இல்லை. நீ வடிவாச் சாப்பிடு தயாளன். சாப்பிட்ட பிறகு ஒருக்கா மாஸ்டரோடையும் கதை" மறப்பதும் மன்னிப்பதும் மனிதகுணம் என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டு அடுத்த ரேபிளுக்குத் தாவினான் குணசேகரன். மறப்பதும் மன்னிப்பதும் மனிதகுணம் என்றால், குற்றத்தை யார் சுமப்பது?

•

அப்பொழுது நாங்கள் நாலாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தோம். இரத்தினசிங்கம் மாஸ்டர் பாடசாலையில் மிகவும் பொல்லாதவர். அவர் மூக்குப் பொடி போடும் காட்சி பார்ப்பதற்கு மிகவும் பயமாக இருக்கும். இரண்டு மூக்கின் துவாரங்களையும் அகல விரித்து "ம்" என்று ஒரே இழுவையாக பொடியை உள்ளே இழுப்பார். பன்றியள் மூக்கை விரித்தால் போல் இரண்டு கறுப்பு வட்டங்கள் விரிந்து சுருங்கும்.

இரத்தினசிங்கம் மாஸ்டரின் வாயிலிருந்து நல்ல வார்த்தைகள் வருவது மிகவும் அருமை. அனேகமாக அவரின் எல்லா வகுப்புகளின் போதும் பயந்தபடியே காலத்தைக் கழித்தோம்.

பள்ளிக்கூடத்தின் ஒருபக்க வேலியை மருவிய படி இருக்கும் பாதையில் இருந்துதான் பூச்சி வருவான். அவனும் அவனது நான்கு சகோதரர்களும் வயதுக்கேற்ற உருவங்களில் ஏழ்மையின் அவலம் தெரிய அணிவகுத்து வருவார்கள். சிலவேளைகளில் அவர்களுடன் தந்தை யாரும் சைக்கிளை உருட்டிக் கொண்டு கூட வருவார். சைக்கிள் கரியரில் மண்வெட்டி, புல்லு செதுக்கும் உழவாரம், கடகம் என்பவை ஒய்யாரமாக வீற்றிருக்கும்.

செல்வகுமாரனுக்கு "பூச்சி" என்பது காரணப் பெயர். எந்த நேரமும் சதா புத்தகமும் கையுமாகவே இருப்பான். அதனாலொன்றும் அவன் படிப்பில் படு சுட்டி அல்ல. "லஞ்" இடைவேளையின் போது கூட புத்தகத்துடனே இருப்பான். அல்லாவிட்டால் மேசை மீது குனிந்து படுத்து விடுவான்.

இரத்தினசிங்கம் மாஸ்டர், சிலவேளைகளில் காற்றோட்டம் கருதி தனது படிப்பித்தலை ஒரு மர நிழலின் கீழ் வைத்துக் கொள்ளுவார். மரத்தின் கீழ் ஒரு கதிரையைப் போட்டு ஒரு குறுநில மன்னனாக நடுவில் இருப்பார். சுற்றிச் சூழ மாணவர்கள் ஒரு வட்டப் பாதையில் நிற்க வேண்டும். அவர் தலையில் பறவைகள் எத்தனை தடவைகள் எச்சமிட்டாலும் அவர் அந்த இடத்தை மாற்றமாட்டார். அவருக்கு என்றுமே நிழல். எங்களில் பாதிப்பேருக்கு வெய்யில். மாஸ்டரின் அருகில் நிழல் இருந்தாலும் - அவரின் கொடூரம் உணர்ந்து அந்த வேகாத வெய்யிலில் நிற்பதற்குத்தான் நாங்கள் முண்டி யடிப்போம். அவரின் கற்கை நெறியில் "கேள்வி"களின் வகிபாகம் மூண்டின் கீழ் நாலு. கேள்விகள் அவரை மையம் கொண்டு, கடிகாரத்தின் திசையிலே அல்லது அதற்கு எதிராகவோ கடுகதி வேகத்தில் புறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளைவிட அவரது கையிலிருக்கும் பிரம்பு வீரியம் கொண்டது. சிலவேளைகளில் சரியான விடைகளுக்கும் சரமாரியாக அடி விழுந்திருக்கிறது.

அன்று சித்திர பாடம். கோழி முட்டை, தாரா முட்டை, பல்லி முட்டை, தவளை முட்டை என்று கீறச் சொல்லும் இரத்தினசிங்கம் மாஸ்டர் அன்று வழமைக்கு மாறாக தன்னையே பார்த்துக் கீறச்சொல்லிவிட்டார். சிறிது நேரம் சிவாஜி கணேசன் போல, புன்னகை தவழும் முகத்துடன், ஒரு காலை மற்றதன் மேல் போட்டு கதிரையில் வீற்றிருந்தார். இயற்கை உபாதை எல்லையைக் கடக்கவே மரத்தின் பின்னால் வேட்டியைத் தூக்கிக்கொண்டு ஒதுங்கினார்.

திரும்பி வந்து கதிரையில் அமரும் போது, குணசேகரன் அவரைப் பார்த்துச் சிரிப்பது போல அவருக்குப் பட்டது. ஈரம் பட்ட வேட்டியை ஒரு தடவை குனிந்து பார்த்துவிட்டு, "எங்கை குணசேகரா நீ கீறினதைக் கொண்டுவந்து காட்டு" என்று அவனை நோக்கிப் பிரம்பை நீட்டினார்.

குணசேகரன் கீறிய படத்தில் குரங்கு ஒன்று தன் வாலை ஒரு கையில் தூக்கிப் பிடித்தபடி, மறு கையில் பிரம்புடன் கதிரையில் வீற்றிருக்கும் காட்சி தென்பட்டது.

சிறுத்தை மானைப் பிடிப்பதற்குப் பதுங்கி, பின் துள்ளி எழுந்தது. குணசேகரன் வட்டத்தின் வழியே "இல்லை சேர். நான் கீறேல்லை சேர்" என்று தவளைப் பாய்ச்சலில் ஓடத் தொடங்கினான். மூன்றாவது ரவுண்டிலே ஒரு மாணவனை உழக்கிக்கொண்டு, விட்டத்தின் வழியே பாய்ந்த மாஸ்டர் குணசேகரனை மடக்கிப் பிடித்தார். சற்றே மூச்சை உள்ளே இழுத்துவிட்டுக் கொண்டு கடகடவென்று காலுக்குக் கீழே போட்டுத் தள்ளினார். அவன் "ஐயோ ஐயோ" என்று கத்திக் கொண்டிருக்கும் போது, அவனை அந்தரத்திலே தூக்கினார். "ஐயோ!" சத்தம் பூமிலிருந்து வானுக்குக் கிழம்பியது. மனிசர் இந்தக் கொதிக்கிற வெய்யிலிலை நிக்கவே ஏலாமல் கிடக்கு. அதுக்குள்ளை படத்தையும் கீறச் சொன்னா? பெரிய சிவாஜி கணேசன் எண்ட நினைப்பு..." மனதிற்குள் பொருமினான் குணசேகரன். அவனை அங்கிருந்தபடியே தொப்பென்று கீழே போட்டார் மாஸ்டர்.

"போய் நடுவிலை வெறுங்குண்டியோடை இரு. பாடம் முடியும் வரையும் எழும்பக்கூடாது."

குணசேகரன் காற்சட்டையை மெதுவாக நெகிழ்த்தி சுடுமண்ணில் குந்தினான்.

இவ்வளவு கலாட்டாவும் நடந்து கொண்டிருக்கும் போது, செல்வகுமாரன் மாடு நுரை தள்ளும் கோலத்தில் மூச்சிரைக்க வந்து அங்கே நின்றான்.

"சேர் உள்ளே வரலாமோ?"

மாஸ்டர் அவனைக் கண்டும் காணாதது மாதிரி முகத்தை திருப்பி வைத்துக் கொண்டார்.

"சேர் உள்ளே வரலாமோ?" செல்வகுமாரனின் இடைவிடாத ரீங்காரம் மாஸ்டரின் காதுகளை இம்சை செய்திருக்க வேண்டும். காதுகள் விரிந்து சுருங்கியதில் காது மடலிற்குள் செருகியிருந்த பென்சில் கீழே விழுந்தது.

"உள்ள வந்திட்டு... கேட்கிறார் ஒரு கேள்வி.... போ! போய் அந்த மண் கும்பானுக்குக் கிட்ட வெய்யிலிலை நில்" கர்ச்சித்தார் சிங்கம். செல்வகுமாரன் தலையைக் குனிந்தபடி போய் மண்மேட்டிற்குக் கிட்ட நின்றான். சூரிய ஒளி நேரே அவன் முகத்தில் விழுந்தது. வெப்பம் அதிகமாக அதிகமாக தலை மெல்லச் சுற்றுவது போல இருந்தது அவனுக்கு.

சித்திரம் முடிந்து தமிழ் பாடம் தொடங்கியிருந்தது. புத்தகத்தை மாணவன் ஒருவன் உரக்க வாசிக்க, காது குடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார் மாஸ்டர்.

"ஆ!" என்றொரு மெல்லிய சத்தம். சுற்றுமுற்றும் பார்த்தான் குணசேகரன். மண் திட்டியில் நின்ற செல்வகுமாரனைக் காணவில்லை.

"சேர்! செல்வகுமாரன் விழுந்திட்டான்" கத்திக் கொண்டே காற்சட்டையைத் தூக்கிக் கொண்டு எழும்பினான் குணசேகரன். மண் திடலிற்குப் பின்புறமாக, மண்டை அடிபட விழுந்து கிடந்தான் செல்வகுமாரன். கூரிய கல்லொன்று அவனது தலையைக் குத்திக் கிழித்திருந்தது. மயங்கிப் போன நிலையில் இருந்த அவனைத் தூக்கிக் கொண்டு இரத்தினசிங்கம் மாஸ்டர் ஓஃபீஸ் நோக்கி விரைந்து ஓடினார். அவரது வேட்டி சட்டை எல்லாம் இரத்தமயமாக, செல்வகுமாரனுடைய தலை கவிழ்ந்து தொங்கியது. நாங்கள் செய்வதறியாது திக்கொன்றாய் ஓடினோம்.

அதிபரின் அறையின் முன்னால் வாங்கொன்றில் அவனைக் கிடத்தியிருந்தார்கள்.

"ஆராவது கெதியிலை போய் கந்தசாமியின்ரை காரைப் பிடிச்சுக் கொண்டு வாங்கோ. மேற்குப் புற கோயில் வீதியிலை கந்தசாமி நிற்பான்" அதிபர் சத்தம் போடுகின்றார். பாடசாலைக்கு முன்பாக நிறையப் பேர் கூடிவிட்டார்கள். தியாகராஜா மாஸ்டர் சைக்கிளை எடுத்துக் கொண்டு பாடசாலை வளவை விட்டு வெளியேறுகின்றார். சைக்கிள் பெரலிலை காலை வைச்சுக் கொண்டு கெந்தி ஏறும்போதே தியாகராஜா மாஸ்டர் விழப் பாத்திட்டார்.

"உவர் இனி நத்தை மாதிரி ஊர்ந்து போய் வாறதுக்குள்ளை எல்லாம் முடிஞ்சிடும்."

பத்தாம் வகுப்புப் படிக்கும் யோகன் அதிபருடன் கதைத்துவிட்டு, சைக்கிளை எடுத்துக் கொண்டு தியாகராஜா மாஸ்டரையும் உன்னிக் கொண்டு விண்ணெண்று பறக்கின்றான். மறுபுறத்திலிருந்து கந்தசாமியின் கார் வந்தது. யாரோ தகவல் குடுத்திருந்தார்கள். கந்தசாமி, காரின் பின்புறம் திறந்து துணிகளை எடுத்துவந்து சீற்றினில் பரப்பினான். இரத்தினசிங்கம் மாஸ்டர் கந்தசாமியின் உதவியுடன் செல்வகுமாரனைத் தூக்கிக் கொண்டு காரின் பின்புறம் ஏறினார். அதிபர் யாருடனோ தொலைபேசியில் கதைத்துவிட்டு காரின் முன்புறமாக ஏறிக்கொண்டார். கார் வைத்தியசாலை நோக்கிப் பறந்தது.

அதன்பிறகு செல்வகுமாரனின் தந்தையும் தாயும் தலையிலடித்துக் குழறியபடி பாடசாலைக்கு வந்தார்கள். அவர்களின் மற்றப்பிள்ளைகளும் பெற்றவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். பாடசாலை வளவிற்குள் நெடு நேரமாக ஆக்கள் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

எங்கள் எல்லாரையும் வகுப்பறைக்குள் போய் இருக்கும்படி உப அதிபர் சொன்னார். அதன் பிறகு எங்களுக்குப் படிப்பு நடக்கவில்லை.

மதியம் கழிந்த நிலையில் - அதிபர் ஹொஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டலில் இருந்து பாடசாலைக்குத் தொலைபேசி எடுத்தார். பூச்சி இறந்து போய் விட்டதாக தகவல் சொன்னார். காரில் போகும் போது இடைவழியில் கண் முழித்து ஒரு தடவை "அம்மா" என்று கூப்பிட்டதாகவும், ஹொஸ்பிட்டல் போய் சேர்வதற்குள் இரத்தினசிங்கம் மாஸ்டரின் மடியில் அவன் இறந்து போய் விட்டதாகவும் பேசிக் கொண்டார்கள்.

•

இரத்தினசிங்கம் மாஸ்டருக்குப் பக்கத்தில் போய் நின்றேன்.

"சேர்! என்னைத் தெரியுதா சேர்"

"தம்பியை மட்டுக் கட்டேலாமல் கிடக்கு."

"என்ரை பெயர் தயாளன். உங்களிட்டைப் படிச்சனான்."

"நல்லது. என்ரை கண் பார்வையும் இப்ப மங்கிப் போச்சு. எந்த ஆண்டு மட்டிலை என்னட்டைப் படிச்சிருப்பீர்?"

"சேருக்குப் பூச்சியை நினைவிருக்கா? சேல்வ குமாரன் எண்டு பெயர். சின்ன வயசிலேயே தவறிப் போனான்."

மாஸ்டரின் முகம் சுருங்கிப் போனது.

"அதடா தம்பி என்ரை வாழ்க்கையிலை நடந்த ஒரு கெட்ட கனவு. அப்படியே மனசில ஆழமாப் பதிஞ்சு கிடக்கு. ஒரு மாறாத வடுப் போல. உம்முடைய பெயர் என்ன சொன்னனீர்? தயாளனோ? இப்படி ஒருக்காக் கொஞ்சம் திரும்பும் பார்ப்போம்."

நான் அவரை நோக்கித் திரும்பினேன். உற்றுப் பார்த்தார்.

"உம். இப்ப தெரியுது" பெருமூச்சு விட்டார் மாஸ்டர்.

இப்பொழுது எப்படி என்னை அடையாளம் கண்டு கொண்டார். எனக்கு வியப்பாக இருந்தது.

"மண்ணிலை பிறக்கேக்கை எல்லாக் குழந்தைகளும் நல்ல குழந்தைகளாகத்தான் பிறக்கினம் எண்டு சொல்லுவினம். எனக்கு அதிலை நம்பிக்கை இல்லை. ஒரு சிலர் குறைகளோடையும் வந்து பிறந்து விடுகிறார்கள். நான் அடங்காத கோபத்தோடை வந்து பிறந்து விட்டேன். என்னுடைய குடும்பத்திலை என்னைப் போல இப்படியான குணத்தோடை ஒருத்தரும் இல்லையெண்டுதான் சொல்லுகினம். அம்மா கூடச் சொல்லுவா - இந்தச் சண்டாளனைப் போல ஒருத்தரும் எங்கடை பரம்பரையிலை இல்லையெண்டு. ஆனாத் தம்பி, எங்கையோ ஒரு அடி ஆழத்திலை - எங்கட பரம்பரையிலை - என்னைப் போல ஒரு ஆள் இருந்திருக்க வேணும். அது பரம்பரை அலகுகளுக்கூடாக என்னை வந்து சேர்ந்திருக்க வேணும்.

இப்ப உம்மையே எடுத்துக் கொள்ளுவம். உம்முடைய காதைப் போல - சுளகுக் காதோடை ஆராவது உம்முடைய குடும்பத்திலை இருக்கினமா?"

பிள்ளையார் காது, சுளகுக்காது! இதை வைத்துத்தானா அவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார்.

"சேர் என்னுடைய அம்மா சொல்லுறவா, என்னுடைய அம்மம்மாவின் தம்பி ஒருவருக்கும் இப்படிக் காது இருந்ததாம்."

"பார்த்தீரா தம்பி! மனிதனுடைய உடற்கலங்களிலை இருக்கிற நிறமூர்த்தங்களிலை உள்ள பரம்பரை அலகுகள் செய்யிற வேலையை. எப்பவோ ஒருக்கா அது தன்னுடைய வேலையைக் காட்டிப் போடுது. உடலிலை ஏற்படுகிற இந்தக்குறைபாடு ஒருவருடைய வாழ் நாளிலை மாற்றமடைகிறதில்லை. ஆனா உள்ளத்திலை ஏற்படுகிறது சிலருக்கு காலத்தோடை குறைஞ்சு போய் மறைந்து விடுகிறது" மாஸ்டர் சலித்துக் கொண்டார்.

என்னுடைய நண்பர்கள் - மாஸ்டரிடம் படித்தவர்கள் ஒவ்வொருவராக வந்து என் பின்னே வட்டமடிக்கின்றார்கள்.

"தம்பி தயாளன், என்ரை கழுத்திலை இருக்கிறதை ஒருக்கா தடவிப் பாரும்" சிரித்தபடியே கழுத்தை என் முன்னே நீட்டினார்.

அவருடைய கழுத்திலே ஒரு உருண்டை திரண்டு, பந்து போல அங்கும் இங்கும் உருண்டு ஓடியது.

"சேர் இதை ஒப்பரேஷன் செய்யலாமே!"

"செய்யலாம்தான். ஒப்பரேஷன் செய்தால் செத்துப் போவன். இந்த வயதிலேயே சாகிறதுக்குப் பயப்பிடுகிற எனக்கு, ஒரு பையனைக் கொல்லுறதுக்கு மனம் வருமா? பிள்ளையள் ஒழுங்காகப் படிக்கவேணும் எண்டதுக்காகத்தான் வாத்திமார் அடிக்கிறவை, கோபம் கொள்ளுறவை. என்ரை இரண்டு பிள்ளையளுக்கும்கூட படிப்பிலை கவனம் செலுத்தாத வேளையிலை அடி போட்டிருக்கிறன். என்ன கொஞ்சம் கண் மண் தெரியாமல் அடிச்சுப் போடுவன்.

என்னவோ விதித்தபடிதான் எல்லாம் நடக்கும். அந்தப் பையனின் பெற்றோர் சகோதரர் நண்பர்களுக்கு இருக்கும் வலி என்னவென்று புரிகிறது. இந்தக் கோபத்தை அடக்கிறதுக்கு நான் நேராத கோயில் இல்லை, செய்யாத வைத்தியமில்லை. யோகா கூட செய்து பாத்தனான். குறைந்ததேயொழிய முற்று முழுதாக என்னை விட்டுப் போகவில்லை. கோபம், வெறி எல்லாம் காலம் என்ற நீட்சியுடன் மூப்பை நோக்கி நகர பரிணாமமடைந்து முற்று முழுதாக மறைந்து விடுகிறது. இப்ப எனக்கு எதுவுமே இல்லை. ஆனா அண்டைக்கு நடந்ததின்ரை வலி இப்பவும் என்னுக்குள்ளை இருக்கு."

"சேர் உங்கடை கழுத்திலை இருக்கிற அந்தக் கட்டி எப்பிடி வந்தது சேர்?" பின்னாலே நின்ற குணசேகரன் கேட்டான்.

"நல்ல கேள்வி. சொல்லுறன். செல்வகுமாரன் இறந்து ஒரு கிழமை இருக்கும். நான் தெருவாலை போய்க் கொண்டிருந்தன். பனை வடலியொன்றைக் கடந்து போகேக்கை சரமாரியா கல் எறி விழுந்தது. அதாலை வந்த காயம் இது. என்னுடைய கோபம் குறையக் குறைய இது பெருத்துக் கொண்டே போகிறது" இரத்தினசிங்கம் மாஸ்டர் புன்முறுவல் செய்கின்றார்.

எனது நா தழுதழுக்கிறது. ஓவென்று அழுது விடுவேனோ என்று பயமாக இருக்கிறது.

"சேர்! சேர்!!"

"சொல்லும். சொல்லும் தம்பி தயாளன்."

"அந்தக் கல்லை எறிந்தது நான்தான் சேர்!"

"எனக்கும் தெரியும்!" என்றார் மாஸ்டர் - ஒரு குழந்தையைப் போல.

மின்னல் பாய்ச்சியது போல, இதுவரை இல்லாத வலி ஒன்று இப்பொழுது எனக்குள் எழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பும் விமரிசனமும் அரசியலும்

எதிரிவீர சரத்சந்திர
மொழியாக்கம் : எஸ்.எம்.ஜே.பைஸ்தீன்

பொதுமக்களின் போராட்டத்துக்கு கலைஞர்களிடமிருந்து கிடைத்துள்ள ஒத்துழைப்பும் போதாது என்ற ஓர் உணர்வு தோன்றி இருக்கிறது. நாம் இது நியாயமானதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒரு கலைஞர் இவ்வாறான ஒரு குற்றச்சாட்டுக்கு ஆளாவது பெரும்பாலும் கலைஞர்களிடையே போட்டியினாலும், பொறாமையினாலுமே என்று எனக்குத் தோன்றுகிறது. "இன்னார் பொதுமக்களின் எழுத்தாளர் அல்ல" "இன்னார் பொதுமக்களின் கலைஞர் அல்ல" என்று ஒருவருக்கு முத்திரை குத்தி அச்சுறுத்த எத்தனிக்கப்படுவதை நாம் காண்கிறோம். ஒருவரது சேவையைப் பரந்த அடிப்படையில் மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக இவ்வாறு முத்திரை பொறித்தல் அவரை அச்சுறுத்தக் கையாளும் ஓர் உபாயமேயாகும்.

"இவர் பொதுமக்களின் எழுத்தாளர் அல்ல" என்று சிங்கள மொழியில் எழுதும் எந்த எழுத்தாளரைச் சுட்டிக் காட்டி மனப்பூர்வமாகக் கூற முடியும்? அவர் சிங்கள மக்களின் பொருட்டு எழுதுகிறார் என்றால் அவரது நூல்களில் மானுட நேசம் பொதிந்திருக்குமேயானால் அது போதாதா?

அநேக சந்தர்ப்பங்களில் ஒரு சிருஷ்டியை அதன் ஏனைய சிறப்பியல்புகளைக் கவனிக்காமல், அரசியல் அம்சத்தை மட்டும் நோக்கி விமரிசிக்கும் வழக்கம் எமது விமர்சகர்களிடையே நிலவுகிறது. நவகத்தேகமவின் "சுப சக யச" என்ற நாடகத்தின் சிறப்பை ஆராயாமல், அதைப் பிற்போக்குத்தன்மையதாகக் கண்டு நிர்த்தாட்சாண்யமான விமரிசனத்துக்கு உட்படுத்தினர். ஒரு குறித்த அரசியல் கட்சி வெளியிடும் ஒரு பத்திரிகை இந்நாடகவாசிரியரை நியாயமற்றவாறு தனிப்பட்ட வகையில் இழிவு படுத்தியிருந்தமை எனக்கு நினைவிருக்கிறது. இவ்விமரிசகருக்குத் தாம் வரிந்து கொண்ட அரசியற் கோட்பாட்டினால் அந்நாடகத்தின் சிறப்பில்புகள் கண்ணுக்குப் புலப்படாமற் போயின. அவ் விமரிசனம் ஒரு பெருந் தனிப்பட்ட குரோதத்தின் பேரில் எழுதப்பட்டதென்பது தெளிவாக விளங்கியது. நாடக ஆசிரியர் தமது படைப்பில் "புரட்சியைக் காட்டிக் கொடுத்து விட்டார்" என்று அவ்விமரிசகர் கூறினார். இது மிகவும் முதிர்ச்சியுறாத ஒரு விமரிசனமென்றும், நாடகத்தின் சுவையை ரசிக்கும் ஆற்றலற்ற ஒருவர் அதற்கு வழிவழியாக வந்த ஒரு முத்திரையை ஒட்டச் செய்த முயற்சியென்றும் எனக்குத்" தோன்றியது.

இந்நாடகத்தின் கடைசிப் பாதியில் யசவிடம் தயாள சிந்தனை தோன்றி செய்ந்நன்றியை மதிக்கும் பண்பு மேலெழுந்து அவனது உறுதியைப் பலவீனப் படுத்துகிறது நான் அச்சந்தர்ப்பத்தை ஆசிரியர் வாழ்வின் ஆழத்திலேயே மூழ்கி எழுந்த ஒன்றாகக் கண்டேன்.

நாடகத்திலேயே ஆழமிக்க ஒரே பகுதி அது தான். அது புரட்சியைக் காட்டிக் கொடுப்பதோ, "திரிபு வாதத்தை முன்வைப்பதோ" ஆகும் என்ற வகையில் காண்பது எவ்வளவு குறுகிய நோக்குடையது; எவ்வளவு குழந்தைத்தனமானது!

இவ்வளவு காலமாக இலங்கையில் பரவிய இடது சாரி இயக்கத்துக்குக் கலைஞர்களது பேராதரவைத் திரட்டிக் கொள்ள முடியாமற் போனதேன் என்று நீங்கள் கேட்கலாம். நான் மேலே கூறியது ஒரு காரணம். படைப் பாற்றல் மிக்க எழுத்தாளர்களை இடதுசாரிக்கட்சி இவ்வாறு அச்சுறுத்தும் போது அவர்கள் மென்மேலும் வெறுப்படைவதில் வியப்புண்டா? எழுத்தாளர்களுக்கு அரசியலில் வெறுப்பேற்படமாட்டாதா?

ஒருவராவது ஓர் அபூர்வமான படைப்பு என்பதனை அவர் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். அதைப் பாரம்பரியமான சித்தாந்தங்களால் மதிப்பிட முடியாதிருக்கலாம். அதற்கு கையாளப்பட்ட உத்திகள் அவருக்குப் பரிச்சயமற்றிருக்கலாம். அதன் கருப்பொருள் உட்பொதிந்து இருக்கலாம். எனினும் அரசியற்கட்சி கலைஞர்களை எழுத்தாளர்களைத்தம்பாற் பிணித்துக் கொள்ளவும் அவ்வாறு பிணித்துக் கொண்டபின் தத்தமது அரசியற் கோட்பாடுகளை அவர்களின் மூலம் பிரச்சாரம் செய்யவும் முயற்சிக்கிறது. இதனால் கலைஞர்கள் தாம் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றோமோ என்று ஐயுறுகின்றனர். அவர்கள் இதைத் தமது சுதந்திரத்துக்கு விடுக்கப்படும் ஒரு சவாலாகக் கருதலாம். பொதுவாகக் கவனித்து பார்க்கப்பட வேண்டியது அக்கலைஞரது நூல்களில் மானுட நேசக் கோட்பாடு வெளிப்படுகிறதா என்பதோகும். அத்தகைய ஒரு கோட்பாடு அதிற் தோற்றி னால் அது போதாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மூலமாகவே கலைஞர் பொதுமக்களின் கலைஞராகிவிட முடியாதா?

சமூகத்தில் யாதுமொரு பிரிவிடமிருந்தேனும் பாராட்டைப் பெற விரும்பும் கலைஞர் சிலவேளைகளில் இடதுசாரிகட்சியினால் அங்கீகரிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கும் ஒரு வாய்ப்பாட்டுக்கு அமைய எழுத முயற்சிப்பதுண்டு. அவர் தம்மிடம் மெய்யாகவே இல்லாத ஓர் அரசியற் பக்தியை வெளிக்காட்டிக் கொள்ள முயல்வார். "நான் இப்போது எழுத வேண்டியது சோஷலிஸ ரியலிசம்" என எண்ணிக் கொண்டு அவர் கதை புனைவார். எனினும் அவர் பண்ணுவது பாசாங்கென்பது பொதுமக்களுக்கு விளங்கும். அவரது படைப்பின் போலித்தன்மை தெளிவாகப் புரியும். இத்தகைய செயற்கையான முயற்சிகளால் யாரும் ஒரு சமூகவுடமை அல்லது முற்போக்கு எழுத்தாளராகிவிட முடியாது.

இப்போது சில எழுத்தாளர் பொது மக்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு கதை புனைகின்றனர். இக்கதைகள் பெரும்பாலும் "சமூக யதார்த்த வாதத்தை அன்றி "அற்புதத்தன்மை"யையே பிரதிபலிக்கின்றன. ஏனெனில் அவ்வெழுத்தாளர்களுக்குப் பொது மக்களின் வாழ்க்கையைப்பற்றி நேரான அனுபவங் கிடையாது. கதாசிரியர்கள் அரசியற் சித்தாந்தங்களைப் புலப்படுத்த முயற்சிக்காமல் தாம் அறிந்த வாழ்க்கை முறைகளைப்பற்றிப்பயமின்றி எழுத வேண்டும்.

முற்போக்கு எழுத்தாளர்கள் பொதுமக்களது வாழ்க்கையைப் பற்றி மட்டுமே எழுத வேண்டும் என்ற ஒரு நம்பிக்கை எமது நாட்டில் நிலவுகிறது. இதனாலேயே மத்தியதர வகுப்பை சேர்ந்த சில எழுத்தாளர் தமக்குத் தெரியாத தொழிலாள வர்க்கத்தினரது வாழ்வைப் பற்றி எழுத முயல்கின்றனர். முக்கியத்துவம் பெறுவது எழுத்தாளர் தாம் தெரிவு செய்யும் கருப்பொருள் அல்ல. அவர் அக்கருப்பொருளைப் பண்படுத்தித் திறமையான முறையில் முன்வைக்கும் கருத்தே முக்கியமாகும். முதலாளி வர்க்கத்தினரின் அல்லது மேலும் மத்திய வர்க்கத்தினரின் வாழ்வின் சூனியத்தன்மையைச் சித்திரித்தால் அது முற்போக்கு ஆகமாட்டாதா? அவ்வாறு எழுதும் ஓர் எழுத்தாளருக்கும் "பொதுமக்களின் எழுத்தாளர்" என்ற பெயர் பொருத்தமற்றதா? ஒரு கலப் படைப்பில் உருவமும் உள்ளடக்கமும் என இருவேறு பண்புகள் கிடையா. எவ்வகையாலும் அவ்வாறு வேறுபடுத்த முடியாது. ஒரு சிற்நத கலைப்படைப்பில் உருவம் உள்ளடக்கமும் பிரித்துக் காண முடியாதவாறு பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். "அரசியல் விமர்சர்கள்" "உள்ளடக்கம்" என்ற ஒன்றைத்தோற்றுவித்துக் காட்ட முயற்சிக்கின்றனர். ஒரு கலைப்படைப்பினின்று சுவையுணர்வைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு முடியாமலிருப்பதே இதற்குக் காரணமாகும். ஒரு கலைப் படைப்பின் பொருள் அதாவது கலைஞரது அபிப்பிராயம் சுவையுணர்வுடன் இணைந்து செல்ல வேண்டும். அரசியல் விமர்சகர்களிடமிருந்து எமது கலைஞர் களையும், கலையையும் மீட்போமாக என நான் பிரார்த்திக்கிறேன்.

நன்றி : மாவத்த
இலக்கம் -18
(1981 ஏப்ரல் - ஜீன்)

## ஓர் ஒப்பந்தம்

வோல்ட் விட்மன், நான்.
உம்முடன் ஓர் ஒப்பந்தம்
செய்து கொள்கிறேன்முடிந்தளவு
சோதித்து விட்டேன்
போதும்

மிருகத் தலை கொண்ட
தந்தையின் மகளாய்
வளர்ந்த குழந்தையாய்
நான் உன்னிடம் வருகிறேன்.

இப்பொழுது என் நண்பர்களை
தேடிச் செல்ல வேண்டிய
தருணம் இது
நீ புது மரத்தடியை
கொண்டுவரவில்லையா?
நீதான்

இப்போது செயல்பட
வேண்டிய நேரம் இது



ஒரு தண்டு மற்றும் வேர்
இப்பொழுது நம்மிடம்
உள்ளதை பகிர்ந்து கொள்ளத்
தொடங்குவோம்

எஸ்ரா பவுண்ட்
அமெரிக்க கிளாசிக் பூதிய கவிஞர்
ஒரு சிறந்த மொழி பெயர்ப்பாளர்.

சிங்கள மொழி மூலம்-பராக்கிரம கொடித்துவக்கு
தமிழில் மாவனல்லை எம்.எம் மன்ஸூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.புஷ்பா

# இது முறையோ? தகுமோ?

அந்த விடுதியின் பக்கவாட்டில் போடப்பட்ட சீமேந்துத் தரையினூடாக நடையில் கருத்தூன்றி நடந்து சென்று விடுதித் தொங்கலில் தரித்து நின்று திரும்பிப் பூந்தோட்டத்தைப் பார்வையிடுகிறாள் பங்கயா. அழகாகப் பூத்துக் குலங்கியபூங்செடிகள் ஒவ்வொன்றும் ஒருவிதம். வீசிய மெல்லிய காற்றில் சற்றே அசைந்த சைந்து நளினம் காட்டி அழகுக்கு அழகூட்டுகின்றன.

தூரத்தே வெண் குவியலாக வளர்ந்து உயர்ந்து நின்ற நித்திய கல்யாணி மரத்தின் மீது பார்வை தரித்து நின்றதும் பங்கயாவின் மனதில் வீட்டுச் சிந்தனை வந்தது. இந்த நேரம் எங்களுடைய வீட்டில் எல்லா பூக்களும் ஒன்றும் விடாமல் ஆய்ந்திருப்பார்கள். மரம் வெறுமை யாக இருக்கிறது என்றால் இதுவும் ஒரு தானந்தானே என்று அம்மா சொல்லுவா. வீட்டுச் சிந்தனை வந்ததும் பங்கயாவின் மனதில் ஒரு நெருடல். ஆனால் சிந்தனை தொடராமல் முறித்துக் கொண்டு விரைவாக அறைக்குச் சென்று தனது "கான் பாக்கை" எடுத்துக் கொண்டு, பாடசாலைக்குள்ளே நுழைகிறாள்.

பங்கயாவின் தந்தைதான் சிவசம்பு ஆசிரியர். சமய ஒழுக்க விழுமிங்களைக் கடைப்பிடித்துப் பேச்சில் கனிவும், அதேநேரம் கண்டிப்புமிக்கவராகவும் விளங் கினார். ஓய்வுக்கு முன்னரும் பின்னரும் முயற்சியாளனா கவே இருந்து தனது பெண்பிள்ளைகளைக் கரைசேர்க்க வேண்டும் என்று உழைத்து வருபவர். மனைவி சுந்தரியும் ஒத்தாசையாக இருந்து வந்தார்.

கடைசிப்பிள்ளை பங்கயா வேலைக்காகக் காத்திருப்பவள். அவளை நினைக்கும்போதுதான் சிவ சம்பாசிரியருக்கு யோசனை. துடுக்குத்தனம். "மாறுகின்ற உலகத்திற்கேற்ப மாற வேண்டும்" என்று விரும்புபவள். "ஆனால் எதற்கு மாற வேண்டும் என்ற சிந்தனை யில்லாதவள்" எனக் கூறுவார்.

பங்கயா தன் தோழிமூலம் "தனியார் பாடசாலை ஒன்றில் தமிழ் படிப்பிக்க இடம் இருக்கு" என்று சொன்ன போது, தகப்பனிடம் வந்து விசயத்தைக் கூறித் தான் போக விரும்புவதாகக் கூறுகிறாள். அதற்குத் தகப்பன் "இப்பதானே யூனிவேர்சிற்றியால வந்தனி. என்ன? அவசரம். ஆறி, ஆறிப் பார்க்கலாம். வீட்டோட இருக்கிற தோட்டத்தில என்னோட இருந்து உதவி செய்தால் உழைக்கலாம் எவ்வளவு? நீ மோட்டச் சைக்கிள் வாங்க வேணும் என்று துடிக்கிறாய். அக்காக்கள் பஸ்ஸிலதான் போய் வருகினம். யோசியம்மா" என்கிறார். பங்கயா எதிர்த்துப் பேசவில்லை. "திரும்பி நடந்த நடையில் அவவின்ரை கோவம் தெரிஞ்சுது" என்று மனைவிக்குக் கூறி ஆறுதல் அடைந்தார்.

பங்கயா, தான் விரும்பியதைப்பெற வேண்டும் என்ற நோக்கோடு தாய், சகோதரிகளின் உதவியோடு சிவசம்பாசிரியரைச் சம்மதிக்க வைத்து விட்டாள். இரண்டாவது மகள் கஜீனா வந்து, அப்பா, எனப் பணிவாக அழைத்து "பங்கயா படிப்பிக்கத்தானே விரும்பிறாள். ஓம் என்று சொல்லுங்கோ அப்பா. நாங்கள் உதவி செய்கிறோம்" எனக்கூறிச் சம்மதிக்க வைத்துப் பங்கயா நியமனமும் பெற்று விட்டாள்.

பங்கயாவிடம் அதீத உற்சாகம். நேரத்துடன் எழும்புவது. விதம்விதமான சாறிகள் கட்டுவது. நேரத் துடன் பாடசாலைக்குச் செல்வது. பார்க்கும் போது பெற்றோருக்குச் சந்தோசமாக இருந்தது. ஆனால் சைக்கிளில் திரும்பிக் களைத்து விழுந்து வருவதைப் பார்த்தால், பாவமாக இருக்கும் என்று அவர்கள் தமக்குள் கதைத்துக் கொள்வார்கள்.

மாலை நேரத்தில் முன் விறாந்தையில் சிவ சம்பாசிரியர், வெட்டிய வெற்றிலைக் கொடிகளைக் கொண்டு வந்து துப்புரவாக்கும் போது, தாயும் பிள்ளை களும் சேர்ந்து உதவி செய்வார்கள். பெரிசு, சிறிசு, நடுத் தரம் என்று பிரித்து எண்ணிக் கட்டும்போது "கிழிந்த இலைகளை உள்ளுக்கு வைத்துக் கட்டக்கூடாது. நாள் வேலைகள், கோவிலுக்கு என்று வாங்கிக் கொண்டு போகிறவையள் எங்களக் குறைசொல்லக்கூடாது" என்று கண்டிப்பாகக் கூறுவார். சரியென்று சொல்லுவார்கள் பிள்ளைகள்.

ஐந்தாறு மாதம் கழியப் பங்கயா தகப்பனைத் தேடி தோட்டத்திற்கு வருகிறாள். அவர், வாழைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களை முறித்துக் கயர் வடிய விட்டுக் கொண்டிருந்தார். பங்கயா, இருந்த துணியை எடுத்துக் கயரைப் போக்கி வாழைப்பூக்களைத் துடைத்துக் கடகத்துள் அடுக்குகிறாள். சிவசம்பர் இதைப் பார்த்துவிட்டு "ஏதோ காரியமாகத்தான் வந்திருக்கிறாள் பிள்ளை" எனத் தனக்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டார். வேலை முடியிற நேரம். "அப்பா", என்றழைத்து "எங்கட ஸ்கூல்ல கொஸ்ரலில இரவுக்குப் பொறுப்பாக இருக்கிற மிஸ்ஸின்ர தாய்க்குச் சுகமில்லை என்னை ஒருமாதம் நிக்கச்சொன்னவ. நான், ஓமெண்டு விட்டன். நீங்கள் ஓமெண்டு சொல்லுங்கோ அப்பா" என்கிறாள். "ஓம் எண்டு சொல்லிப்போட்டுவந்து என்னை ஓமெண்டு சொல்லச் சொல்கிறாய் என்ன?" குரலில் கோபம் வெளிப்படுகிறது. "அப்பா, மனிதாபிமானம் என்னை உடனே ஓம் எண்டு சொல்ல வைத்துவிட்டுது. நீங்கள் தானே ஆபத்து நேரம் செய்கிற உதவி எங்களுக்குத் திரும்பி வரும் என்று சொல்லுவியள்" என்கிறாள்.

"சரி பிள்ளை, உதுக்கெல்லாம் அனுபவம் வேணும். நீயோ நித்திரைக்காரி. நீ நித்திரை கொள்ள அதுகள் உன்னைச் சுத்திப்போடுங்கள். கவனம் ஒரு மாதம் தானே என்று விடுறன். எதற்கும் பட்டறிவு வந்தால் தான் புரியும்" எனக்கூறி "இதைப்பிடி" என்று கூறி, இரண்டு பேருமாக வாழைப்பூக் கடகத்தைத் தூக்கிக்கொண்டு வீட்டு முற்றத்துக்கு வருகிறார்கள். வைத்ததும் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடுகிறாள். சகோதரிகளிடம் செய்தி சொல்ல.

வகுப்பறைக் கற்பித்தலில் எவ்வளவு அக்கறை கடமை உணர்வு இருந்ததோ அதைப்போலபே இரவு நேரப் பொறுப்பையும் பார்த்துக் கொண்டாள். ஸ்கூலால் வந்து திரும்பி ஐந்து மணிக்குப் போகும்போது தாய் சாப்பாடு கொடுத்து விடுவா. காலையில் கன்ரீனில் பார்த்துக் கொள்ளுவாள்.

விடுதிப் பிள்ளைகள் உரிய ரேநத்தக்கு எழும்புவதால், வழமையான குறிக்கப்பட்ட கடமை ஒழுங்குகள் சரியாக இருப்பதைக் கவனித்தல் மட்டுமல்ல, இரவு நேரம் படிப்பகத்தில் தானும் இருந்து சுயகற்றலுக்கு வழி செய்தல் விளக்கம் கேட்டால்" உதவுதல் எனத் தன் கடமையைச் செய்து வந்தாள். பதினைந்து பிள்ளைகள் மாத்திரமே. ஹோலுக்குள் எல்லாக் கட்டில்களும் போடப்பட்டிருக்கும் பங்கயாவும் அங்கேயே ஒரு கட்டிலைப் பாவித்தாள். உரிய நேரத்துக்கு நித்திரை கொள்வார்கள். யாருக்கும் தும்மல், இருமல் என வந்தாலும் உடன் விழித்து ரோச்சுடன் உரிய கட்டிலடிக்குச் சென்று விசாரித்துத்" தேவையானவற்றைக் கொடுத்துத் தான் வந்து படுப்பாள்.

மாதம் ஒன்று கடந்து விட்டது. உதவி கேட்ட கமலா மிஸ் வந்து சேரவில்லை. சிவசம்பாசிரியரும் கவனிக்காதது மாதிரி இருக்கிறார். பிள்ளைகளில் சிலர் அந்நியோன்யமாகப் பழகுவார்கள். சிலர் தாங்களும் தங்கள் பாடும் என்றிருப்பார்கள். எப்படியென்றாலும் கவலை, அல்ல. பங்கயா சில பிள்ளைகள் தாங்கள் கொஸ்ரலுக்கு வந்து சேர்ந்தற்கான காரணத்தைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் குடும்ப விடயங்களைத் தேவையின்றி அறியப் பங்கயா விரும்பவில்லை. பிள்ளைகளைப் புரிந்துணர்வுடன் கவனித்து ஆதரவாக நடந்த கொண்டாள்.

பதினைந்து பிள்ளைகளில் சில பிள்ளைகளின் பெற்றோர் சனி, ஞாயிறு தினங்களில் வந்து சந்திப்பதாகப் பகலுக்குப் பொறுப்பான மாலினி மிஸ் சொல்லுறவ. இவர்களில் ஒரு பிள்ளை மாத்திரம் ஒவ்வொரு வெள்ளியும் போய் திங்கள் காலையில் வருவது வழக்கம். இதை அவதானித்த பங்கயா, "பெமிசன் எடுத்துத்தானே போகுது. எனக்கென்ன?" என்று விடவும் விருப்பம் இல்லை. "ஏனம்மா சர்மிளா வீட்டில் யாருக்கேனும் சுகம் இல்லையோ? ஒவ்வொரு கிழமையும் போய்வாறீர்." "இல்லை மிஸ். அப்பா சனி, ஞாயிறு லீவில் வாறவர். அது தான் பெமிசன் எடுத்துக் கூட்டிக் கொண்டு போறவர்" நல்லது எனக்கூறிப் பங்கயா விபரம் அறிவதை நிறுத்திக் கொள்கிறார்.

வீட்டில், அப்பா சகோதரிகள் கவனம் எனக்கூறி வார்த்தைகள் பங்கயாவை விழிப்புடன் வேலை செய்யத் தூண்டியது. "இரண்டு மாதங்கள் முடியப்போகுது. மிஸ்சும் வரேல்ல. இங்க சர்மிளா கொஞ்சம் உற்சாகம் குறைந்த பிள்ளை. மாதிரி இருக்கு. முதல்ல பார்த்த மாதிரி இல்லை. இரவு நேரம் பிள்ளைகளுக்கு நேர் நொடி வந்து துன்பப்படக்கூடாது" என வேண்டினாள். தொடரந்து அவளது ஊற்சாகம் குறைவதாகவே பங்காயவுக்கு பட்டது. பங்கயாவுக்குள் சந்தேகம் நுழைந்து துருவுகிறது. "அப்பா கவனம் எனக் அறிவுறுத்தியமை என்னைப் பதட்டப்பட வைத்து வேற எண்ணங்களைக் கொண்டு வருகுதோ?" எனச் சிந்தித்தாள். அந்தக் கணத்தில் தான் பங்கயாவுக்கு தான் விடுதிக்கு வந்த தொடக்கத்தில் சர்மிளா சொன்ன விடயம் ஞாபகத்துக்கு வந்தது. அப்பாவும் அம்மாவும் கதைப்பதில்லை. தம்பி அம்மாவோட, நான் அப்பாவோட. ஆனால் ஒரே வீட்டில்தான் இருக்கிறது என்று கூறியது நினைவுக்கு வந்தது. குடும்ப விவகாரம் பிள்ளைகளை வாட்டுந்தானே. பெண்பிள்ளை அப்பாவுடன் இருப்பது எனக்குச் சந்தேகத்தைத் தருகுதோ?" எனத் தன்னையோ கேட்டுக் கொண்டாள். "இல்லை யோசிக்க வைக்குது" என்று தனக்குள் புதிலும் சொல்லிக் கொண்டாள். பங்கயா, சர்மிளாவில் கூடக் கவனம் எடுத்தாள். ஆனால் கதை கொடுத்துப் பிள்ளையைத் துன்பப்படுத்த விருப்பமில்லை. ஒன்பதாம் ஆண்டுப் பிள்ளை. ஆனால் பதினோராம் ஆண்டுப் பிள்ளை போல நல்ல வளர்த்தி செல்லக்கதை. நளினமான நடை.

காலையில் எழுந்து அவரவரும் தங்கள் கடமைகளைச் செய்யப் பிள்ளைகள் ஆயத்தமாகி விட்டார்கள். பங்கயாவும் குளித்து, கடவுளைத் தனக்குள் தியானித்துக் கொண்டு ஹோலுக்குள் வருகிறாள். சர்மிளா கட்டிலில் எழும்பி இருக்கிறாள். ஏனம்மா? என்று கேட்டு, நெற்றியைத் தொட்டுத் தலையைத் தடவிக் காய்ச்சல் இல்லை எனக்கூறி மின் விசிறியைச் சுழல விட்டு "என்ன செய்யுது? என்ன வேணும்? பிள்ளைக்கு" கேட்டதோடு, "சாப்பாட்டை இஞ்ச கொண்டு வந்து தரப் பிள்ளைகளிடம் சொல்லுறன். பகலுக்கு வாற உங்கட மாலினி மிஸ்சும் இனி வந்து விடுவா. அவவிட்டச் சொல்லி விட்டுப் போறன் என்ன?" என்று கூறி அந்தத் தகவல்களை மற்றப் பிள்ளைகளிடமும் தெரிவிக்கிறாள்.

பங்கயா தனது அறைக்குச் சென்று சாறி உடுத்தும் போது ஒரே யோசனையாகத்தான் இருந்தது. "எனக்கேன்? வீண் சந்தேகம்! என நினைத்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறைக்குச் சென்று விட்டாள். பாடசாலை முடிந்ததும் வீட்டுக்குப் போய் நேரத்துடனேயே இன்று விடுதிக்கு வந்து விட்டாள். கேட்டவர்களுக்குப் பேப்பர் திருத்தப் போறன் என்று கூறுகிறாள். பங்கயா இவ்வாறு நேரத்துடன் வந்ததை, மாலினி மிஸ் தனக்குச் சாதக மாக்கிக் கொண்டு அலுவலகத்தில் அனுமதி பெற்று விடு சென்று விட்டார்.

பங்கயாவுக்குச் சர்மிளாவின் ஞாபகம் உறுத்தவே அவளிடம் செல்கிறாள். கட்டிலில் எழும்பி இருக்கிறாள் சோர்வுதான். சர்மிளா என அழைத்துப், போன கிழமையும் சோர்வான இருந்தனீங்கள். இந்தக் கிழமை இன்னும் கூடச் சோர்வாக இருக்கிற மாதிரி தெரியுது. நாங்கள் இருக்கிறம். டொக்ரரிட்டைக் காட்டு வமோ?" "இல்லை மிஸ். அப்பாவோட இந்தக்கிழமை போய்க் காட்டிறன்" என்கிறாள். மாலினி மிஸ் ஒருநாள் என்னைச் சந்தித்து சர்மிளா பற்றிக் கூறியிருந்தாள். "உடம்பு வித்தியாசமாக இருக்குப் பாருங்கோ" என்று, "சந்தேகம் பொல்லாத வியாதி" என்று அப்பா சொல்லு வார். பிள்ளையைக்" கூர்ந்து கவனிக்கும் போது உடம்பு மினுமினுப்பாக இருப்பதைப் பார்க்கிறாள். "மென்சஸ் பிந்தினாலும் உடம்பு மினு மினு என்று பற்றா வாறது தானே? ஓமோன் சுரப்புக் குறைந்தால் மென்சஸ் ஒழுங்கா வராமல் இருக்கும் என்று படித்திருக்கிறோம். இப்போ சிறுவர் துஷ்பிரயோகம் கூடிக் கொண்டு போறதால மாலினி மிஸ் சந்தேகித்திருப்பா. நானும் பிள்ளைகளின் நலன் கருதித்தான் சிந்திக்கிறன். ஏதாவது தவறு நடந்திருந் தால் பிள்ளை சொல்ல வேணும். ஆனால் அப்படி எதுவும் சொல்லேல்ல. வேறு குணம் குறிகளையும் கணேல்ல. இந்தக்கிழமைதான் சோர்வு கூடவாக இருக்கிறது. ஏதாவது வருத்தமோ தெரியாது" என நினைத்துக் கொண்டு சர்மிளாவிடம் கதைக்கிறார்.

"சர்மிளா, உங்கன்ர உடம்பு பற்றா வருது. மினு மினுப்பாகவும் இருக்குது. மென்சஸ் வாறது ஒழுங் கில்லா விட்டால் இப்படி இருக்கும். உங்களுக்கு ஒழுங்காக வாறதோ? "சர்மிளா என்று கேட்டபோது, "இல்லை மிஸ் எனக்குக் கனநாளா வாறேல்லை. அதுக்குத்தான் அப்பா மருந்து வாங்கித் தாறவர்."

"எந்த? டொக்ரரிட்டைப் போய் மருந்தெடுத் தனீங்கள்?"

"இல்லை டொக்ரரிட்டைப் போகேல்லை" என்று எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் கூறுகிறாள். சர்மிளாவின் பதிலைக் கேட்டதும், தலை உச்சியில் அறை விழுந்தது போல் இருந்தது பங்கயாவுக்கு.

---

## வேண்டாம் சீன வெடி

பட்டாசு வெடிக்க வேண்டாம்
காட்டோசை காதுக்குப் பாதிப்பு
வீட்டு மிருகங்கள் தாங்காது
மட்டான ஓசையின் மூன்று மடங்காகும்

மழை பெய்யும் பொழுது
தலைமயிர் அழிவடையும்
அழகான குளம், ஆற்று நீர் கெடும்
சூழல்த் தொகுதிக்குப் பாதிப்பு

வயோதிபர் அவதியுறுவர்
அமைதியான தூக்கத்தை குலைக்கும்
சுவாசத்தில் தும்மல், இருமல் வரும்
பாசமான குழந்தைகள் அழும்

சுவாசிப்பதை பழுதாக்கும் செம்புலோகம்
மாங்கனிசு உலோகத்தால் பக்கவாதம், வலிப்பு
சுகமான நரம்பு, மண்டலம் பழுதாகும்
மாசில்லாத்தோல் அழகு அழிவடையும்

வைத்திய செலவைக் குறைப்போம்
வைத்தியரின் நேரத்தை சேமிப்போம்
கைத்தொழில் பல கற்றிடுவோம்
கமத்தொழில் செய்து உயர்ந்திடுவோம்



- சி.குமரலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழ மரங்கள்

வாழைப்பழக் கரையலும்
பால்வணமும்
பனாட்டு லொலிபாப்பும்
நினைவுதோறும்
எச்சிலூற்றும்

பள்ளித்தோழிகளுடன்
பிரப்பம்பழம் ஆய்ந்ததும்
முள் கிழித்து அழுததும்
பகிர்ந்துண்டதும்
அப்பரவசம்
இப்போதில்லையெனும் அழுத்தம் நெஞ்சம் கிளர்த்தும்

தூத்தி
கோழிக்கூட்டுக்குள்ளும்
தோட்டக் காட்டுக்குள்ளும்
ஒளிந்து ஒளிந்து
உசுப்பேற்றி விளையாடியது
மனக்கண்களில் நிழலாடி விளையாடும்

பப்பாசி உதறுகாய்த் துவையலோடு
மாசியும் வெங்காயமும்
சேர்த்து சுவைத்து
பாட்டுக்கு பாட்டு
போட்டியில் பாடி ஜெயித்தது
பால்வீதியில் நட்சத்திரங்களாய்
நினைவுகள் தோறும் கண் சிமிட்டும்

பொண்ணாப்பிள்ளைக் (பெண் மாப்பிள்ளை)
கலியாணம்
குறுநெல் சோறு முருங்கஞ்சுண்டல் விருந்துடனே
கல்யாணப்பெட்டி பரிமாற்றத்தில் தோழிக்கு
சம்பந்தியாகிய ஆனந்தம் இதயத்தில் இதமாக வீசும்

கல் கொத்தி விளையாட்டு
கண் பொத்தி
"யவடம் யவடம் புளியடி"
சங்கு எட்டு எட்டாய் உயர்ந்து
காய் வெட்டியது
சட்டாப்பி
மாங்கொட்டை ஒத்தி நினைவில் இதயத்தில்
குதூகலமான துள்ளல்

ஆற்றங்கரைத் தோணிப்பயணம்
அநுமதியின்றி அம்மாவிடம் அடி வாங்கி அழுத கணம்
குறுஞ்சிரிப்பை இதழோரம் எப்போதும் கொண்டுவந்து
குவிக்கும்

ஞாயிறு பொன்மாலைப்பொழுது
மாதமொரு திரைப்படம்

சாச்சி வீட்டுத் தொலைக்காட்சியில் கச்சான்
வறுவலோடு கச்சேரி

கத்தாப் பழம்
தட்டி உடைத்து உண்டது
பொன்னி வண்டு போத்தலுக்குள் அடைத்தது
பொங்கி எழும் உவகைதனை எதனாலும் தடுக்க
முடியாது

வாழையிலைப் பாயிழைத்தது
தென்னோலைக் கிறுக்கி செய்தது
பூவரசு இலைச் சீட்டியடித்து
ரயில் பயணம் செய்தது
அவற்றின் களி ஒலி அலைகள்
சுகந்தக் காற்றாய் முகம் தழுவும்

மட்டை வீடு கட்டியதும்
செங்கல் தேய்த்து கிரவல்ரொட்டி
கொள்ளி அடுப்பு மூட்டி சுட்டதுவும்
கரணை மாட்டி
கலீர் கலீரென சத்தமிட நடந்ததுவும்

மண் குழைத்து
சிரட்டை அப்பம் படிக்கட்டில் அடுக்கியது...
கலவாங்கோடு சலிப்பணத்துக்கு
கூவி விற்றது...

அப்பப்பா...
எத்தனை எத்தனை
சுவையான பழமரங்கள்
பால்யத்தின் பாதையில்...

இத்தனை இன்பங்களும்
நீங்கள் சுவைத்ததுண்டா
இயந்திர விளையாட்டுகளில்? என்று ஒருதரமாவது
கேட்டு விட வேண்டும்
இக்காலப் பிள்ளைகளிடம்!!

- ஜலீலா முஸம்மில் - ஏறாவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இசையும் சிறுவருக்கு இசையும்

பேராசிரியர் சபா.ஜெயராசா

சிறுவருக்குத் தனித்துவமான இசையும் இலக்கிய வடிவங்களும் உண்டு என்பது சிறுவர் உரிமை வலியுறுத்தலோடு மேலும் ஆக்க மலர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது.

தாலாட்டு என்பது சிறுவர் இசைக்குரிய அங்கீகாரமாகவே இருந்து வந்துள்ளது. மேலைப் பண்பாட்டில் தாலாட்டு இசையைத் "தொட்டில் இசை" என அழைப்பர். தாயின் பழக்கப்பட்ட குரல், இயல் பாகவே இசைச்சுகத்தைக் கொடுக்கும் ஆற்றல் மிக்கது. தாலாட்டைப்பயன்படுத்தும் முறையிலே எதிர் விசைகளும் வரலாற்று வளர்ச்சியிலே தோற்றம் பெற்றன.

தமது எதிர்பார்ப்புக்களை சுமையேற்றம் செய்து பாடும் எதிர் வளர்ச்சி நிகழ்ந்தது. அந்நிலையில் பாடலின் பொருள் விளங்கி குழந்தை நித்திரை கொள்வதில்லை.

பழக்கப்பட்டதாயின்குரலும், எளிமையான ஓசை அசைவும் குழந்தையின் உறக்கத்துக்கு உறுதுணையாக (Sleeping Aid) அமைகின்றன.

தாலாட்டு இசையும் பாடலும் அகிலப்பண்பு கொண்டவை. அதாவது உலகின் எல்லா மொழிகளிலும் எல்லாப் பாண்பாடுகளிலும் தாலாட்டு உண்டு. கருவில் இருந்தவேளை குழந்தை கேட்ட ஓசைகளுக்கும் பிறந்த பின் குழந்தை கேட்கும் ஓசைக்குமிடையே ஒத்திசைவு காணப்படும்வேளைகுழந்தைக்கு அது சுகம் தருவதாக உளவியலாளர் முனைவர் "வு"(Wu) குறிப்பிடுகிறார்.

அந்த ஓசை மூளையின் வலப்பகுதியையும் இடப்பகுதியையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டுக்கு வலுவூட்டுகின்றது. மனநிலையையும் மனவெழுச்சி களையும் குழந்தை நிலை நடத்தைகளையும் ஒழுங்கமைப்பதற்கு தாலாட்டு ஓசை அல்லது இசை துணை செய்கின்றது.

அறிகை உளவியலாளர் தாலாட்டு இசையில் ஊன்றிய கவனம் செலுத்திள்ளனர். அறிகைத்திறன் களின் வளர்ச்சிக்குரிய ஏற்பாடுகளை குழந்தை நிலை யில் வழங்கும் உள்ளீடுகள் தாலாட்டு இசையால் கிடைக்கப் பெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

குழந்தையிடம் ஏற்படும் மொழிவிருத்திக்கு அது துணை செய்கின்றது. பேச்சுத்திறன் மேம்பாடு, உடல் இயக்கத்திறன் மேம்பாடு, தாய்க்கும் சேய்க்குமிடையே இணைப்பு, மேம்பாடு முதலியவற்றுக்குச் சிறுவயதிலே கேட்கும் எளிமையான இசையும் அதனோடு இணைந்த எளிமையான சொற்களும் துணை செய்கின்றன.

உறங்கி கொண்டிருக்கும் வேளை மூளை உறங்கமாட்டாது. அவ்வேளையில் மூளைக்குக் கிடைக்கப்பெறும் இங்கிதமான ஓசை இன்பம் குழந்தை யிடத்தே பயன் விளைவிப்பதாய் அமையும். நித்திரையின் போதும் சுகமான இசையை தாழ்ந்த அல்லது பொதுவான வேகத்தில்(Slow Tempo) இசைத்தல் பயனுடையதாக இருக்கும்.

நவீன ஆய்வுகள் வளர்வதற்கு முன்னரே, இந்த முறைமை தமிழர்களிடத்துக் காணப்பெற்றதாகக் குறிப் பிடப்படுகிறது. அதனை அடியொற்றியே இசைத்தல் முன்னெடுக்கப்பட்டது.

இறைவன் துயிலோடு தாலேலோ இசையை ஆழ்வார்கள் தொடர்புபடுத்தினர்.

மருத்துவத்துறையில் தாலாட்டு இசையை விரவாக ஆராய்ந்தவர்களுள் முனைவர் ஜெவ்றிபேரில் மன்(2013) தனித்துவமானவர். உடலியல் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் அது பயனுள்ள பங்களிப்பைச் செய்து வருதலை ஆய்வுகள் வழியாக அவர் நிறுவியுள்ளார்.

குழந்தைகளின் தொடர்ந்த வளர்ச்சிக்கும், வளர்ந்தோர் நிலையில் நிகழும் ஏற்றங்களுக்கும் அது அடித்தள மிடுதல் குறிப்பிடத்தக்கது.

தாலாட்டின் பிறதொரு நன்மையையும் சீர்மிய உளவிலாளர் குறித்துரைக்கின்றனர். தாலாட்டுப் பாடுவ தால் பெண்களும் மன அழுத்தங்களில் இருந்து விடு படுதல் கண்டறியப்பட்டுள்ளது. பெண்களுக்குரிய உளச்சிகிச்சையாகவும் அதுஅமைகின்றது.

பெண்களும் மட்டுமன்றி ஆண்களுக்கும் அது உளநலன் மேம்படுத்தும் விசையைக் கொடுத்தல் கண்டறியப்பட்டுள்ளது. தூக்கம் வராத நிலையில் தமது தாயார் பாடிய தாலாட்டைப்பாடும்படி மனைவியைக் கேட்ட ஒருவரின் வேண்டுகோளை உளவியலாளர் பதிவு செய்துள்ளனர்.

குழந்தை இசை விழிப்பிலிருந்து உறக்கம் நோக்கி நிலைமாற்றத்தக்குத் துணை செய்யும் அதே வேளை பிரிவு உறவு, துன்பம் - இன்பம், நெருக்குவாரம் - விடுவிப்பு, மகிழ்ச்சி சிரிப்பு, தேக்கம் - அசைவு, தரித்தல் - முன்னோக்கிய அசைவு, முதலாம் நிலை மாற்றங்களுக்கும் துணை செய்தலும் குறிப்பிடப் படுகிறது.

தாலாட்டு இசைப்பதற்கு குரல்வளம் வேண்டும் என்ற கட்டாம் இல்லை. தாயின்குரல் குழந்தைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமையாதாயும் மகிழ்ச்சியைத் கொடுப்பதாகவும் அமையும். அதாவது, பழகிய குரலே பரவசத்தைக் கொடுக்கும்.

பழக்கப்பட்ட குரலும் பழக்கப்பட்ட இசையும் பாதுகாப்பு உணர்வைப் பிள்ளைக்குக் கொடுக்கும்.. பாதுகாப்பு என்ற கருத்து வடிவத்தை வளர்ந்தோர் காரண காரிய தொடர்பு நிலையிலும் விளங்கிக் கொள்வர். சிறுவர் தமக்குரிய அனுபவ வீச்சுக்குள் உணர்ந்து கொள்வர். சுகமான ஒலியும், சூழலும் சிறுவரால் உணரப்படுகையில், பாதுகாப்பும் உள்ளடக்கப்படுகிறது.

சிறுவர் இசை என்பது தாலாட்டு இசையில் தொடங்கி கட்டிளமைப் பருவ இசைவரை நீண்டு செல்கின்றது.

இசை பற்றிய அறிவு சிறுவர் பயிலும் எழுத்தி லிருந்து மேலேழுகின்றது. தமிழில் குறில்-நெடில், வல்லினம் - மெல்லினம்- இடையினம் அளபெடை என்றவாறு ஒலியைப் பிரித்தறிதல் நிகழ்கின்றது. இயற்கையின் ஒலி அளவுகளே வரிவடிவில் இடம் பெறுகின்றன.

சிறுவர் நிலையில் மனவெழுச்சியையும் ஆக்க மலர்ச்சியையும் வெளிப்படுத்த இசை துணை செய் கின்றது. சிரிப்பு என்பது இசையின் வடிவம். சிரிக்கும் பொழுது காரணத்தை அறியாது சிரிப்போரும் உளர். சிரிப் போடு நிகழும் ஒலி நீட்சிகளும் இசையின் ஒலி நீட்சி களுக்குமிடையே தொடர்பு உண்டு.

இசையுடன் கற்றலை முன்னேடுத்தல் வினை யாற்றலுடன் இணைந்த கற்றலாகின்றது. முன் பள்ளிகளில் வளர்ந்தோர் இசையைத்திணிக்காது. சிறுவரிடத்து முகிழ்த்தெழும் இயல்பான இசைக்குமு முக்கியத்துவம் தரப்படல் வேண்டும். அவ்வாறே ஆடலி லும் வளர்ந்தோர் அடைவுகளைச் சிறுவர் மீது திணிக் காது இயல்பான அசைவுகளுக்கு வலுவூட்டல் வேண்டும்.

ஒலியை ஒழுங்குபடுத்தல், ஒலியைப் பிர யோகித்தல் சிறுவர் இசை, அனுபவத்திலும் இசைக் கல்வியிலும் வலியுறுத்தப்படுகிறது.

ஒழுங்கு படுத்தப்பட்ட ஒலியே இசையாகின்றது. சுரவடிவ இசையினைக் கற்பிப்பதற்கு முன்னர். ஒலி யமைதி அடிப்படையில் சொற்களை ஒழுங்குபடுத்தலே சிறுவர்களுக்குச் சுவை தரும் பயிற்சியாகின்றது. கோமாளிக் கவிதைகள்(nonsense poetry) சிறுவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதற்குரிய காரணம் அதில் உள்ளடங்கிய ஒலிக் கோலங்களாகும்.

சிறுவரின் இசை அனுபவ வளர்ச்சிப் படிகளை நான்கு நெடுங்கோட்டு நிலைகளாக ஆய்வாளர் சுவான் விக்கும் ரில்மனும் அதிக அளவான தரவுகளை அடி யொற்றி விளக்கியுள்ளனர். அவை;

1. உறுதேர்ச்சிநிலை
2. 2. உள்ளதுபோல் இயம்பும் நிலை
3. கற்பனை அளிக்கை நிலை
4. மீ அறிகை நிலை

முதலாவது நிலையில் எளிமையான முறையில் ஓசைக்குத் துலங்குதலும் ஒலியைக் கட்டுப்படுத்தும் திறனும் அடங்கும்.

இரண்டாவது நிலையில் தம்மைச் சுற்றியுள்ள உலகை இசையால் தமது இயல்புக்கு ஏற்றவாறு ள்ளது போல் அளித்தல் இடம்பெறும்.

மூன்றாவது நிலையில் இசையை அடிப்படை யாகக் கொண்ட கற்பனை அளிக்கையை அல்லது விளையாட்டைத்தருதல் நிகழும்

நான்காவது நிலையில் தனக்குரிய இசைச் சிந்தனையையும் இசை அறிவையும் தானே விளங்கிக் கொள்ளல் குறிப்பிடப்படுகிறது.

இசையை ஒலிவடிவாக மட்டுமன்றி உருவ வழியாக வெளிப்படுத்துவதற்குரிய முதற்படியாக அமைவது சுரங்கள். தமிழில் அது ஏழு இசை என்று குறிப்பிடப்படும்.

குரல்(ஸ) துத்தம்(ரி) கைக்கிளை(க) உழை(ம) இளி(ப) விளரி(த) தாரம் (நி) என்று ஏழிசை அல்லது ஏழு சுரங்கள் குறிப்பிடப்படும். இந்த ஏழு சுரங்களும் நுண்ணிய ஒலிவேறுபாட்டை அடியொற்றி பன்னிரு சுரங்களாக மேலும் வளர்ச்சி பெற்றுள்ளன.

குரலும், இளியும் வகைப்பெறாதவை(ஸ.ப) ஏனைய ஐந்தும் இரு வகையாக அமையும் நிலையில் மொத்தம் பன்னிரண்டாக இசைஒலி அமைந்துள்ளது.

பருமட்டாக ஆரம்பப் பாடசாலை நிறைவைத் தொடர்ந்து சிறுவரின் உடல், உள, மனவெழுச்சி மற்றும் நடத்தை நிலைகளில் விரைந்த மாற்றங்கள் நிகழத் தொடங்கும். சமூக இடைவினைகளிலும் முரண்பாடுகள் நிகழும் வாய்ப்புகள் அதிகரிக்கும். இசை இசையின் நோக்கிலும் போக்கிலும் சுவைப்பிலும் ஆக்கத்திலும் மாற்றங்கள் நிகழ்தல் தவிர்க்க முடியாதது.

சிறுவர் வளர்ச்சிநிலைகளோடு தொடர்புபட்டு நிற்பதே சிறுவர் இசை. கட்டிளமைப் பருவத்தில் ஒருவரின் குரல் ஒலிப்பில் மாற்றங்கள் நிகழும். குரல் நாண்களின் முதிர்ச்சி நிலையால் அந்த மாற்றம் நிகழும்.

அதேவேளை ஆண்குரலுக்கும் பெண்குரலுக்கு மிடையே ஒலி வேறுபாடுகளும்(சுருதி வேறுபாடுகளும்) நிகழத்தொடங்கும்.

ஒரே உருப்படியைச் சிறுவர் இசைப்பதற்கும் வளர்ந்தோர் இசைப்பதற்கும் அதிக முதிர்ச்சி கொண் டோர் இசைப்பதற்குமிடையே வேறுபாடு உண்டு. இசை ஒலிப்பு நிலை மனித வளர்ச்சிப் பருவத்தினூடே மாறுதல் பெறுகின்றது.

மித வளர்ச்சிப் படிகளினூடே சிறுவர் ஓசை எழுப்பலும் இசையும் விளக்கம் பெறும். சிறுவருக்கான இசை உருப்படிகள் சிறிதாகவும், சிக்கலற்றதாகவும், எளிமை நிலையிலும் அமைந்திருக்கும் எளிமையான தாளம் கட்டப்பட்டிருக்கும்.

இயற்கை ஒலிகளைக் கொண்டதே சிறுவர் இசை. சிறுவர்இலக்கியம் சிறுவர் திரைப்படம் போன்று சிறுவர் இசையும் தனித்துவமானது. சிறுவர் இசையின் செல்வாக்கு வளர்ந்தோர் மெல்லிசையிலும் நிகழ்ந் துள்ளதாக இசை ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர்.

பொப் இசையும் செவ்வியல் இசையும், சிறுவர் இசைப்பண்களும் இணைக்கப்பட்டே மெல்லிசை உருவாக்கப்பட்டது. கனதிற்ற இசை என்றும் மெல்லிசை குறிப்பிடப்படுதல் நோக்கத்தக்கது. கூடுதலான சுவை யைக் கொண்ட இசையாகவும் மெல்லிசை மேலேழுந்துள்ளது.

சிறுவர் இசை பற்றி ஆய்வுகள் தமிழில் வளர்க்கப்பட வேண்டியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.சிறீறங்கன்

# மகளிர் தினம்...
# எனும் விழா



கைப்பேசியில் வைத்த அலாரம் நான்கு மணிக்கு அடித்தது. இருளைக் கிழித்த அதன் வெளிச்சத்தில் அக்கைப்பேசியை எடுத்து நேரத்தைப் பார்த்த மலர் சோம்பலை முறித்தவாறு எழுந்து உட்கார்ந்தார். ஐம்பது களைத் தாண்டி பயணிக்கும் வயது. ஆனாலும் திருமண மாகாதவர். தன் உடலில் அதிக சிரத்தை வைத்திருந்தார். பத்மாசனம் போட்டு கண்களை மூடியவாறு சிறிது நேரம் தியானத்தில் இருந்தார். பின்பு கைகளைத் தேய்த்து கண்களில் ஒற்றியவாறு இன்றைய நாள் நல்ல பொழுதாய் அமைய வேண்டும் என கடவுளை வேண்டிக் கொண்டு கட்டிலில் இருந்து எழுந்து வந்தார். அவரது அறையில் தொங்கிய நாட்காட்டியில் முன்னைய திகதியைக் கிழித்துக் கொண்டார். அது "மார்ச் 8"எனக் காட்டியது. நாட்காட்டியில் ராசி பலன் பார்க்கும் அவர் தனது ராசியான சிம்மத்தின் முன் வெற்றி என்று இருப்பது கண்டு சிறிய புன்னகையுடன் பாத்ரூமை நோக்கி நடந்தார் மலர் மாணிக்கம்.

மலர் மாணிக்கம் ஒரு உயர்தர பெண்கள் பாட சாலையில் தரம் 1 அதிபராக கடமையாற்றுகின்றார். கண்டிப்பு மிக்க பொறுப்பு வாய்ந்த அதிபர். திணைக்கள மட்டத்தில் செல்வாக்குப் பெற்றவர். இவர் திருமணம் செய்து கொள்ளாது தனது தாயுடன் வாழ்ந்து வரு கின்றார். இவருக்கு திருமண பந்தத்தில் நம்பிக்கை இல்லை. எனது வாழ்க்கையை நான் தான் எனக்குப் பிடித்த வகையில் வாழ வேண்டும் என்பது இவரது கொள்கையாகும். தாலி என்ற விலங்கு பூட்டிய அடிமை வாழ்வு திருமண வாழ்வு என்பர். அன்புக்காகவோ பாசத்துக்காகவோ தன் கொள்கையை ஒருபோதும் விட்டுக் கொடுக்காதவர்.

பாத்ரூமில் இருந்து வெளியே வந்த மலர் தனது பாடசாலை whatsapp குரூப் ஐ பார்வையிட்டார். அதில் போட வேண்டிய அறிவுறுத்தல்களை அவர் அதிகாலை யிலேயே போட்டு விடுவார். அதில் அதிபருக்கு தனிப் பட்ட ரீதியில் அவரது பாடசாலை ஆசிரியை தோமஸ் தனது மகள் சாமத்தியம் அடைந்த காரணமாக லீவு கோரி மெசேஜ் அனுப்பி இருந்தார்.

அந்த மெசேஜ் ஆல் எரிச்சல் அடைந்த மலர் whatsapp குரூப்பில் அவசர அவசரமாக பின்வருமாறு பதிவினை இட்டார்.

"இன்று பாடசாலையில் மகளிர் தினம் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆசிரியர்கள் அனைவரும் தங்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட கடமைகளை ஒழுங்காக செய்து தருமாறு கேட்டுக் கொள்வதுடன் இன்றைய நாள் யாருக்கும் லீவு அனுமதிக்கப்பட மாட்டாது என அறிவுறுத்திக் கொள்ள விரும்புகின்றேன்"

என்று காட்டமாக எழுதினார்.

ஆறு முப்பது மணி அளவில் அவசர அவசரமாக சமையலை முடித்து சேலைக்கு மாறினர் மலர் மாணிக்கம். மெல்ல தாயின் அறையை எட்டிப் பார்த் தார். தாய் இருமியவாறு ஒருக்கழித்துப் படுத்திருந்தார். "அம்மா நான் போட்டு வாரேன். மேசையில் சாப்பாடு மூடி இருக்கு சாப்பிடுங்க"

"என்ன சாப்பாடு புள்ள"

"இட்டலிமா இருந்தது. தோசை சுட்டு வைச்சிருக்கன்"

"வயிறு புளிச்சு புளிச்சு வருது. இடியப்பம் இருந்தால் நல்லம் புள்ள"

சுரீர் என்று கோபம் தலைக்கேறி விட்டது போல்

"நீ அம்மா நினைச்சு நினைச்சு ஒன்று சொல்லா தணை. உன்ன தலையில கட்டிக் கொண்டு நான் ஆட முடியாது. எனக்கு ஆயிரத்தெட்டு சோழி இருக்கு. பசிச்சா இதனை சாப்பிடணை. அல்லது கெட்டொழிஞ்சு போ. எனக்கு ஒன்றும் கவலை இல்லை. எப்படியும் நீ இல்லாமல் நான் வாழத்தான் போறேன்."

என்று பதிலுக்கு காத்திராது புறப்பட்டுச் சென்றார் மலர் மாணிக்கம்.

பாடசாலையில் அதிபர் இன்று அல்லிராணி போல் மிடுக்காக இருந்தார். அவரது அழகான கொண்டை யில் கிரீடம் வைத்ததைப் போல் சிவந்த ரோசாப்பூ. அதை ஒரு மாணவி தான் கொண்டு வந்து கொடுத்திருந்தாள். மாணவிகள் பலர் அதிபருக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் ரோசாப்பூ கொண்டு வந்து கொடுப்பார்கள். சிறிய மாணவிகள் அவர்களது சேலைத் தலைப்பைப் பிடித்து அழகு பார்ப்பார்கள். சேலை மடிப்புகளை நேர்த்தியாக்குவார்கள். ஆசிரியைகளின் உட்சட்டை தெரியாதவாறு சரி செய்வார்கள். ஒரு மகளீர் பாடசாலையில் இவை நித்தமும் நிகழும் காட்சிகளாகும்.

"ரோஜாவுக்கு ஒரு ரோசா" என்று சில ஆண் ஆசிரியர்கள் யொள்ளு வழிவதும் உண்டு.

"குட் மார்னிங் மேடம் Happy women's day" என்று பலரும் வணக்கம் தெரிவித்தனர். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் தங்களுக்குள் Happy women's Day என்று வாழ்த்தி மகிழ்ந்தனர். எல்லோர் முகங்களிலும் சந்தோசம்

மற்றும் பெருமிதம் காணப்பட்டது,

இன்று மகளிர் தினத்திற்கு பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளர் பெண் என்பதனால் அவரை பிரதம விருந்தினராக அழைத்திருந்தனர்.

அதிபர் தனது அலுவலகத்திற்கு பிரதி அதிபர் மற்றும் பகுதித் தலைவர்களை அழைத்து நிகழ்வு தொடர்பான முன்னாயத்தங்களைச் சரிபார்க்கும் படி கூறினார். வரவேற்பு, நிறைகுடம், மங்கல விளக்கேற்றல், உபசரணை, நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு, மாணவர் ஒழுங்கமைப்பு, மீள் ஒழுங்கமைப்பு என கடமைப் பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. கடமைப் பொறுப்புக்களை சரி பார்த்துக் கொண்டிருந்த அதிபர்

"யாரை வரவேற்புக்கு பொறுப்பா போட்டிருக்கு?"

"கண்மணி டீச்சர"

"ஏன் அவளைப் போட்டது. மனுசன் செத்து ஆறு மாசம் கூட ஆகல. சிரிக்கவும் மாட்டாள்"

என்று சிடுசிடுத்தார்..

"அவளை உபசரனைக்கு மாத்திப் போட்டு டாக்டர்ட்ட மனிசி சந்தியா மிஸ்சை வரவேற்புக்கு போடுங்கோ"

என்றார் அதிபர். சந்தியா மிஸ் அழகு மட்டுமல்ல எப்போதும் சிரித்த முகம்.

இன்று பெண்ணியம் தொடர்பாக மாணவிகளால் வரையப்பட்ட ஓவியக் கண்காட்சியும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதனை சிரேஷ்ட மாணவத் தலைவி குமுதா பொறுப்பெடுத்திருந்தாள். ஆசிரியர்களின் உதவியுடன் ஓடி ஓடி திறம்படச் செய்து முடித்திருந்தாள். அங்கு ஆணாதிக்கத்தின் கொடிய கரம் எவ்வாறு பெண்களை அடிமை கொள்கிறது என்பது சிறப்பாகக் காட்டப்பட்டிருந்தது. மது போதைக்கு அடிமையான கணவன், சீதன விலை பேசும் சின்னத் தனவான்கள், பாலியல் இம்சை கொடுக்கும் அலுவலக அதிகாரிகள், பஸ்ஸில் சேட்டை செய்வதற்கு என்று வரும் காமுகர்கள், தொலைபேசி ஊடாக தொல்லை கொடுக்கும் ஆண்கள் என பற்பல கோணங்களில் அழகாக ஓவியக் கண்காட்சியில் சித்தரிக்கப்பட்டிருந்தது. இதை விட கைம்பெண் அவலம், பெண் தலைமைக் குடும்பம், அலுவலகத்தையும் குடும்பத்தையும் ஒருசேரச் சுமக்கும் பெண்கள் என தத்ரூபமாக பல ஓவியங்கள் வரையப்பட்டு இருந்தன. அயல் பாடசாலை மாணவர்களும் கண்காட்சியை வந்து பார்வையிட்டுச் சென்றனர். மதியம் 11 மணியளவில் மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சிகள் ஆரம்பமாக இருந்தது.

பாடசாலை அல்லோலகல்லோலப்பட்டது. பெண்ணாசிரியர்கள் எல்லோரும் விதவிதமான காஞ்சிபுரம் சேலைகளை அணிந்திருந்தனர். எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தது போல் அதிபரின் சேலை அழகு சேர்த்தது.

அப்பாடசாலையில் சேவையாற்றும் ஒருசில ஆண் ஆசிரியர்கள் நிகழ்வுக்கான முன்னாயத்த பணிகளில் ஈடுபட்டிருந்தனர். மண்டப ஒழுங்கு, ஒலிபெருக்கி இணைப்பு போன்ற சில வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். சில உயர்தர மாணவிகள் அழகான மாக்கோலம் போட்டிருந்தனர். அதில் சமூக அநீதிகளை உடைத்துக் கொண்டு பறக்கும் சுதந்திரப் பறவைகள் அங்கே அழகாக சித்திரிக்கப்பட்டிருந்தது.

தோமஸ் டீச்சர் கண்கள் வீங்கிய நிலையில் பாடசாலைக்கு சமூகம் தந்திருந்தார். அவரது மகளின் சாமத்தியம் தொடர்பான செய்தி காட்டுத்தீ போல் பாடசாலை முழுவதும் பரவியது. தன்னுடைய கவலைகளை வெளிக்காட்டாது தோமஸ் டீச்சர் நிறைகுடம் வைப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டார். இதனை அறிந்த இந்து மாமன்ற பொறுப்பாசிரியை

"ஓடடி ஓடு மனிசி கன்னித் துடக்கோடு நிறைகுடம் வைக்கப் போகுது. ஓடு ஓடிப் போய் மறி. நான் வாரேன்" என்று மாணவத் தலைவி ஒருவரை அனுப்பி வைத்தார்.

"அந்நேரம் பிரதம விருந்தினரின் வாகனம் பாடசாலை வளாகத்திற்குள் நுழைந்தது.

அப்போது மண்டப பக்கத்தில் இருந்து ரேவதி மிஸ் ஓடி வந்தார்.

"மேடம்...மேடம்..."

"என்ன சொல்லுங்க டீச்சர்"

"ஷோட்டீட்ஸ் ரிங்ன்ஸ் எல்லாம் ஒழுங்கு பண்ணிட்டன். நிகழ்ச்சி தொடங்கிய பின் கொடுக்கலாம். சோபனா மிஸ்ஸூம் ஏ எல் பிள்ளைகளும் நிக்கிணம். நான் ஒருக்கா வீட்டை போய் பிள்ளைக்கு வ்பீட்(feed) பண்ணிட்டு வரட்டா"

"ஏற்கனவே டென்ஷன்ல இருக்கேன். பிறகும் டென்ஷன கொடுக்காதீங்க. உங்க டியூட்டிய முடிச்சுட்டு போங்க டீச்சர். அதுக்குள்ள குழந்தைக்கொண்டும் ஆகாது"

என்றவாறு பிரதம விருந்தினரை அழைக்கச் சென்றார் அதிபர். கண்கள் மட்டுமல்ல அவரது மார்பு சட்டையும் நனைய நனைய தன் கடமையிடத்துக்குச் சென்றார் ரேவதி டீச்சர்.

பிரதம விருந்தினர் எளிமையாக ஆனால் நேர்த்தியாக சேலை உடுத்திருந்தார். மங்கல விளக்கேற்றல் நிகழ்வு இனிதே ஆரம்பமாகியது. மங்கல விளக்கேற்றலுக்கு பொறுப்பான மலர்விழி ஆசிரியை தரம் 11 மாணவி ஒருவரிடம் மெழுகுவர்த்தியைக் கொடுத்துவிட்டு பின்புறமாக ஒதுங்கி நின்றார். நல்ல காரியங்களுக்கு முன் நிற்பதை அவர் பெரும்பாலும் தவிர்த்தே வந்தார். பத்து வருட காலமாக குழந்தை இல்லாத குறை. பிறர் சொல்ல முதல் தானே ஒதுங்கிக் கொள்வார்.

மங்கள விளக்கேற்றல் உரிய ஒழுங்குமுறையில் இடம் பெற்றுக் கொண்டிருந்தது. இறுதியாக சிரேஸ்ர மாணவத் தலைவி குமுதாவை அழைத்திருந்தனர்.

"பிள்ளைக்கு ஏலாமல் வந்துட்டுது." என்று பின்னாலிருந்து யாரோ குரல் கொடுத்தனர். இப்போ குமுதாவுக்கு பதில் ராதா மங்கல விளக்கினை ஏற்றி வைத்தாள்.

வரவேற்புரையைத் தொடர்ந்து மாணவிகளின் கவிதைகள் பேச்சுக்கள் என்பன இடம் பெற்றன. அன்னை திரேசா தொடங்கி சுனிதா வில்லியம்ஸ் வரை பெண்களின் மகத்துவம் பேசப்பட்டது. போற்றப்பட்டது. கரகோஷம் விண்ணைக் கிழித்தது.

மேடையில் அதிபர் தலைமை உரையில் பெண்ணியம் தொடர்பாக சிங்கப்பெண்ணாய் கர்சித்துக் கொண்டிருந்தார். அடுத்து பிரதம விருந்தினர் தனது உரைக்கான சந்தர்ப்பத்தை நோக்கிக் காத்திருந்தார். இவ்வாறு இனிதே நடைபெற்றுக் கொண்டிருந்தது அந்த மகளிர் தின விழா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாக்ரன்

கொமிக்ஸ் தொடர்

கதை - இ.சு.முரளிதரன்
வரைகலை- ஷாயினி வித்தி ஆனந்தன்
தரம் - 11
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# சிறுவர் இலக்கியத்தில் சித்திரக் கதைகள் : சிறார் மனதை கவர்ந்த முத்து காமிக்ஸ்!



(சிறுவர் இலக்கியத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும் முத்து காமிகஸ் படைப்புகளை தமிழில் உருவாக்கிய சிவகாசியை சேர்ந்த திரு. சௌந்தரபாண்டியன் அண்மையில் 27.3.2025 காலமானார். அவரின் நினைவாக இந்த ஆக்கம் பிரசுரமாகிறது)

நாங்கள் சிறுவர்களாக இருந்த போது சுவராசியமாக விரும்பி படிக்கும் சித்திரக் கதை புத்தகங்களில் முத்து காமிக்ஸ் முக்கிய இடத்தை பிடித்திருந்தது. அந்த கதைகளில் அனைவருக்கும் பிடித்த துப்பறியும் வீரர் இரும்புக்கை மாயாவியின் கதைகள் இன்னமும் பலருக்கும் நினைவில் இருக்கும்.

முத்து காமிக்ஸ் கதாநாயகர்கள் என்றென்றும் நிலைத்து நிற்கும் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இந்த முத்து காமிகஸ் படைப்புகளை தமிழில் உருவாக்கிய திரு. சிவகாசி சௌந்தரபாண்டியன் அண்மையில் 27.3.2025 காலமானார்.

பல கதாநாயகர்களை கற்பனையால் உருவாக்கி எங்களது இளமைப் பருவத்தில் எங்களுக்கு சினிமா வாய்ப்பில்லாத பொழுது பொழுது போக்கை உருவாக்கித் தந்த பெருமை மறைந்த சௌந்தரபாண்டியன் அவர்களுக்கு உரித்தாகும்.

எழுபதுகளில் பள்ளிப்பருவத்தில் முத்து காமிக்ஸ் புத்தகங்களுக்கு அடிமையான சிறுவர்களே அதிகம் எனலாம். அத்துடன் தமிழ் வாசிப்பும், எழுத்தும் நல்லபடியாக முன்னேற்ற அமைந்ததில் முத்து காமிக்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்கு பெரும் பங்கு உள்ளதெனில் மிகையல்ல.

சிறுவயதில் வாசிப்பு திறனை மேம்படுத்திய நூல்கள் பல. குறிப்பாக இரும்பு கை மாயாவி, மாயாஜால மன்னன் மான்ரக், காட்டுலக வேதாள மாயாவி, துப்பறியும் ரிப் கர்வி போன்ற கற்பனை கதாபாத்திரங்களை சிறுவர்களுக்குள் ஊடுருவி இன்றளவும் பசுமையாய் இருக்கும் சித்திரக் கதை காமிக்ஸ் கதா பாத்திரங்கள் அவையாகும்.



**முத்து காமிக்ஸ் பதிப்பகம்:**

தமிழ் நாட்டில் முத்து காமிக்ஸ் பிரகாஷ் பதிப்பகத்தாரால் பதிப்பித்து வெளிவந்த ஒரு சித்திரக் கதை இதழாகும். சிவகாசியில் சௌந்தரபாண்டியன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட முத்து காமிக்ஸ் புத்தகங்கள் தொடர்ந்தும் அவரது மகன் எஸ்.விஜயனினால் கொண்டு நடத்தப்பட்டது.

நீண்ட காலமாக பல்வேறு வகையான தமிழ் வரைகதை புத்தகங்களும் வெளிவருவது நின்ற பின்னாலும் முத்து காமிக்ஸ் நீண்டகாலமாக வெளி வந்தமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

லயன் காமிக்ஸ், திகில் காமிக்ஸ், மினி லயன் காமிக்ஸ், ஜூனியர் லயன் ஆகிய சித்திரக்கதை இதழ்கள் அனைத்துப் புத்தகங்களையும் பிரகாஷ் பதிப்பகத்தாரே பதிப்பித்து வெளியிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முத்து காமிக்ஸ் முதலில் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது. முத்து காமிக்சின் முதலாவது புத்தகம் இரும்புக்கை மாயாவி எனும் தலைப்பில் வெளிவந்தது. 128 பக்கங்களை கொண்டிருந்த அந்த முதல் புத்தகம் இந்திய 0.90 பைசாவிற்கு விற்கப்பட்டது. இதன் பின்னர் சௌந்தரபாண்டியனின் மகனான விஜயன் என்பவர் தந்தையை போலவே தானும் லயன் காமிக்ஸ் எனும் புதிய சித்திரக்கதை இதழை 1984 இல் வெளியிட்டார். லயன் காமிக்சின் முதல் இதழ் மாடஸ்டி பிளைசி எனப்படும் பிரிட்டிஷ் காமிக்ஸ் கதாநாயகியைக் கொண்டு “கத்தி முனையில் மாடஸ்டி” எனும் தலைப்பில் 2.00 ரூபாய் விலையில் வெளிவந்தது.

லயன் காமிக்ஸ் தொடங்கிய சமயத்தில் அதன் பதிப்பு ஆசிரியர் விஜயனின் வயது 17 மட்டுமே. ஆனாலும் லயன் காமிக்ஸை வெற்றிகரமாக நடத்திய விஜயன் பின்னர் முத்து காமிக்சையும் தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து திகில், மினி லயன் போன்ற காமிக்ஸ் இதழ்களையும் துவங்கி வெற்றிகரமாக நடத்தினார் விஜயன்.

**பாடதிட்டத்தில் சேர்க்க கோரிக்கை:**

எந்த வித விஷத்தையும் குழந்தைகள் மனதில் விதைக்காத அருமையான வரைகதை புத்தகங்களே இந்த காமிக்ஸ் புத்தகங்கள் ஆகும். தமிழ் கற்க குழந்தைகளுக்கு இதுதான் சிறந்த நூல் என்றும் சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பாட திட்டத்தில் ஒரு அம்சமாக சேர்க்கப்பட வேண்டிய புத்தகங்கள் முத்து காமிக்ஸ் எனவும் தமிழ் நாட்டில் ஒரு கோரிக்கை எழுந்தது.

இரும்புக்கை மாயாவி, ரிப் கெர்பி மாயாஜால மான்றுக் என எத்தனை எத்தனையோ பாத்திரங்கள் படைக்கப்பட்டன. பால்ய வயதிலே சித்திரக் கதைகள் மூலம் அந்தக் காலங்களில் சிறுவர்கள் ஆர்வத்துக்கு தீனி போட்டன இந்த நூல்கள் எனலாம்.

அதேவேளை அந்த நேரத்தில் பொன்னி கொமிக்ஸ் போன்ற பெயர்களிலே வேறு பல கொமிக்ஸ் நூல்களும் வெளிவந்தன. முத்து கொமிக்ஸ் வெளியீடு களில் இருந்த சித்திரங்களின் நேர்த்தி, மொழி பெயர்ப்பின் தரம் வேறு எந்த வெளியீடுகளிலும் இருக்க வில்லை என்பதால் சிறுவர்கள் விருப்பத்திற்குரியது முத்து கொமிக்ஸ் என புகழ் பெற்றது.

**தினத்தந்தியின் ராணி காமிக்ஸ்:**

*1984* காலப்பகுதியில் லயன் காமிக்சிற்குப் போட்டியாக ராணி காமிக்ஸ் தமிழில் அறிமுகம் ஆகியது. ராணி காமிக்ஸை தினத்தந்தி நிறுவனத்தார் பதிப்பித்தனர். ஆயினும் *2005*-ம் ஆண்டளவில் வாசிப்பு பெருமளவில் நலிவடைந்து ராணி காமிக்ஸ் வெளியீடு நிறுத்தப்பட்டது.

குறிப்பாக *2000* ஆண்டின் துவக்கத்தில் கேபிள் டிவி, இண்டர்நெட், வீடியோ கேம்ஸ், சினிமாக்களின் வருகையின் தாக்கம் காரணமாக வாசிப்பு பழக்கம் குறைந்து போனது எனவும் கணிக்கப்படுகிறது.

வாசகர்கள் குறைவு காரணமாக கோகுலம், ரத்னபாலா, பூந்தளிர், பாலமித்ரா, மேத்தா காமிக்ஸ், அசோக் காமிக்ஸ் போன்ற தமிழ் சிறுவர் மாத இதழ்கள் அனைத்தும் ஒரு காலகட்டத்தில் நின்று போயின.

அம்புலிமாமா எனும் சிறுவர் இதழ் *2013*-ம் ஆண்டுவரை இயங்கி வந்து நின்று போனது. எனினும் லயன் காமிக்ஸ் இன்றளவும் தொடர்ந்து பதிப்பிக்கப்பட்டு வருகின்றது. தற்போது பெருமளவில் வாசிப்பு குறைந்து போனதால் லயன் காமிக்ஸ் முன்பு போல கடைகளில் பெரும்பாலும் விற்கப்படுவதில்லை. ஆண்டு சந்தா வழியாகவும், புத்தக கண்காட்சி விழாக்களிலும் மட்டுமே லயன், முத்து காமிக்ஸ் விற்கப்படுகிறது.

**முத்து காமிக்ஸ் நாயகர்கள் :**

முத்து காமிக்ஸ், ராணி காமிக்ஸ், பூந்தளிர், அம்புலிமாமா ஒவ்வொரு குழந்தைகளையும் நல்லவனாக கதாநாயகன் ஆக மாற்ற அடித்தளம் அமைத்தன. *1970*களில் குழந்தைகளின் முதல் பொழுதுபோக்கு தேர்வு இத்தகைய கதை நூல்களான முத்து காமிக்ஸ் எனலாம்.

இரும்புகை மாயாவி, லாரன்ஸ் டேவிட், மான்றக், லோதார், குதிரை வீரன் கிஸ்கோ கிட், போன்ற பல மனதில் நிறைந்த கதா பாத்திரங்கள் இன்றும் சிறுவர் மனதில் நிறைந்துருக்கும். வேறு ஊடக வசதிகள் இல்லாத காலத்தில் இந்த கதை நூல்களே இளம் வாசகர்களை மகிழ்வித்த காலமாகும்.

இத்தகைய காமிக்ஸ் புத்தகங்களிலேயே முறையான, சிறப்பான படங்கள் வரையப்பட்டு இருக்கும். அதிலும் இரும்புக்கை மாயாவி கதைகள் மறக்க முடியாது. அந்தக் காலத்தில் குழந்தைகளுக்கென்ற தனி

உலகைப் படைத்தது இந்த முத்து காமிக்ஸ்.

ஆனாலும் பெரும்பாலான காமிக்ஸ் கதைகள் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வெளிவந்த கதைகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. பிரிட்டிஷ் சிறுவர் இதழான ப்ளீட்வே பதிப்பகத்தின் பிரதம நாயகர்கள் முத்து காமிக்ஸில் முக்கிய நாயகர்களாக வலம் வந்தனர். இரும்புக்கை மாயாவி, ஜானி நீரோ, C.I.D. லாரன்ஸ் & டேவிட், வேதாளர், ரிப் கிர்பி, சார்லி, மாண்ட்ரேக், பிலிப் காரிகன், போன்ற மிகவும் பிரபலமான ஆங்கில காமிக்ஸ் பத்திரங்கள் முத்து காமிக்ஸில் தொடர்ந்து வந்தனர். பின்னாளில் பெல்ஜியத்தின் மிகப் பிரபலமான கேப்டன் டைகர், லார்கோ வின்ச், தோர்கல், ரிப்போர்டர் ஜானி, ப்ளூகோட் பட்டாளம், சிக் பில், ஆகிய நாயகர்களும் முத்துவில் தொடர்ந்து வந்தனர், இத்தாலியின் போனெல்லி பதிப்பகத்தின் டிடெக்டிவ் .ராபின், மர்ம மனிதன் மார்டின், போன்ற நாயகர்களும் முத்து காமிக்ஸில் இடம் பெற்றனர்.

**வாழ்ந்த காலம் மீண்டும் வருமா?**

முத்து காமிக்ஸ் *1970*களில் இன்றைய ஸ்மார்ட் போன் போல அந்த காலகட்டங்களில் சிறுவர்களின் கரங்களில் தவழ்ந்த புத்தகங்களே இத்தகைய புத்தகங்கள் ஆகும். குறிப்பாக இரும்பு கை மாயாவி எடுத்தால் படித்து முடித்த பின்னரே கீழே வைக்கும் அளவிற்கு உத்வேகமூட்டிய நூல்களாகும். *1970*களில் சிறுவர்களாக இருந்த யாரும் முத்து காமிக்ஸ் படிக்காமல் இருந்திருக்க முடியாது. டிவி இல்லாத நாட்களில் முத்து காமிக்ஸ் ஒரு பெரிய வரப் பிரசாதமாகும். அத்துடன் முத்து காமிக்ஸ், அம்புலிமாமா போன்ற புத்தகங்களை படித்த காலம் பொற்காலமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சுதாகர்

# "முள்ளும் மலரும்" நாவல்

முள்ளும் மலரும் திரைப்படத்தை எண்பதுகளில் பார்த்திருந்தாலும், அதன் நாவல் வடிவத்தை நாற்பது வருடங்கள் கழித்து இப்பொழுதுதான் வாசிக்கக் கிடைத்தது. நாவலுக்கும் திரைப்படத்திற்கும் பெருத்த வேறுபாடு இருந்ததைக் கண்டுகொள்ள முடிந்தது. திரைப்படம் ஒரு முள்ளுக் (காளி) கூட மலரும் என்பதைக் காட்டி, நாவலுக்கு ஒரு புது அர்த்தத்தைக் கற்பித்தது. ஆனால் நாவல்? ஒரு கொடியில்/செடியில் முள்ளும் மலரும் தனித்தே இருப்பதைக் காட்டுகின்றது. திரைப்படத்தைப் பலரும் பார்த்திருப்பார்கள். ஆனால் நாவலை எத்தனை பேர் வாசித்திருப்பார்கள்? திரைப்படத்தைப் பார்த்து காளி (ரஜனிகாந்) மீது ரசனை வைத்திருந்தவர்கள், நாவலை வாசிக்காமல் இருப்பதே நல்லது.

முள்ளும் மலரும், கல்கி இதழ் 1966 ஆம் ஆண்டு நடத்திய வெள்ளி விழா நாவல் போட்டியில் உமாசந்திரன் எழுதி முதல் பரிசு பெற்ற நாவல். பூர்ணம் ராமச்சந்திரன், தாய் உமா மீது கொண்ட பாசத்தினால், தனது புனைபெயரை உமாசந்திரன் என வைத்துக் கொண்டார். உமாசந்திரன் நீலகிரி மாவட்டத்தில் குந்தா அணைக்கட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, தொழில் நிமித்தம் அங்கே சென்றார். ஒரு மாதம் வரையில் அங்கே தங்கியிருந்து, விஞ்சில் பல தடவைகள் சென்று பலரையும் சந்தித்து உரையாடியபோது கருக்கொண்டதுதான் "முள்ளும் மலரும்" நாவல். நாடகங்களிலும் திரைப்படங்களிலும் நடித்துப் புகழ்பெற்ற பூர்ணம் விசுவநாதன், இவரது உடன் பிறந்த சகோதரர்.

விஞ்ச் ஒப்பரேட்டரான காளியண்ணன், அவனின் தங்கை வள்ளி, இவர்களின் அத்தை அஞ்சலை, பொறியியலாளரான குமரன், குமரனின் நண்பர்கள் வீரமணி கனகா(வீரமணியின் தங்கை), மங்கா, மங்காவின் தாய் வெள்ளாத்தாள், காளியண்ணனின் நண்பர்கள் முனியாண்டி மாயாண்டி இவர்கள் நாவலின் முக்கிய பாத்திரங்கள்.

காளியண்ணன் முரடன், திமிர் பிடித்தவன், அதிகம் படிக்காவிடினும் தான் செய்வதே சரியானது என்று நம்புவன். தனது தங்கை வள்ளி மீது கொண்ட பாசம், அவளே வாழ்வு என்ற கோலம் அவனுடையது. குமரன் சுருளியாற்றுத்திட்டப் பொறியியலாளராக அங்கே வருகின்றான். ஏற்கனவே தன் இஷ்டப்படி உடும்புக்கொட்டகையில் இருந்து விஞ்ச் ட்ராலியை இயக்கிக் கொண்டிருந்த காளியண்ணனுக்கு, குமரனின் கட்டுப்பாடுகள் பிடிப்பதில்லை. இருவரும் முரண்பட்டுக் கொள்கின்றார்கள்.

காளியண்ணனும் வள்ளியும் எப்படி அனாதைகளாக அங்கு வந்து சேர்ந்தார்களோ, அதே போல மங்காவும் அவளது தாயார் வெள்ளாத்தாளும் அங்கு வந்து சேர்கின்றார்கள். காளியண்ணன் அவர்களுக்கு அடைக்கலம் குடுக்கின்றான். மங்கா அடக்கமுடியாத புள்ளிமான், துணிச்சலான பெண், எந்நேரமும் அடங்காத பசி அவளுக்கு. வள்ளியும் மங்காவும் சிநேகிதர்கள் ஆகின்றனர். முள்ளிமலைக்காடு, வீரன் வாய்க்கால், கன்னிமலையென சுற்றித் திரிகின்றார்கள். கௌரி அம்மன் கோவிலுக்கு தரிசனம் செய்கின்றார்கள். ஆறு, நீலமலை, அணைக்கட்டு, சம்பா நீர்த்தேக்கம் போன்ற இயற்கைக் காட்சிகளுடன் நாமும் பயணிக்கின்றோம். மனதிற்கு இதம் தரும் இயற்கைக் காட்சிகளினால் குளிர்ந்து போகின்றோம்.

மங்கா அடிக்கடி காளியண்ணனைச் சீண்டியபடி இருப்பாள். ஒரு நாள் காளியண்ணன் உடும்புக்கொட்டகையில் வேலை செய்து கொண்டிருக்கும்போது அவனின் மணிக்கூட்டைத் தூக்கிக்கொண்டு ஓடிவிடுவாள். காளியண்ணன் மங்காவைத் துரத்தியபடி உடும்புக்கொட்டகையை விட்டு அதிக தூரம் சென்றிருப்பான். அந்த நேரம் பார்த்து வள்ளி அங்கே வருகின்றாள். ட்ராலியை மேலே இயக்கு வதற்கான மணி ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. காளியண்ணன் அங்கே இல்லாததால் பதறிப்போய் தானே விஞ்சை இயக்குகின்றாள். விஞ்சில் மேலே வந்த குமரன் நடந்தவற்றை அறிந்து கொள்கின்றான். அதற்குள் காளியண்ணனும் அங்கே வந்து சேர்ந்துவிடுவான். காளியின் உதாசீன குணத்திற்காகத் திட்டித் தீர்க்கின்றான் குமரன். காளியின் நடத்தையையிட்டு அவனுக்கொரு எச்சரிக்கைக் கடிதம் குடுக்கின்றான். பவர் ஹவுசிற்கு வேலைக்குப் போகின்றவர்களைத் தவிர மற்றவர்களை ட்ராலியில் ஏற்றக்கூடாது என்று தடை உத்தரவு போடுகின்றான். இதுவரை காலமும் செங்குத்தான மலைச்சரிவில் இறங்குவதற்கு, பலரையும் தனது விஞ்ச் ட்ராலியின் மூலம் ஏற்றியிறக்கிக் கொண்டிருந்த காளியண்ணனை ஒருவரும் பிழை சொல்வதில்லை. புதிதாக வந்த எஞ்சினியர் குற்றம் சுமத்துகின்றார் என மனதுக்குள் மறுகுகின்றான் காளியண்ணன். வீட்டிற்கும் போக மனமில்லாமல் தவிக்கின்றான்.

இருளர்கள் வசிக்கும் முள்ளி மலைக் குடியிருப்பான காத்தான் கடவில் அன்று "வள்ளி திருமணம்" கூத்து நடக்கவிருப்பதாக அறிந்து அங்கு செல்கின்றான். கூத்தில் நம்பிராசன் வேடத்தில் நடிப்பவனுக்கு இயலாமல் போகவே காளியண்ணன் அவனது பாத்திரமேற்று நடிக்கின்றான். புலி ஒன்றின் தாக்குதலால் அங்கே ஒரு கையை இழக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திரைப்படத்தில் இந்தக் காட்சியை இயக்குனர் மகேந்திரன் சற்றே மாற்றியமைத்திருப்பார். காளியை, 10 நாட்கள் வேலையை விட்டு நிறுத்தியிருப்பார் குமரன். காளி, குமரன் மீது கொண்ட ஆத்திரத்தினால் குடித்துக் கூத்தாடிவிட்டு வீதியில் விழுந்து கிடப்பான். அப்போது அவன் மீது ஒரு டிரக் வண்டி ஏறி இறங்குவதால் அவன் கை ஒன்றை இழக்கின்றான்.)

ஒருதடவை பெரும்மழை பெய்து அணைக்கட்டு உடையும் தறுவாயில் இருந்தபோது, குமரன் அதன் நீரைத் திறந்து வெளியேற்றும் முயற்சியில் ஆபத்தில் மாட்டிக் கொள்கின்றான். அந்த நேரம் வள்ளி குமரனை ஆபத்தினின்றும் காப்பாற்றுகின்றாள். குமரனுக்கு, வள்ளி மீது ஒருதலைப் பட்சமாக காதல் அரும்புகின்றது. குமரன் வள்ளியை விரும்புவதை மாயாண்டியின் மனைவியான அங்காயி காளியண்ணனுக்குப் போட்டுக் குடுத்துவிடுவாள்.

காளியண்ணன், குமரன் மீது கொண்ட ஆத்திர அவசரத்தில், வள்ளியை முனியாண்டிக்குத் திருமணம் செய்து வைக்க விரும்புகின்றான். பெட்டிக்கடை வைத்திருக்கும் தறுதலையான முனியாண்டியை, பரிசம் போடுவதற்காக வீட்டிற்கும் அழைத்து வருவான். அந்த இடத்தில் மங்கா குறுக்கே பாய்ந்து பரிசுத்தட்டைத் தட்டிவிடுவாள். (இந்தக் காட்சி நாவலிலும் திரைப்படத்திலும் காளி ஒரு கையை இழந்த பின்னர் வருகின்றது. இயக்குனர் மகேந்திரன் - காளி ஒரு கையை இழக்கும் வரைதான் தான் நாவலை வாசித்ததாகக் குறிப்பிடுகின்றார். அத்தோடு நாவலை நிறுத்துவிட்டு படமாக்கியதாகக் குறிப்பிடுவார். அப்படியாயின் திரைப்படத்தில் எப்படி அந்தக் காட்சி, நாவலில் வருவது போன்று அச்சொட்டாக வர முடியும்? மகேந்திரனின் கூற்று சற்று முரண்பாடாகத் தெரிகின்றது.)

பரிசம் போட்ட செய்தியை மங்கா குமரனுக்குச் சொல்லிவிடுவாள். குமரன் காளியண்ணனின் வீடுவரை வந்து வள்ளியைப் பார்த்துப் பேச விரும்புகின்றான். திருமணம் முற்றான விடயத்தைக் காளி சொல்லி, குமரனை வள்ளியிடமே கேட்கச் சொல்லுவான். வள்ளி மௌனமாக நின்று கண்ணீர் வடிப்பாள். வள்ளியைத் திருமணம் செய்ய காளியண்ணன் சம்மதிக்காததால், குமரனின் பாதை திசை மாறிப் போகின்றது. சங்கிலி ஒன்றை வாங்கி வள்ளிக்கு திருமணப்பரிசாக மங்காவிடம் குடுத்துவிட்டு, குமரன் தனது நண்பன் வீரமணியின் பாதையில் ராணுவ சேவைக்குப் புறப்படுகின்றான். ராணுவ எஞ்சினியரான குமரன், இமயமலை எல்லையில் சீனர்களுடன் நடக்கும் யுத்தகளத்தில் பணி புரிகின்றான்.

முனியாண்டிக்கும் வள்ளிக்கும் திருமணநாள் நெருங்குகின்றது. முனியாண்டிக்கும் மாயாண்டியின் மனைவி அங்காயிக்கும் கள்ளத்தொடர்ப்பு இருக்கின்றது. இது காளிக்குத் தெரியாதது. அங்காயிக்கு முனியாண்டி வள்ளியைத் திருமணம் செய்வதில் துளியும் விருப்பமில்லை. ஹகுமரன் மூலம் வள்ளி கர்ப்பமாகிவிட்டாள்" என்ற புரளியை அவிட்டு விடுகின்றாள். முனியாண்டி இரவோடு இரவாக அங்காயியையும் கூட்டிக்கொண்டு ஊரைவிட்டு ஓட்டமெடுக்கின்றான்.

காளியண்ணனை மங்கா திருமணம் செய்கின்றாள்.

குமரன் மார்பில் காயம் பட்டு இராணுவ வைத்தியசாலைக்கு வருகின்றான். அங்கே டாக்டராகப் பணிபுரியும் அகிலாவைச் சந்திக்கின்றான். அகிலா ஒருதலைப் பட்சமாக குமரனை விரும்புகின்றாள். குமரன் தன்னுடைய நிலையை அகிலாவுக்குத் தெளிவுபடுத்துகின்றான். அப்புறம் குமரனின் நண்பனான வீரமணியின் மரணம், சீன இந்திய யுத்தம் சற்றுத் தணிந்த நிலையில் குமரன் இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெறுதல், புதிய வேலை ஒன்றில் சேருதல் எனக் கதை திசைமாறிப் பயணிக்கின்றது.

நாவலின் இறுதிப் பகுதியாக - குமரன் தன் புதிய வேலையைப் பொறுப்பெடுக்க முன்னர் மீண்டும் ஒருதடவை சுருளியாற்றுத் திட்டத்தைப் பார்க்க விரும்புகின்றான். மூன்று வருடங்களின் பின்னர் அங்கே பயணிக்கின்றான். வள்ளியின் கையில் ஒரு குழந்தையைக் கண்டதும் குமரன் அதிர்ச்சியடைகின்றான். வள்ளி ஒன்றும் சொல்லாமலே சென்றுவிடுவாள். மங்காவைச் சந்தித்தபோது, அது மங்காவின் குழந்தை என்றும், மங்கா காளியண்ணனை மணம் புரிந்துகொண்டாள் என்பதையும் அறிகின்றான் குமரன். முனியாண்டி இரவோடு இரவாக ஊரைவிட்டு ஓடிச் சென்றதால் வள்ளியின் திருமணம் தடைப்பட்டுப் போனதென்று தெரிந்து கொள்கின்றான். வள்ளி இன்னமும் திருமணம் செய்யவில்லை என்பது குமரனுக்கு அதிர்ச்சியைத் தருகின்றது.

காளியண்ணன் அப்போதும்கூட குமரன் மீது காழ்ப்புணர்வு கொண்டிருந்தான். ஆனால் வள்ளி இப்போது எதற்கும் துணிந்தவளாகி விட்டாள். குமரனைத் திருமணம் செய்யும் நோக்கில் மங்காவையும் கூட்டிக்கொண்டு கௌரிஅம்மன் கோவிலுக்குப் புறப்படுகின்றாள். கௌரிஅம்மன் கோவில் பிரசாதத்தட்டில், முன்பு மங்காவிடம் வள்ளிக்குக் குடுத்திருந்த சங்கிலி இருந்ததைக் கண்டு அதிசயிக்கின்றான் குமரன். அதை எடுத்து வள்ளியின் மாங்கல்யம் இதுதான் எனச் சொல்லிக்கொண்டு அவளின் கழுத்தில் கட்டிவிடுகின்றான் குமரன். பூசாரி அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்கும்போது கோவில் மணி அடிக்கின்றது. எல்லோரும் திரும்பிப் பார்க்கின்றார்கள். அங்கே காளியண்ணன் மணி அடித்தபடி நிற்கின்றான்.

திரைப்படம் நாவலின் அசல் வடிவம் அல்ல. பல மாறுதல்களைக் கொண்டது. குறிப்பாக குமரனின் பூர்வீகம் பற்றி நாவலில் வரும் விலாவாரியான தகவல்கள் திரைப்படத்தில் இல்லை. அதே போல காளி / வள்ளியின் ஆரம்பக் காட்சிகள் நாவலில் இல்லை. கூடுதலாக - நாவல் காளியண்ணன், மங்காவின் அகால மரணங்களுடன் முடிவடைகிறது. இவற்றையெல்லாம் மகேந்திரன் தனது திரைக்கதையில் சேர்க்கவில்லை. நாவலுக்கும் திரைப் படத்துக்கும் பெருத்த வேறுபாடுகள் இருந்தபோதிலும் - இரண்டுமே சுவை நிறைந்தவையாகவே உள்ளன.

திரைப்படத்தைப் பார்த்து காளி (ரஜனிகாந்) மீது ரசனை வைத்திருந்தவர்கள், நாவலை வாசிக்காமல் இருப்பதே நல்லது என்று ஆரம்பத்தில் கூறியிருந்தேனல்லவா! அதற்குக் காரணம் - நாவலில் காளியண்ணன் ஒரு போதும் தனது இயல்பை மாற்றிக்கொள்ளவில்லை. முள்ளாகவே இருந்துவிடுகின்றான். அதுவே அவனுக்கு வினையாகவும் முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபாஷினி துவராஜ்

# வலிகளைத் தாண்டிய வாழ்வு



சொர்க்கம் பூமிக்கு வந்தது போல சந்திரா மாமி வீட்டு உள்மண்டபம் அழகாய் காட்சி அளித்தது. அனைத்தும் இயற்கைப் பூக்கலாளான அலங்கரிப்பு. வீட்டின் தூய்மையும் அழகும் அங்கே ஒரு விழா நடக்க போகுது என்பதை சுட்டிக்காட்டியது. அதனை பறை சாற்றுவது போல சந்திரா மாமியின் இளைய மகன் தர்சன் வானொலிப் பெட்டியில் பாடல்களை போட்ட வண்ணம் இருந்தான். இன்னும் சற்று நேரத்தில் நிலா வந்தவுடன் விழா தொடங்கி விடும். வேறொன்றுமில்லை, அது சந்திரா மாமியின் மூத்த மருமகளின் வளைகாப்பு விழா. இந்தியாவில் தான் அதிகம் வளைகாப்பு விழா நடப்பதுண்டு. ஆனால் சந்திரா மாமியின் மருமகளின் ஆசையின் காரணமாக மாமி வீட்டாரே ஒழுங்குபடுத்தினர். அங்கே மெல்லிசை சின்னச் சின்ன வேலைகளைப் பார்த்து செய்து கொண்டிருந்தாள். ஓரளவான கூட்டம். கொஞ்சப் பேருக்குத் தான் மாமி சொல்லியிருந்தா ஆனால் எல்லோரும் குடும்பத்துடனே வந்தனர். விழா பார்க்கும் ஆசையோ? என்னவோ. சிலர் வீட்டுக்கு வெளியிலே சிறிதாகப் போடப்பட்ட பந்தலிலேயும் இருந்தனர். நான்கு மணி அளவில் நிலா வரவழைக்கப்பட்டாள். நிலாவும் அவள் கணவனும் அவர்களுக்கென அலங்கரிக்கப்பட்ட கதிரைகளில் இருந்தனர். ஆராத்திகள் எடுக்கப்பட்டு ஒவ்வொருவராக நிலாவுக்கு மஞ்சள் பூசி காப்புப் போட்டு விட்டார்கள்.

மெல்லிசை தனது நான்கு வயதான பெண் குழந்தையுடன் அவர்கள் மத்தியிலே நின்றிருந்தாள். மெல்லிசை பார்ப்பதற்கு சற்றுக் கறுப்பானாலும் அவள் கையில் இருந்த குழந்தையின் முகம் பௌர்ணமி நிலவு போல மிகவும் பிரகாசமாக இருந்தது. மெல்லிசையைப் பார்த்து "அம்மா நாங்கள் எப்போது நிலா அக்காவுக்கு சந்தனம் பூசுவது" எனக்கு கேட்ட வண்ணம் இருந்தாள். "அது பெரிய ஆட்கள் பூசுவது நீங்கள் இல்லை சாத்விகாக் குட்டி" "இல்லை அம்மா நான் பூசேனும்" என்று அடம் பிடித்தாள் சாத்விகா. "சரி சரி நீங்கள் பூசலாம்" என்ற வண்ணம் தன் பிள்ளை சாத்வீகாவின் நெற்றியில் முத்தமிட்டாள் மெல்லிசை. அப்போது மெல்லிசையின் காதில் மெல்ல அந்தச் சொற்கள் எத்துப்பட்டன. மெல்லிசை அந்தப் பக்கம் திரும்பவில்லை. ஆனால் நிலாவைச் சுற்றி நின்ற அந்தக் கூட்டத்தில் அவள் பற்றிப் பேசுவது யாரென குரலிலே பிடித்துக் கொண்டாள். அது கொஞ்சம் பழக்கப்பட்ட குரல். அந்த நேரத்திலே தான் சாத்விகாவும் "தண்ணீர் தண்ணீர்" எனக் கேட்ட வண்ணம் இருந்தாள். மெல்லிசையும் சாத்விகாவுக்கு தண்ணீர் எடுத்துக் கொடுக்க குசினிக்கு போனாள்.

அவளுக்கு பழக்கப்பட்ட குசினி தண்ணீரை எடுத்து சாத்திகாவுக்கு கொடுத்தாள் சுற்றும் முற்றும் சுற்றிப் பார்த்தாள். யாரையும் காணவில்லை. சந்திரா மாமியும் பந்தலில் யாரோடோ கதைத்துக் கொண்டிருந்தார். குசினி பின்வாசலால் எட்டிப் பார்த்தவள். சாத்விகாவை தூக்கிய வண்ணம் சந்திரா மாமியின் பின்வாசல்ப் படலையால் நடக்கலானாள். வீட்டை வந்தடைந்தவள் வீட்டின் கேற்ரை சாத்திவிட்டு வீட்டு கதவை திறந்து உள்ளே போய் உள்ளிருந்து வீட்டுக் கதவையும் பூட்டினாள். சாத்விகாவோ "அம்மா நிலா அக்காவிற்கு நாங்கள் சந்தனம் பூசல, காப்பு போடல வீட்ட வந்துட்டோம். ஏன் அம்மா வாங்கோமா போவோம் வா அம்மா... வா அம்மா..." என்ற வண்ணம் இருந்தாள். "அப்பா போன்ல கதைச்சவர் அவரும் வாறாராம். அவரும் வர சேர்ந்து நாங்கள் போவமே, அது மட்டும் நீங்கள் விளையாடிக் கொண்டிருங்க" என்றாள் மெல்லிசை. "ஜாலி... ஜாலி... அப்பா வாராரு" என்று துள்ளிக்குதித்தாள் சாத்விகா. பின்பு தன்பாட்டில் அவள் விளையாட ஆரம்பித்தாள்.

சாத்விகாவை பார்த்த வண்ணம் இருந்த மெல்லிசை தன் கடந்த கால வாழ்வை மீட்டிப் பார்க்க முற்பட்டாள். இன்றைக்கு பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பாரதி சொன்ன நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் எதற்கும் அஞ்சா நெஞ்சமும் கொண்ட பெண்ணாக வலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களில் ஒருத்தி மெல்லிசை. தமிழ் இனத்தின் விடியலுக்காய் ஆயுதம் ஏந்திய பெண்களில் இவளும் ஒருத்தி பின்னாளில் காலில் சிறு காயமும் பட்டு யுத்தம் முடிந்த பின்பு முன்னாள் போராளி என விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு புனர்வாழ்வின் போது மீண்டும் குடும்பத்துடன் இணைந்தவள். யுத்தத்தில் தந்தையையும் சகோதரியையும் இறந்தது கூட இவள் மீள்குடியேறிய பின்பு தான் அறிந்தாள்.

மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தில் நிறுவனங் களால் அளிக்கப்பட்ட உதவியால் இவர்களது குடும்பம் வாழ்க்கையை தொடங்கியது. பின் தம்பியின் உழைப்பில் மெல்லிசையும் அவள் தாயும் வாழும் போது சிறிது காலத்தில் தாய் இவளுக்கு மாப்பிள்ளை தேடும் படலத்தை ஆரம்பித்தாள். சில நாட்களின் பின் பக்கத்து ஊரில் தடுப்பு முகாமில் இருந்து வந்த நந்தன் என்பவருக் கும் இவளுக்கும் திருமணம் பேசப்பட்டது. தடுப்பி லிருந்து வந்து திருமணம் வேண்டாம் என்று இருந்த நந்தன் குடும்பத்தின் கட்டாயத்தினாலும் மெல்லிசை பற்றி அறிந்ததனாலும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டான். மெல்லிசையும் நந்தன் உடன் திருமணத் திற்கு சம்மதம் கூறினாள். இரு வீட்டாரின் சம்மதத்துட னும் திருமணம் நிறைவேறியது. பின்னர் அவர்கள் நந்தனின் சொந்த ஊரான கிளிநொச்சிக்கே குடியேறி விட்டார்கள். நந்தன் உயர்தரம் வரை கல்வி கற்று உயர் தரம் சித்தி அடைந்துள்ளதால் தகுதிக்கேற்ப தனியார் கம் பெனி ஒன்றில் சிறு வேலையும் பெற்றுக் கொண்டான்.

இவர்களின் வாழ்வு இனிதே நகர்கின்ற வேளை யிலே தான் அவர்களது வாழ்விலே பெரும்புயல் வீசத் தொடங்கியது. இவர்களுக்கு திருமணம் முடித்து பல மாதங்கள் ஓடி வருடங்கள் ஆகியும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. மெல்லிசை கையேந்தாத கடவுளும் இல்லை, அவள் போகாத கோயிலும் இல்லை. இருந்தும் கடவுள்கள் ஏனோ பாராமுகமாகவே இருந்தனர். நாளடைவில் நந்தனிற்கும் உடம்பு நோகின்றது, நரம்புகள் இழுப்பது போல இருக்கின்ற என சிறுசிறு நோய்களை அவ்வப்போது கூறினான். மெல்லிசை நந்தனை ஒரு வைத்தியரிடம் கூட்டிச்சென்று காட்டிய போது வைத்தியர்களின் ஆலோசனையின் பெயரில் நந்தனுக்கு உடல் முழுவதும் ஸ்கான் செய்யப்பட்டது. வைத்தியப் பரிசோதனையின் அடிப்படையிலே அவனது நரம்புகள் தேய்வடைந்து இருப்பது தெரிய வந்தது. குடும்பத்தவர் அனைவரும் கலங்கி நின்றனர். வைத்தியர்கள் நரம்பு தேய்வடைந்ததன் காரணம் இவரது உடலில் மிகுந்த அடிகள் பட்டுள்ளது என்றனர். என்ன நடந்தது எனக் கேட்டனர்.

அப்போது தான் நந்தன் தன் தடுப்பு முகாமில் அனுபவித்த இன்னல்களைச் சொன்னான். "நான் யுத்த முடிவில் இராணுவத்தில் சரணடைந்த போது என்னைப் புலியா? என கேட்டார்கள். நான் இல்லை என உண்மை கூறினேன். ஆனால் அவங்கள் என்னை நம்ப மறுத்தாங்க புலி என ஒத்துக்கொள் எனக்கூறி தினம் தினம் எனக்கு பல்வேறு சித்திரவதைகள் செய்தாங்கள். அடிச்சாங்கள், உதைச்சாங்கள் உயிர் போகும் வலியை அனுபவித்தேன். ஆனால் நான் வீட்டை வந்த பிறகு ஏன் இதை உங்களுக்கு சொல்லேல ஏனென்றால் என் மொத்த குடும்பமும் உடைந்து விடுவீங்க எண்டு தான். ஆனால் அவங்கள் அடிச்ச வலி மாறிடும் என்று நினைச்சன். சில நேரம் உடம்புக்க ஊசியால யாரோ தைப்பது போல இழுக்கும். வீட்ட வந்திட்டன் தானே நாளடைவில மாறிடும் என்று இருந்திட்டேன். அது இப்படி காயமாக இல்லாமல் உட்காயமாக நரம்புகள் பாதிக்கப்பட்டது எனக்குத் தெரியாது" எனக் கூறி உடைந்து போனான். "என்ர நரம்புகள் செயலிழந்து கொண்டிருக்கின்றது என்று தெரிந்திருந்தால் நான் முதல்ல உங்களுக்கு சொல்லி யிருப்பன். அதோடு ஒரு காலமும் திருமணம் செய்யவும் சம்மதித்திருக்க மாட்டேன். என்னால் மெல்லிசை வாழ்வும் அழிந்துவிட்டது" என அவன் கலங்கத் தொடங்கினான்.

தன் கணவன் கலங்கி நிற்பதை பொறுக்க முடியாத மெல்லிசை "தெரியாமல் நடந்த விசயத்திற்கு சும்மா யோசிக்காதையுங்கோ. நான் இப்ப சந்தோஷமாகத்தான் இருக்கின்றேன். உங்களுக்கு ஒரு வருத்தமும் இல்லை" என அவள் அவனைத் தேற்றினாள். அத்தோடு அவனது நோய் களை தீர்க்க வைத்தியர்களையும் அணுகி சிகிச்சைகளுக்கு அவனை அனுப்பினாள். இதன் போது வைத்தியர்கள் சொன்ன இன்னுமொரு உண்மை அவர்கள் வாழ்வில் பெரும் மாற்றத்தை கொண்டு வந்தது. நந்தனுக்கு நடந்த சித்திரவதையில் அவன் ஆண்மைத்தன்மையும் குறை வடைந்துள்ளது. அதனால் உங்களுக்கு குழந்தை பிறப்ப தற்கான வாய்ப்பு முப்பது சதவீதமே சாத்தியம் என்றார் கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல மேலும் அவர்களுக்கு துன்பமே வந்ததால் நந்தன் கலங்கி நின்றான். தன்னால் மெல்லிசை வாழ்வும் சீரழிந்து விட்டது என தினம் தினம் வருந்தினான். அவளிடம் அடிக்கடி மன்னிப்பும் கேட்டான்.

அவள் அவனது நிலை பற்றி யாருக்கும் சொல்ல வில்லை. அத்தோடு நமக்கு ஒன்றுமில்லை நாம் நன்றாகத் தான் வாழ்கின்றோம் நந்தனுக்கும் தைரியமூட்டி வந்தாள். யாரோ செய்த பிழைக்கு தன் கணவன் வருந்தக் கூடாது என மெல்லிசை முடிவெடுத்தாள். தனக்கு வேண்டிய எல்லாம் செய்த நந்தனை மகிழ்விக்க ஒரு குழந்தையை தத்தெடுப்போம் என ஆலோசனை வழங்கி னாள். நந்தனையும் சம்மதிக்க வைத்து சட்டரீதியாக ஆறு மாதமே முடிந்த அனாதைக் குழந்தை சாத்விகாவை தத் தெடுத்தனர். நந்தனுக்கும் உரிய முறைப்படி சிகிச்சைகள் தற்போது நடைபெறுகின்றன. இருப்பினும் அவனது நோயை முற்றாகக் குணப்படுத்த முடியாது என வைத்தியர்கள் கூறியுள்ளனர்கள். இப்போது இவர்கள் மகிழ்வாக வாழ்கின்றனர். இருந்தும் சில பேர் அவ்வப் போது அவள் மீது அக்கறை போல கதைத்து அவர் களுக்கு சொந்தக் குழந்தை இல்லை எனக் குத்திக் காட்டுவதும், குத்தும் முட்களை போன்ற சொற்களை மெல்லிசை மீது விட்டெறிவதுமுண்டு. ஆனால், அவள் எதையும் கண்டு கொள்வதில்லை. இந்த சமூகத்துக்கு முகம் கொடுக்கும் வகையில் தன் பிள்ளை சாத்வீகாவை வளர்க்க வேண்டும். என்பதே அவள் குறிக்கோள். இருந்தும் அவள் சில நிகழ்வுகளுக்கு போவதை தவிர்த்து இருந்தால். ஆனால் இன்று சந்திரா மாமி வீட்டு நிகழ்வு இவள் முதலே போய் மாமிக்கு உதவிகள் பல செய்து கொடுத்திருந்தாள். இவள் சிலவேளை நிகழ்வுக்கு வர மாட்டாள் எனத் தெரிந்து "விழாக்கு கட்டாயம் வர வேண்டும்" என்று மாமி கட்டளை போட்டு விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் மாமி கட்டாயப்படுத்தியதாலும் அவள் திருமணம் செய்து கிளிநொச்சி வந்ததிலிருந்து மாமி இவளுக்குப் பல வேளைகளில் ஆறுதலாக இருந்ததையும் கணக்கில் கொண்டே அங்கு சென்றாள். இவளும் நந்தனும் அவசரமாக வெளியில் போகும் போது கூட சாத்வீகாவை சந்திரா மாமி வீட்டிலே தான் விடுவதுண்டு. சந்திரா மாமிக்கு ஐம்பத்தி மூன்று வயது தான் ஆனால் அவ நாகரிகமான மனிசி இவையள் சாத்வீகாவைத் தத்தெடுக்கும் போது கூட மாமி தான் உறுதுணையாக நின்றவா. இவர்களின் முடிவை ஆதரித்தவா. இவள் பற்றி யாரும் தேவையில்லாமல் கதைப்பது மாமி காதில் பட்டால் அவர்களுக்கு ஏசிடுவா. இவள் பற்றி மட்டுமில்லை யார் பற்றியும் தேவையில்லாமல் கதைப்பது மாமிக்குப் பிடிக்கா. இன்று மாமி வீட்டிலேயே "பிள்ளை பெற முடியாத மலடிக்கு ஒரு ஊர் பெயர் தெரியாத அனாதைக் குழந்தை. இதுகளை சந்தனம் பூச விடக்கூடாது" என்று விழாவுக்கு வந்த நிலாவின் சகோதரி அயலின் நின்ற அவளின் உறவினருக்கு சொல்லி முகம் சுழித்தது காதில் படவே சாத்விகாவை அழைத்து வீடு வந்தாள் மெல்லிசை.

"சந்திரா மாமி தேடுவா தான் ஆனால் என்ன செய்ய எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தாலும் சில பேரின் சொற்கள் வெந்த புண்ணில் வேல் பாய்வது போல் அல்லவா இருக்கின்றது. இந்த இனத்திற்காகவா அன்று நான் பல தியாகங்களை செய்தேன். இல்ல எல்லோரும் அப்படி இல்ல நம் இனத்தில் இருக்கும் சிலர் தான் இப்படி" மெல்லிசை தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு இருக்கையிலே வெளி கேற் திறந்து சத்தம் கேட்டு திடுக்கிட்டு ஜன்னல் ஊடாக பார்த்த மெல்லிசை நந்தன் வருவதை புரிந்து கொண்டு கண்ணில் வந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு உள் வீட்டின் கதவை திறந்து விட்டாள். பின் சாத்விகாவுடன் விளையாடுவது போல வேஷம் போட்டாள். யுத்தம் முடிந்தும் கயவர்கள் சிலர் செய்த சித்திரவதையால் யுத்தத்தின் வடுக்கள் போல யாருக்கும் தெரியாமல் உயிர்போகும் உடல் வலியை அனுபவிக்கும் தன் கணவனின் வலி அவளால் நன்கு புரிய முடியும். அதனால் தான் சில சில்லறை மனிதர்கள் நரம்பற்ற வாயால் சொல்லும் சொற்களை அவள் அவனிடம் சொல்வதில்லை. உள்ளே வந்த நந்தன் சாத்வீகாவுடன் விளையாடிக் கொண்டிருக்கின்ற மெல்லிசையை பார்த்து

"என்னம்மா சந்திரா மாமி வீட்ட போகலையா?"

"இல்லையுங்கோ போட்டு வந்துட்டேன்."

"என்ன மெல்லிசை முகம் வாடி இருக்குது ஏதன் கவலையாக இருக்கிறாயோ"

"ஒன்றும் இல்லையுங்கோ கொஞ்சம் வேலை அலுப்பு. அங்க பங்ஷன் முடிஞ்சுது அதுதான் நான் வந்திட்டன்" என்றாள்.

"சரி வெளிக்கிடு புளியம்பொக்கனைக் கோயில்ல திருவிழா நடக்குது போய் கும்பிட்டு கடைகளுக்கும் போயிட்டு ஆறுதலா விடிய வருவோம்"

"நிஜமாவா என்னத்தில போகப் போறோம்."

"அதெல்லாம் நான் அரெஞ் பண்ணுறன் கெதியா வெளிக்கிடுங்கோ" என்றான். அவளும் அப்படியா இப்ப வெளிக்கிடுறன். சாத்வியாவையும் வெளிக்கிடுத்துறேன் என்றாள்.

"அப்பா கோயிலுக்கா நானும் வாறன்" என்றாள் சாத்வீகா

"பிள்ளையையும் கூட்டிற்றுத் தானே போவோம்"

"ஆனால் அப்பா கண்டிப்பா நீங்கள் விளையாட்டுச் சாமான் வாங்கித் தரவேணும்" என இளவரசி தந்தைக்கு கட்டளையிட்டாள். "பிள்ளைக்கு இல்லாததோ", "சரி சரி நேரம் போயிட்டு வாங்கோ வெளிக்கிடுவோம்" என்று மெல்லிசை சாத்விகாவை வெளிக்கிடுத்த கூட்டிச் செல்கின்றாள். "எனக்கு தெரியும் என்ர மெல்லிசைக்கு ஏதோ கவலை அவள் ஒருபோதும் எனக்கு சொல்ல மாட்டாள். நான் யோசிக்க கூடாது என்று. அதைத் திருப்பிக் கேட்டு மீண்டும் அவளைக் கவலைப்படுத்தாமல் சந்தோசமாய் கோயில் போட்டுவருவோம். மனதுக்கு அமைதியாவும் இருக்கும். ஆனால் நான் இருக்கும் மட்டும் அவளைக் கலங்க விடமாட்டேன்" என நினைத்தவாறு நந்தன் குளித்து வெளிக்கிடச் சென்றான். அவளுக்காக இவனும் இவனுக்காக அவளும் இருவர்களுக்காக சாத்வீகாவும் என்று வாழும் இவர்கள் குடும்பத்தில் மலடி, அனாதை, ஊனம், வருத்தக்காரன், என்னும் வார்த்தைகளுக்கு அகராதியில் அர்த்தமேயில்லை. காலங்கள் பல காயங்களைக் கொடுத்தாலும் அத்தனையையும் தாண்டி சிரித்த முகத்துடன் இன்பமான வாழ்வை வாழும் பீனிக்ஸ் பறவைகள் இவர்கள்.

---

## அறிக!

பஞ்சம்பசி வந்தும், பாய்ந்து சமர் தின்றும்,
பாறவில்லை மண்ணின் அழகு.
பாறையிடை நன்னீர் ஊறும் நில ஈரம்
பச்சையுடை போர்க்குந் தனக்கு.
கொஞ்சும் கடல் செல்வம் கொட்டும் உயர்வானம்
கொண்டுதரும் சொர்க்க அமுது.
கோவில் குளம் எங்கள் குலவிழுமி யத்தின்
குற்றம் கெட வைக்கும்...உணரு!
உண்மையொடு நேர்மை கொண்டது நம் கொற்றம்
ஊழிபல தாண்டி மிளிரும்.
ஒளிரும் அடையாளம், ஓங்கும் தனித்தன்மை,
உள்ள... "நிறமூர்த்தம்" அருளும்.
திண்மையொடு வீரம், செல்வம், கலை, ஞானம்,
சேரும் "பரவணியின்" வழியும்.
சின்னத்தனம் கொஞ்சம் உள்ளதெனும் போதும்
சிதைந்தழிந்த தில்லை உறவும்.
தெய்வம் அருள்நல்க, தேவர்களும் வாழ்த்த
தீரர்களின் ஈகம் கவிய...
செம்மை அறம் காக்க, சேரும் கலை ஆர்க்க
செந்நெறியில் செல்வோர் நிறைய...
பொய்யுரைக்க, தீமை செய்ய, பிழையின்பின்
போக, நினையாதோர் பெருக...
போலிகளின் பின்சென் றோய்ந்தழிந்தி டாது
புத்துயிர்க்கும் எம்மண்...அறிக!

- த.ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தில் வாழும் படைப்பாளி கே.ஆர்.டேவிட் நினைவுப்பகிர்வு



மு.அநாதரட்சகன்

சமீபகாலத்தில் மனதுக்கு நெருக்கமான மூத்த எழுத்தாளுமைகள் இவ்வுலகை விட்டு விடை பெற்றுச் செல்கிறார்கள். அவர்களது நினைவுகள் மனதை அலைக் கழிக்கிறது. அண்மைய நாட்களில் நினைவு களைச் சுமந்தலைய வைத்த மரணம் கே.ஆர். டேவிட்டினது.

கடந்த *24.02.2025* அன்று அவர் காலமானார். அன்று மதியம் அவரது மரணம் பற்றி மகன் அகிலன் கைபேசியில் சொன்னார். கேட்ட கணத்தில் நல்லதொரு தோழமையை இழந்த அதிர்ச்சி என்னை ஆட் கொண்டது. மனதளவில் தேற்றிக் கொள்ள இயலாத தவிப்பு அது. அந்த மரணம் என்வாழ்வில் நிகழ்ந்த சகிக்க முடியாத அபத்தத்தின் நிறுவல் போலாகிவிட்டது.

வைத்தியசாலையில் இறுதியாகப்(*22.02.2025*) பார்க்கையில் மூச்சு வாங்கச் சிரமப்பட்டுக் கொண்டிருந் தார். கண்கள் வீங்கிப்போயிருந்தார் அருகில் மௌனித் துப் போய் நின்றேன். அவரோ எப்போதும் போல சிரித்தார். என்னோடு நிறையவே பேச வேண்டும் என்ற ஆவல் முகத்தில் தெரிந்தது. இலக்கியம்பற்றி அரசியல்பற்றி, சமூகம்பற்றி நிறையவே பேசுவோம் என்பது போலிருந்தது. பார்வைதேறி வருவார் என்ற திருப்தியே எனக்கிருந்தது. நம்பிக்கையுடன் காத்திருந்தேன். பார்க்கிற வேளைகளில் டேவிட்டின் நேசகரமான கண்கள் பலதையும் பேச முயன்றன. அவருக்கிருந்த திருப்தியை உடல்மொழி சொல்லியது. நான் விடைபெறும்போது அவரது நிதானமான உறுதி யான தலையசைப்பு இன்னும் மனதை அலைக் கழிக்கின்றது.

ஏறக்குறைய முப்பத்தைந்து வருடத் தொடர் பல்லவா எனக்கிருந்தது. எவ்வளவோ பேசினோம், விவாதித்தோம், கூடித்திரிந்தோம். எப்படி மறப்பது டேவிட்டை.

கே.ஆர்.டேவிட் மானிடத்தை நேசித்தவராக, மக்கள் இலக்கியவாதியாக, பற்றுக்களை அறுத்த சமூகப் போராளியான இன உணர்வு கொண்ட சர்வதேச வாதியாக பன்முக ஆளுமையுடன் வாழ்ந்த ஒருவர். டேவிட் இனிமையான மனிதர் என்று சொன்னால் அவரு டன் பழகியவர்கள் ஒப்புக் கொள்வார்கள். இளவதில் அவர் எதிர்கொண்ட சாவல்கள், நெருக்கடிகள் பற்றி என்னிடம் பகிர்ந்திருக்கிறார். அச்சவால்களை வெற்றி கொண்ட முழுமையான நிறைவு அவரிடமிருந்தது.

ஒருவர் எத்தகைய சிந்தனைகளைத் தன்னள வில் கொண்டிருக்கிறார் என்பதில்தான் அவரது வாழ்வின் வெற்றியிருக்கிறது. அப்படித்தான் டேவிட் குறித்தும் நினைவுகளை அசை போடுகிறேன். நிறைவான குடும்ப வாழ்வு அவருக்கு ரட்சித்திருந்தது. மனைவி றோஸ் மலரின் இழப்பு அவரை வெகுவாகப் பாதித்தது. இறுதி வரை அதிலிருந்து விலக முடியாமலிருந்ததை அவதானித்துள்ளேன். மனைவி நோயுற்ற வேளைகளில் நிழல்போல் பின்தொடர்ந்து கண்காணித்ததை நேரில் பார்த்திருக்கிறேன். குடும்பத்தை நோகாமல் காத்து நின்றவர் டேவிட் குடும்பத்தில் உறவுகளிடம் அதீத வாஞ்சை காட்டியவர்.

அநேகமாக மாலைவேளைகளில் தான் எமது சந்திப்பு நிகழும். உரையாடலில் மிகுந்த ஈடுபாடு காட்டுவார். கதை சொல்வது போல வாழ்வனுபவங்களை ரசித்தும் நுணுகியும் சொல்லிக் கொண்டே போவார். அதில் அவருக்குரிய அங்கதச் சுவைக்கு குறைவிருக் காது. அடிக்கடி சிகரெட் புகைக்கும் பழக்கமுள்ளவர் டேவிட். என்னைக் கண்டவுடன் மகிழ்ந்து போய் முகம் மலர்வார். உரையாடல் நடுவே தேநீர் வரும். துணைவி யார் இறந்தபின் மருமகள் காயத்திரி கொண்டு வந்து தருவார். குடித்த பின்னர் எழுந்து சென்று சிகரெட் பெட்டியுடன் வருவார். எனக்கும் நீட்டுவார். புகைத்தலின் சுகானுபவத்தை அனுபவித்தபடி உரையாடுவார். உற்சாக மிகுதியால் அதிர்ந்து சிரித்து இருமும்போது எனது கண்டிப்பினையும் உள்வாங்கிக்கொண்டே மெல்ல குரலைத் தாழ்த்தி உரையாடலை நகர்த்துகின்ற நினைவை பார்க்க முடியாது. முடிவில் சிகரெட் பட்டை இரண்டு விரல்களுக்கிடையில் வைத்து பெருவிரலால் சுண்டுவதில் ஒரு அழகிருக்கும். பழக்கத்தின் லாவகம் தெரியும். இதனைவேறுயாரிடமும் நான் கண்டதில்லை.

டேவிட்டின் எழுத்துக்களில் அவருடைய அனுபவ ஆழத்தின் பாதிப்புகள் இருக்கும். ஏழைகளின் கண்ணீருக்குள் கருவைத்தேடியவர். அம்மக்களின் கண்ணீரின் சாட்சியமாக அவரது புனைவுகள் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை நம்பகமாக நுட்பமாக வெளிக்கொண்டு வந்ததில் முதன்மையானவர். ஏழைகளின் ஒதுக்கப் பட்டவர்களின் பாடுகளை புறநிலையாக சித்திரிப்பதில் வல்லவராக இருந்தார். புறவுலகைச் சித்திரிக்கும் மொழித்திறனும் கற்பனை வளமும் அவரிடம் நிறைவா கவே இருந்தது. அவற்றிலெல்லாம் டேவிட்டின் குரலும் ஓங்கி நிற்கும். இதனைக் குறையாகப் பார்பவர்களு முண்டு. அதையெல்லாம் அலட்டிக் கொள்ள மாட்டார் டேவிட். கதையின் உருவப் பிரக்ஞையிலும் பெரிதும் அக்கறை கொள்ளாதவர். மக்களது யதார்த்த வாழ்க்கையே இன்னும் முழுமையாகச் சொல்லப்பட வில்லை என்ற நியாயத்தை முன் வைப்பார். அவ்வகை யில் டேவிட்டின் கதைக்களமும், புலமும் யதார்த்த வகையிலான விளிம்புநிலை மக்களது வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பு என்பேன்.

கே.ஆர்.டேவிட்டிடம் ஓவியங்களை ரசிக்கின்ற கலாரசிகத்தன்மை இருந்தது. அவர் ஒரு பிரதிமை ஓவியர் என்பது பலரும் அறியாதது. காலத்தின் குரல் கலையின் வழியாகவே ஒலிக்கிறது என்பதை உணர்ந்த வர். சஞ்சிகைகளில் வரும் படங்களைப் பார்த்து ரசனையை வெளிப்படுத்துபவர். குறிப்பாக, ஜீவநதி இதழ்களின் அட்டைப்படங்களைப் பார்த்து வியந்து கதைப்பார்.

மனிதனை அவனது வர்க்கப்பின்னணியில் வைத்துப் பார்ப்பதை முக்கியமாகக் கருதியவர் டேவிட். அதனால், ஒடுக்கப்பட்டவர்களின் ஜீவனை உயிர்ப்புடன் அவரால் சிருஷ்டிக்க முடிந்தது. சமூக நிர்ப்பந்தங் களுக்கும் தனிமனித அபிலாசைகளுக்குமிடையிலான முரண்பாட்டின் முடிவில் தனி மனிதனை சமூகம் பழி வாங்கிவிடும் அவலத்தைச் சொல்வதுதான் டேவிட்டின் கதைகள். அதற்கேற்ப, கதாபாத்திரங்களை தன் உணர்வுடன் உருவாக்கி விடும் திறன் அவரின் சிறப்பு.

டேவிட் சமூக மாற்றத்தை விரும்பியது இயல்பானதுதான். அதனைச் செப்பனிட உருவான மாக்சிச தத்துவத்தையும் அதன் செயலுருவான இயக்கங்களையும் நம்பிக்கையுடன் ஏற்று இயங்கியவர். ஈழத்து தமிழர்களது விடுதலை குறித்தும் இணக்கமான போக்கு அவரிடம் இருந்தது.

தூரப் பயணங்களெனில் ஒன்றாகவே பயணிப் போம். வடமராட்சியில் நடைபெறும் நிகழ்வுகளுக் கெல்லாம் என்னுடன் வருவார். கூட்ட நிகழ்வுகள் எதிலும் நல்லவற்றையே பார்ப்பவர். இளம் எழுத்தாளர்களை பாராட்டி ஊக்குவிப்பது டேவிட்டிடம் நான் கண்ட பெருங்குணம். யார் மீதும் அவதூறுகளை முன் வைக்க மாட்டார். மெலிதான நகைச்சுவையுடன் எதிர்வினை களைக் கடந்து விடுவது அவரது இயல்பு.

அண்மையில் ஒருவர் என்னை "தோழர்" என விளித்தார். கேட்டபோது மனது நிறைந்து போனது. இன்று அதை நினைக்கையில் நிறைவாக ஒருவரை "தோழர்" என அழைக்கக்கூடிய தகுதியில் கே.ஆர். டேவிட் வாழ்ந்திருக்கிறார்.

எனது நண்பர் தோழர் கே.ஆர்.டேவிட் எம்முடன் இல்லாத இத்தருணம் அவர் பற்றி எழுத விளைவது எனது வாழ்வில் துயரமான சந்தர்ப்பம் ஆகும். நான் பழகிய வரை நம்பிக்கையுடன் இன்னும் வாழ நினைத்தவர். வாழ்வில் இலக்கியத்தில் தான் சாதித்து விட்டதான பெருமிதம் அவருக்கிருந்தது. அவரது மகன்மார் நன்றாக வந்து விட்டார்கள் என்கிற நிறைவு டேவிட்டுக்கு இருந்தது. இந்த மனமகிழ்ச்சியை இன்னும் சிறிது காலம் அனுபவித்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. என்ன செய்ய முடியும். எம்விருப்பங்கள் எண்ணிறந்தவை. ஆனால் காலமோ கருணையற்றது. அது விநாடிக்கு விநாடி அகாலமாக கழிந்து போகிறது. ஆனால் கே.ஆர்.டேவிட்டின் நினைவுகளோ நிலையானவை.

---

## புலிவால்

ஞானம் பெற்ற தேரரை
நாடென்ன செய்கிறது?
நாள் நாள் உள்ளே தள்ளுகிறது
ஐந்தாம் நாள்
வெளியே விடுகிறது
அரசுக்கும் "புலிவாலை
பிடித்த கதைதான்"
போங்கோ

## செங்குருதியாகும் காவிகள்

மஞ்சள் நிறம் வெளுத்து
வெள்ளையாகி...
உள்ளே உறையும்
உண்மை ஞானத்தை
உலகுக்கு உரைத்தால் சரி
இங்கே மஞ்சள் எலாம்
செங்குருதி உறிஞ்சி
கோரமாய் மாறுவதோ
கொடுமையிலும் கொடுமை.

## அறியாமை

நாடெங்கும் நாள்தோறும்
புதிதுபுதிதாய் முளைக்கிறது
கருணையின் சின்னங்கள்
மாற்றான் தோட்டத்திலும்
மன்னரின் நிலத்திலும்
பூட்சுகளின் இரும்பு பிடியிலும்
தொப்பிகளின் நிழலிலும்
அவ்அருக்கள் நிலை கொள்கின்றன
தர்மமோ தலைகுனிந்திட
அதர்மமோ ஆர்ப்பரிக்கிறது
ஞானத்தை போதித்தவனின்
கண்களில் வடிவது கண்ணீரல்ல
அது இரத்தம் என்பதை
அவர் பாத வழித்தடம்
செல்வோர் அறியாதே
மயங்குகிறார்

– மொழிவரதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. இரவீந்திரன்

# நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து



4

எந்தவொரு அமைப்பும் பிரச்சினைகளை முகங் கொள்ளாமல் நேர்சீரான பாதையில் முன்னேறி வந்த தில்லை. காலையடி மறுமலர்ச்சி மன்றம் அரை நூற் றாண்டைக் கடந்த பின்னரும் முனைப்புடன் இயங்கி வருகிறது என்றால் அதற்குள்ளே முரண்பட்ட மோதல் களைச் சந்திக்காமல் இந்த விருத்தி சாத்தியப்பட்ட தில்லை. ஏற்பட்ட முரண்பாடுகளை எவ்வாறு முகங் கொண்டு தீர்வைக் கண்டடைந்தவாறு முன்னேறி வந்திருக்கிறோம் என்பது தான் பிரதான விடயம்.

அவ்வகையில் மோதல் ஒன்றை முகங் கொண்ட போது அதனை வெற்றிகரமாகக் கடந்து செல்ல முன்னெடுத்த நடைமுறை வாயிலாக எப்படித் தொடர்ந்தும் முன்னேறினோம் என்பதற்கு உரியதாக முன்னர் காலையடி முருகன் விளையாட்டுக் கழகத்தில் (கே.எம்.வி.கே.) இல் பெற்றிருந்த அனுபவம் முன்னு தாரணமாக அமைந்திருந்தது. பாடசாலைகளில் பார்வையாளர்களாகப் பார்த்ததோடு அமைதி கண்டு விடாமல் கே.எம்.வி.கே.யில் நாங்களே நடாத்திய விளையாட்டுப் போட்டிகளை வருடந்தோறும் முன் னெடுத்து வந்திருக்கிறோம் அத்தகைய ஒன்று 1972 ஆம் ஆண்டில் மிக வெற்றிகரமாக நிறைவேறி இருந்தது. ஒட்டுமொத்தமாக, பரிசில் பெற்றவர் பெறாதவர் என்ற பேதமின்றிச் சிறப்பாக நிகழ்வை நடாத்தி முடித்த வெற்றிக் களிப்பில் மிதந்தோம்!

கண்ணூறு படுவது என்பார்களே, அதுபோல ஒரு சம்பவம் பரிசளிப்பின் போது இடம்பெற்றிருந்தது. பரிசுக்காக வைத்திருந்த இலங்கைத் தயாரிப்பான நல்ல தொரு மைப்பேனா (ஓம், அப்போது எமது நாடு பல பொருட்களை இந்த மண்ணிலேயே உற்பத்தி செய்து சுயசார்புடன் வீறுநடை போடத் தொடங்கி இருந்தது) காணாமல் போயிருந்தது. அதைக் கூட வெற்றிகரமாகக் கடந்து மாற்று நடவடிக்கை ஊடாக (வேறு பரிசை வழங்கி) தீர்வு கண்டிருந்தோம்.

என்றாலும், "எப்பவோ முடிந்த நியதிப் பிரகாரம்" எங்களுக்குள் ஒரு மோதல் வருவதற்குக் காணாமல் போன பேனா காரணமாக வந்தமைந்தது. தொடர் வளர்ச்சியை உறுதியுடையதாகச் சமைப்பதற்கு, முரண்கள் ஏற்படுவதும் அதன் கூர்மைப்படலில் எவ்வாறு அதனைக் கையாண்டு மீட்சி பெற்று விருத்தி பெறுவதனைக் குறியாக முன்வைத்து இயங்குகிறோம் என்ற பயிற்சி அவசியம். அவ்வறன்றி மேலிடக் கட்டளைக்குப் பணிந்து இயங்கும் அமைப்பு விரைவில் காணாமலும் போகும். அந்த நியதிப் பிரகாரம் எமது அமைப்புக்கான இயக்கப் போக்கும் அந்தப் பேனா ஊடாகப் பயிற்றுவிக்க முற்பட்டது.

முந்திய நாள் நடந்தவை என்னென்ன என்று அடுத்த நாள் சாவகாசமாக 16,17,18 வயதுகளினூடாக வளர்ந்து வரும் பொடிப்பயல்கள் நாங்கள் ஒன்றுகூடி, விளையாட்டு நடந்த அந்த வெற்றிமட மைதானத்தில் கதைத்துக்கொண்டு இருந்தோம். "வெற்றி தோல்வி பற்றி அலட்டிக்கொள்ளாத உண்மையான விளையாட்டுப் போட்டியின் இலட்சியப்படி நடந்து முடிந்திருக்கிறது" என்ற கதை வந்தபோது, "நாங்கள் அப்படிக் கவலைப் படாமல் இருந்திருக்கலாம் பரிசு கிடைக்காத சிறுவர் பிரிவுத் தம்பி அழுது கொண்டு வந்து தன்னிடம் முறைப் பாடு வைத்த போது எங்களில் ஒருவரான அண்ணா தான் காணாமல் போன அந்தப் பேனாவை எடுத்துக் கொடுத் திருந்தார்" என்று முந்திய நாள் சம்பவத்தை சொல்லி வைத்தனர் குறித்த அண்ணா அப்போது அங்கு இல்லை. அன்றைய சபையில் இந்தக் கதை களைகட்டுகிற விடய மாயிற்று. அதனை நேரில் தானும் பார்த்தேன் என்று ஓரிருவர் சாட்சிக்கும் முன்வந்தனர். அப்படிக் கண்கண்ட சாட்சிகள் உள்ளனர் என்றால் ஆளைக் கழகத்தில் இருந்து விலக்க வேண்டியதுதானே என்பதும் பேசுபொரு ளாகி, ஒருவகையில் விலக்குதல் என்பது தீர்மானமாகவும் ஆகிவிட்டது!

அந்தச் சின்ன வயதில் குற்றம் சாட்டப்பட்ட வரைத் தீர விசாரித்து முடிவுக்கு வர வேண்டும், அதற் குரிய நிர்வாகக் கூட்டம் முறையாக நடாத்தப்பட்டு இருப்பது அவசியம் என்ற விவகாரங்கள் எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தவறொன்று நடந்திருந்தால் கூட திருந்துவதற்கு இடமளிக்கும் வகையில் பரிகார நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதை எல்லாம் நீங்கள் சிந்தித்து இருக்கவில்லை. ஒரு சுவாரசியத்துக் குக் கூட ஓரிருவர் "பேனாவைக் கையாடியவரைக் கண்ணால் கண்டோம்" என்று சொல்லி இருக்கவும் வாய்ப்புண்டு. அத்தகைய அனுபவம் பின்னாலே எனக்கு ஏற்பட்டது பற்றி உரிய இடத்தில் சொல்லிவைப்பேன்!

இந்தச் சபைச் சுவாரசியம் நடந்த அன்றைய பொழுதில் கழகத்துக்கு சமூகமளிக்காதிருந்த அந்த நண்பர் தன் மீது விதிக்கப்பட்ட "உறுப்புரிமை நீக்க" முடிவுக்கு எதிராக முழு முயற்சியில் இறங்கினார். கண்கண்ட சாட்சி என்றவர்கள் உட்பட பலரையும் சந்தித்து உரையாடி நீக்கும் முடிவை வாபஸ் பெற வைத்துவிட்டார். அடுத்தடுத்த நாட்களில் அவரை விலக்கியதாக அறிவிக்க வேண்டும் என்று கழகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரிடம் நான் முறையிட்டேன். அப்போது கழகத்தின் செயலாளராக நானும் தலைவராக சந்திரனும் இருந்தோம். சந்திரனிடமும் அவர் கதைத்த காரணத்தால் விலக்கும் எண்ணத்தில் இருந்து தலைவரும் பின்வாங்கி விட்டார்.

தவறொன்றுக்குத் தண்டனையாக விலக் கலைத் தீர விசாரிக்காமலே நடைமுறைப்படுத்தியாக வேண்டும் என்று நான் விடாப்பிடியாக நின்றதாலோ என்னவோ குற்றம் சாட்டப்பட்டிருந்த அந்த நண்பரான சிவபாலன் என்னிடம் தனக்கான நியாயங்கள் பற்றி விளக்க முற்படவில்லை. எனது முரட்டுத்தனமான பிடிவாதம் அவரை அவ்வாறு என்னிலிருந்து விலக்கி வைத்தது. அது பற்றிய புரிதலின்றி விடாது விலக்கலை வலியுறுத்தி அழுங்குப் பிடியாக நின்றேன்.

அந்த வயதில் தலைவருக்கும் என்னைச் சமாதானம் செய்யத் தெரியவில்லை. விருத்தி பெறாத நிர்வாகச் செயற்பாடு தான் அப்போது இருந்தது அதனைக் கூட்டி சிவபாலனுடன் என்னையும் உரை யாடச் செய்திருந்தால் நானும் எல்லோரையும் போல சமாதானம் ஆகியிருப்பேன். அவ்வாறில்லாமல், "விலக்க வேண்டும் என்று பெரும்பான்மையான உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கோரிக்கையைத் தந்தால் மட்டுமே கழகத்தில் இருந்து அவரை நீக்க முடியும்" என்று சந்திரன் சொல்லியதன் பேரில் கோரிக்கை ஒன்றை எழுதி எல்லோரிடமும் கையெழுத்து வைக்கும்படி கேட்டுப் பார்த்தேன்.

எவரொருவரும் கையொப்பம் இடவில்லை. பெரும் அவமானமான உணர்வுக்கு உள்ளானேன். அவர் மீது அத்தகைய குற்றச்சாட்டை நான் முன்னதாகத் தொடங்கி இருக்கவில்லை. அப்படி ஏதும் நடந் திருக்குமா என்ற எந்தவொரு அசூசையும் எனக்கு ஏற் பட்டு இருக்கவில்லை. கண்கண்ட சாட்சி என்றவர்கள் உட்பட, அப்படி என்றால் அவரை விலத்த வேண்டும் என வாதிட்டவர்கள் வரை அனைவருமே கையொப்பமிட மறுத்தது என்பதை என்னால் ஏற்கவியலாமல் இருந்தது. "கழகத்தை நீங்கி என்னால் வாழவே முடியாது" என்ற சிவபாலனின் ஓர்மம் தான் எல்லோரையும் எனக்குத் "துரோகம் இழைக்கத்" தூண்டியது என்ற புரிதல் அப்போது எனக்கு ஏற்படவில்லை.என்னை எல்லோரும் அவமதித்துவிட்டார்கள் என்ற வெப்பிசாரம் என்னைச் சூழ்ந்து அழுத்தியது.

அவரை விலக்க வேண்டும் என்று எழுதிய மகஜரைவிட மிக வேகமாக என்னுடைய விலகல் கடிதத்தை எழுதிச் சந்திரனிடம் ஒப்படைத்துவிட்டு கழகத்தில் இருந்து வீட்டுக்குச் சென்றேன். இடையே வேலியில் இருந்த பொட்டுக்கு ஊடாகக் கடந்தால் என் வீடு அந்தக் குறுகிய கடப்புக்கு எத்தனை பெரிய சக்தியை எனக்குள் திரட்டி இருந்திருக்க வேண்டும்? எனது உயிரின் அங்கமென்று வளர்ந்த ஒன்றை வெட்டி யெறிந்துவிட்டுச் சவம்போல மீளுவதென்றால்... இனி நான் என்பதென்ன?

எல்லாம் இழந்த சடம்போல நடமாடிச் சில நாட்கள் பித்துப் பிடித்தவனாக வீட்டில் கிடந்தேன். என்னைவிட மூன்று வயதுகள் குறைந்த தவராசா பக்கத்து வீட்டிலுள்ள கழக உறுப்பினர். அவர் தான் அடிக்கடி வந்து "எல்லோரும், நீங்கள் திரும்ப வந்து சேர்ந்து இயங்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் பிடிவாதம் பிடிக்காமல் வாருங்கள்" கேட்டுக்கொண்டு இருந்தார். "கழகத்தில் இனிக் கடைசி வரை சேர மாட்டேன்" என்று வீம்புடன் சொல்லிவிட்டேன்.

தான் கட்டி வளர்த்த அமைப்பை விட்டு விலகித் தன்னால் இருக்க இயலாதென்ற சிவபாலனின் பிடிவாதம் ஏன் என்னிடம் ஏற்படவில்லை? பின்னால் மன்றமாக இயங்கிய ஒரு நாளில் அவரது தாய் வந்து "இஞ்சை இருந்து வீண் பொழுது போக்காமல் வீட்டுக்கு வா" என்ற போது, "இஞ்சை இருக்கக் கூடாது என்றால் வாசிக சாலைக்குப் போகட்டோ?" என்று சிவபாலன் கேட்ட போது அவரது தாயார் எதுவும் பேசாமல் போய்விட்டார். நானும் அந்த இடத்தில் இருந்தேன். வயதான அந்தத் தாய்க்கும் மன்றத்தில் இருப்பதன் பெறுமதி விளங்கி இருந்தது. அதனாலே தான் எதுவும் கூறாமல் அவ்விடத்தை விட்டு நீங்கிப் போனார்!

சிவபாலனை நீக்கும்படி விடாக்கண்டனாக நான் இருந்ததன் தவறையும், பட்டென்று கோபங்கொண்டு வெளியேறிய எனது அவசரக்குடுக்கைத் தனத்தையும் பின்னாலே ஒப்பிட்டுப் பார்த்த போது அமைப்பின் உயிர்ப்பான பிணைப்புக்கு அவர் கொடுத்த அத்தனை பெரிய முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள இயலு மாக இருந்தது. இது காலங்கடந்த ஞானம் தான். மன்றத்தில் இளைஞர்களாகத் துடிப்புடன் இயங்கிய காலத்தில் இந்தப் புரிதல் ஏற்பட்டுவிடவில்லை.

அத்தகைய புரிதலை, கனடாவில் குலேந்திரன தும் எனதும் குடும்பங்களை வரவேற்று நடாத்திய ஒன்று கூடல் நிகழ்வுக்கு (2013) உரிய மண்டபத்தில் நன்றியுரை ஆற்றிய போது வெளிப்படுத்தி இருந்தேன். அவ்வப்போது சிற்சில மோதல் எவரிடையேயும் ஏற்பட்டாலும் மன்றத் தில் எல்லோரும் ஒற்றுமையாக இருந்த போதிலும் நானும் சிவபாலனும் பின்னர் தொடர்ந்து மல்யுத்தம் செய்கிறவர்களாக இருந்திருக்கிறோம். அத்தகைய தவறைப்பற்றிக் கனடாவில் இடம்பெற்ற அந்தக் கூட்டம் நிறைவுற்றுச் சாப்பாட்டையும் முடித்த பின்னர் நண்பர்கள் ஒன்றுகூடிக் கதைத்துக் கொண்டிருந்த போது சொன்னேன் சிவபாலன் அப்போது என்னை ஆரத் தழுவியபடி இருந்தார். "நானும் சிவபாலனும் எப்பவும் அடிபடுவோம், சண்டையின் உச்சத்தில களைச்சுச் சோர்ந்து போய் ஆராவது விலக்குப் பிடிக்க மாட்டாங் களோ எண்ட ஏக்கத்தோடை நாங்களே இதுக்கு மேலை முடியாது எண்டு விலகிற வரை ஒருத்தரும் வர மாட்டீங்கள்" என்ற உடன் சிவபாலன் சொன்னார்: "சண்டையை மூட்டிவிட்டுக் கொழுவ வைக்கிறதே இவங்கள் பார்த்து ரசிக்கத்தானே, பிறகேன் விலக்குப் பிடிக்க வரப்போறாங்கள்?"

கூடியிருந்த கனடா மன்றக்கிளை நண்பர்கள் உட்பட சண்டைக்காரச் சோடிகள் நாங்களும் சிரித்து மகிழ்ந்தோம். ஒன்றுகூடிய சிறார் விளையாட்டுகளில் இத்தகைய மல்லுக்கட்டல்களும் நல்ல உடல் - உளப் பயிற்சி ஏற்பாடுகள் தான்!

ஒருவகையில் காணாமல் போன பேனா விவகாரத்தில் அவரைக் கோர்த்துவிட்டது கூட ஓரிரு நண்பர்களால் சுவாரசியத்துக்காக கட்டிவிடப்பட்ட கதையாக இருக்க வாய்ப்புள்ளது. என்ன நடந்திருந்தா லும் நன்மையை நோக்கி வளர்த்தெடுப்பதனை இறுதி இலக்காக மாற்றுவதனை நண்பர்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் என்பது மெய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்துபோகிற விவகாரங்களைப் பலரும் விளையாட்டாக எடுத்துக் கொண்டு, அடுத்தடுத்த வளர்ச்சிகளில் கவனம் குவிப்பதனை அப்போது என்னால் அப்போது புரிந்துகொள்ள இயலவில்லை. ஒவ்வொன்றையும் தீவிரமானதாக எடுத்து, அதனுள் உறையும் உள்குத்துகளுக்கு அர்த்தம் தேடும் முயற்சியில் இறங்கும் "விஞ்ஞானப்" புத்தி என்னோடு ஒட்டி வருவதைத் தவிர்க்க முடிந்ததில்லை.

ஆரம்பத்தில் சினிமா நாட்டம் மேலோங்கத் தொடங்கிய காலத்தில் சிவாஜி கணேசன் மீது தீவிர ரசிக மனப்பாங்குக்கு ஆட்பட்டது தொடர்பாகவும் நண்பர்களால் விமரிசிக்கப்பட்டு இருந்துள்ளேன். அதீத சோகங்களைக் காண விரும்பாத எனது இயல்புக்கு எம்.ஜி. ஆர். ரசிகனாகத்தான் வந்திருக்க வேண்டும். கலை உணர்வுப் பிரகாரம் பாத்திரப்படைப்பைச் சிறப்பான நடிப்பில் வெளிப்படுத்துவது சிவாஜி தான் என்று முறைப்படுத்திய ரசிக மனப்பாங்கை எனக்கு ஏற்படுத்தியது சந்திரன் அதனை உணர்த்தி, அளவோடு விலகி இருக்க அவரால் இயலுமாக இருந்ததைப் போல என்னால் முடிந்ததில்லை் நான் தீவிர ரசிகனாக மூழ்கியவனாக சிவாஜி கணேசனை ஆராயும் முற்பட்டிருந்தேன். பின்னர் கட்சி ஈடுபாட்டிலும் அளவு கணக்கின்றித் தன் நாமம் கெட்டு அலைகிறேன் என்ற கண்டனத்துக்கும் உள்ளாகி இருக்கிறேன்.

அவை பற்றிப் பின்னாலே பேசிக்கொள்ளலாம். கழகத்தில் திரும்ப வந்து சேர மாட்டேன் என்று பித்துப் பிடித்து மூர்க்கம் காட்டியவன் மீண்டும் வெற்றி மடத்துக்குள் நுழைந்து அந்த இடத்தையும் எங்களையும் மன்றமென நாமம் பெற வைத்த வைபோகங்கள் எவ்வாறு நடந்தேறின எனும் செயலொழுங்குள் பற்றி அடுத்த சந்திப்பில் பேசிக்கொள்வோம்!

(தொடரும்)

# கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் கவிதைகள்

## வாண வேடிக்கையோ?

வாழ்க்கைச் செலவு குறையுமென
கனவு கண்டார்கள் ......
இன்னொரு செலவையே
வைத்து விட்டார்கள்!

ஆயிரக்கணக்கான நோயாளிகளின்
வயிறு வெடிக்கும்படி
வைத்து விட்டார்கள்!

இன்சுலினை வெட்டி
தேர்தல் பரிசாக
இன்னொரு செலவையும்
வைத்து விட்டார்கள்!

இந்த நாட்டில்
பதவிக்கு வரும் எவரும்
உதவிக்கு வருவதில்லையென்பதை
உறுதிப்படுத்தி விட்டார்கள்!

காட்டியது வாண வேடிக்கையோ?
எல்லாம் இப்போது
வானத்தில் வெடிக்குதோ?

## பொய்களே மனிதனுக்கு ...

நாளை தருவதாக
கடன் வாங்குகிறோம்
நாளை நாளை என்றே
நாள் கடத்துகிறோம்!

பொய்களை விற்றே
கடன் வாங்குகிறோம்

பொய்களைக் கூறியே
காலமும் கடத்துகிறோம்
கேட்டு வரும்போது
கம்பையும் நீட்டுகிறோம்
மறந்தது போல் நடித்து
ஏமாற்றி மகிழ்கிறோம்!

பொய்களே மனிதனுக்கு
மெய்களாகிவிட்டன!

## ஷைத்தான்களின் சாம்ராஜ்யம்

காலத்திற்குக் காலம்
புதுப் புதுப் பெயர்களில்
ஷைத்தான்கள் பவனி வருகின்றன!

சொர்க்கத்தைக் காட்டியே
இந்த ஷைத்தான்கள்
மக்களை ஏமாற்றுகின்றன!

ஐந்து வருடங்களுக்கொருமுறை
ஒரு ஷைத்தான் ஓய்வெடுக்க
இன்னொரு ஷைத்தான்
வேலையைப் பொறுப்பேற்கிறது!

நன்றாக வழிகெடுத்த பின்னர்
பழைய ஷைத்தானிடமே
மீண்டும் பொறுப்பு
போய்ச் சேர்கிறது!

இலங்கை
ஷைத்தான்களின் சாம்ராஜ்யமோ?

## குப்பைகளும் தொப்பைகளும்

கோழி கிளறுவதும்
குப்பைகளையே!
தொப்பைகள் கிளறுவதும்
குப்பைகளையே!

குப்பைகளைக் கிளறுவதிலேயே
தொப்பைகளுக்கு இலாபம்!

குப்பைகளின் துர்நாற்றம்
தொப்பைகளுக்கு அத்தர் வாசம்!

குப்பைகள் இருக்கும்வரை
தொப்பைகளுக்கு இலாபமே!

## யதார்த்தம்

ஹஜ்ஜுப் பெருநாளுக்கு
குர்பான் இறைச்சி
வந்து குவிந்தது .....
அரிசி வாங்க வழியில்லை!

ஹாஜியார் ஸ்கூலுக்கு வந்து
சப்பாத்து பங்கிட்டார்.....
பல பிள்ளைகளுக்கு
மாற்றியுடுக்கச் சீருடையில்லை!

புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவனுக்கு
மெடல் அணிவிக்கப்பட்டது .....
காலையில் சாப்பிடாத வயிறு
அதைக் கண்டு ஏங்கியது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

# 16 முடிவைத் தொடுவாய் முயன்று

"நான் கூறக்கூடியவற்றில் மிகப் பெரும்பாலான விடயங்களை நீங்கள் கேட்கிறீர்கள் என்பதால், எல்லாம் திரையில் விழுந்துவிட்டன என்பது பொருளல்ல.

எனது மூளைக்கும் வாய்க்கும் இடையிலான பாதையில் பிரச்சினை இருக்கிறது. மூளை அனுப்பும் செய்திப்பரிவர்த்தனைகள் சில தொலைந்து போகின்றன. எனது குரல் தளர்ந்து போகிறது. சந்தேக மில்லை. நான் கடுமையாக முயலவேண்டி உள்ளது. இங்கு நான் ஒரு புதிய பாதையை மெலிதாகவேனும் போட்டால், அது பெரிய வெற்றி. என்னதான் இருந்தா லும் நான் என்ன சொல்கிறேன் என்பது உங்களுக்கு ஒருபோதும் முற்றாகப் புரியாது."

இது Dyspraxia எனப்படும் ஒருங்கிணைப்பு ஒழுங்கின்மைக் கற்றல் குறைபாடு காணப்படும் ஒரு பிள்ளையின் வாக்குமூலம்.

வளர்ச்சி சார்ந்து வரும் இணைப்புத் தொடர் பான இப்பிரச்சினை ஒருவருடைய நுண்மதியை அதிகம் பாதிப்பதில்லை. ஆயினும் சமநிலை பேணல், விளை யாடுதல், வாகனம் ஓடுதல், பேசுதல் போன்ற நரம்பு இணைப்புக்கள் அதிகம் தேவைப்படும் செயற்பாடு களைப் பாதிக்கிறது அல்லது வெவ் வேறு அளவுகளில் பாதிக்கலாம். முதலிலே குறிப்பிட்ட பிள்ளை சொல்வது போல, மூளையின் செய்திகள் உடம்பின் பலவேறு பகுதி களுக்கும் சரியாகக் கடத்தப்படுவதில்லை என்பதே இங்கு முக்கிய பிரச்சினையாகும்.

இது பிறப்பிலேயே வருகின்றபோது "வளர்ச்சி சார்ந்து வரும் dyspraxia எனப்படுகிறது. இதைத்தவிர மூளைக்காய்ச்சல், பக்கவாதம் போன்ற நிலைமை களால் பிற்காலத்தில் வருமாயின், அது பெற்றுக் கொள்ளும் dyspraxia எனப்படுகிறது. பெண்களைவிட ஆண்களில் இந்த ஒருங்கிணைப்பு ஒழுங்கின்மை வருவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகவே இருக்கிறது. தாயின் கர்ப்ப காலத்தில் 32 வார வளர்ச்சி நிறைவடைய முன் குழந்தை பிறப்பதற்கான அல்லது பிறப்பிப்பதற் கான சூழ்நிலை அமைகிறபோது, அத்தகைய குறை மாதக் குழந்தைகளிலும் இப்பிரச்சினை வருவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும்.

மற்றோர் காரணியாகப் பிள்ளையின் பிறப்பு நிறை காணப்படுகிறது. அது 1.8கிலோ கிராமைவிடக் குறைவாக இருக்கும்போதும் பிறப்பிலேயே இப்பிரச் சினை வருவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும்.

ஏனைய கற்றல் குறைபாடுகளைப்போலவே இதற்கும் பரம்பரை அலகுகளுடன் தொடர்புள்ளது. இக்குறைபாட்டுடன் பிறக்கும் பிள்ளைகளின் வளர்ச்சிப் படிநிலைகளில் - உடம்பு பிரட்டுதல், எழுந்து அமர்தல், தவழுதல், நடத்தல் - தாமதங்கள் ஏற்படலாம். விளை யாட்டுப் பொருள்களுடன் விளையாடும் போதுகூட, இணைப்புத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அது கடினமாகலாம். கையால் சாப்பிடுவதைவிட, முள்ளுக் கரண்டி போன்ற உபகரணங்களைப் பாவித்துச் சாப்பிடுவது சவாலாக இருக்கும். ஓடி விளையாடும் வயது வரும்போது மேல்மாடி ஏறி இறங்குவது பிரச்சினையாக அமையலாம். பொதுவாகவே சமநிலை கடினமாக இருப்ப தால் பொருள்களுடன் மோதுப்படுவதும், அடிக்கடி விழுந் தெழும்புவதும் இவர்கள் வாழ்வில் சர்வசாதாரணமாகும். ஒழுங்கின்றிய செயற்பாடுகளே மிக அதிக அளவில் காணப்படும். பாய்தல், பந்து போன்றவற்றை எறிந்து பிடித்தல், சைக்கிள் ஓடுதல் போன்றவற்றைச் செய்வது முயற்கொம்பாகவே இருக்கும். வாழ்வின் அசாதாரண நெருக்கீடுகளால் எப்போதுமே ஒரு பதற்றம் இவர் களுக்கு அருகில் நிலைகொள்வதால் கைகளையும், கால்களையும் அடிக்கடி அசைத்துக்கொண்டிருக்கக் கூடும். இதனை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒருங்கிணைப்பு ஒழுங்கின்மை இருப்பதால் இவர்கள் உடலுக்கு வேலை கொடுக்காமல் ஓரிடத்தில் இருப் பதையே எப்போதும் விரும்பக்கூடும். இதனால் உடற் பருமன் அதிகரிக்கும் வாய்ப்பும் இருக்கிறது. இது தேவை யற்ற வேறு பிரச்சினைகளுக்கும் இட்டுச் செல்லலாம்.

இவர்களை முகாமை செய்பவர்கள் எத்தகைய தெரிவுகளைச் செய்யவேண்டும்? குறைபாடு இனங் காணப்பட்ட உடனேயே செயற்பாட்டுச் சிகிச்சை அல்லது தொழில் சிகிச்சை வழங்குவது அவசியம். அதன்மூலம் ஒரு குறிப்பிட்ட அசைவைச் சிறு சிறு படிநிலைகளாகப் பிரித்து, செய்யக்கற்றுக்கொடுத்து த் தொடர்ந்து பயிற்சி செய்விக்கவேண்டும். நாள்தோறும் பயிற்சிகள் அமையும்போது சிறு சிறு முன்னேற்றங்கள் அவதானிக்கப்படும். அதேநேரம் உடல் சார் சிகிச்சை என்ற ரீதியில் உடல் முழுவதையும் அடிக்கடி இயங்க வைக்கவேண்டும்.

கிரேக்கம் தொன்மங்களுக்குப் புகழ் பெற்றது. அவற்றில் நாடகங்களும், கவிதைக்காப்பியங்களும் முக்கியமானவை. ஓமர் எழுதிய இரு பெரும் காப்பியங் களில் ஒன்று ஒடிசி. அதன் பின்புலம் திரோயன் போர். இத்தாக்கா என்ற கிரேக்கத் தீவின் அரசனான ஒடிசியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரோயன் போரில் பங்குகொண்டபின் நாடு திரும்புகையில் அல்லது வீடு திரும்புகையில் வழிதவறி மீண்ட ஒரு நீண்ட பயணக்கதை ஒடிசி. இக்காப்பியத்தின் நாயகன் ஒடிசியஸ் உண்மையில் வாழ்ந்த ஒரு பாத்திரத்தைத் தழுவி எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து நிலை. அதே சமயத்தில் ஒடீசிய சுக்கு Dyspraxia இருந்திருக்கக்கூடும் என இப்போது ஆய்வாளர்கள் ஊகிக்கின்றனர்.

*1899* முதல் *1961*வரை வாழ்ந்த பிரபல அமெரிக்க நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், ஊடகவியலாளர், விளையாட்டு வீரர் ஏர்னெஸ்ட் ஹெம்மிங்வே. *7* நாவல்கள், *6*சிறுகதைத் தொகுதிகள், *2* அல்புனைவு நூல்கள் வெளியிட்ட இவர் *1954*ஆம் ஆண்டுக்குரிய இலக்கியத் திற்கான நோபல் பரிசைத் தட்டிக்கொண்டவர். இவரது "பனிப்பாறைக்கொள்கை" *20*ஆம் நூற்றாண்டின் புனைவு இலக்கியத்தில் பெரிதும் செல்வாக்குச் செலுத்திய ஒன்று. பனிப்பாறை ஒன்றின் சிறுபகுதியே கடலுக்கு மேல் தெரிவது. மிகப் பெரும் பகுதி கடலின் கீழ் மறைந்திருப்பது. அதேபோல எழுதப்படும் இலக்கியத்தில் வாசகர் காண்பது மிகச் சிறுபகுதி. பெரும் பகுதி எழுத்தாளரின் மனதிற்குள் மறைந்திருப்பது. இலக்கியத்தில் எழுத்தாளர் பாவிக்கும் நுணுக்கமான சிக்கல்கள், குறியீடுகள் ஆகியவை ஓரளவுக்கு கடலினுள் மறைந்திருக்கும் பகுதிகளைக் காட்டும் என்று சொன்ன இவருக்கும் Dyspraxia இருந்ததாகக் கருதப்படுகிறது.

*1945*இல் எழுதப்பட்ட "விலங்குப்பண்ணை" (Animal farm)யின் நாவலாசிரியர் ஜோர்ஜ் ஓவெல்லை எம்மில் பலருக்கு நன்கு தெரியும். *1903*இல் பிறந்த Eric Arthur Blair இன் புனைபெயரே ஜோர்ஜ் ஓவெல்.ஜனநாயக சோஷலிசத்துக்கு ஆதரவானதும் சர்வாதிகாரத்துக்கு எதிரானதுமான அவரது அரசியல் விமர்சனங்கள், புனைவு இலக்கியங்களைவிடப் புகழ் பெற்றவை. அவருக்கும் Dyspraxia இருந்ததை நம்பித்தான் ஆக வேண்டி உள்ளது. கற்றல் குறைபாடுகளே சிலவேளை மனிதர்களின் நிறைவான திறன்களை முழுமையாக வெளிக்கொணர உதவுகின்றனவோ ?

பிள்ளைகளுக்குக் கற்றல் குறைபாடுகள் இருக்கின்றனவோ இல்லையோ அவர்கள் எல்லோரது தாங்கு திறன்களையும் அதிகரிக்கும் தெரிவைப் பெற்றோரும் ஆசிரியரும் மனதிருத்துவது அத்தியாவசியம். அவர்களோடு மனம் திறந்து உரையாடுவதும் உரையாடச் செய்வதும் எப்போதும் நடக்க வேண்டும். உணர்வுகளை அடையாளம் காணவும், ஏற்றுக்கொள்ளவும், அதுபற்றிப்பேசவும் அவர்கள் எப்போதும் தூண்டப்படவேண்டும் .குடும்ப உறுப்பினர்கள், ஆசிரியர்கள், நண்பர்களுடன் ஆரோக்கியமான, நேரான, இறுக்கமான உறவுகளைப் பேணப் பழக்கப்படுத்தவேண்டும். எந்த ஒரு திறனையும் பயிற்சி மூலமும்,பொறுமை மூலமும் கட்டி வளர்க்கலாம் என்று பிள்ளைகளை நம்பச் செய்யவேண்டும். ஆரோக்கியமான சமநிலை உணவு, போதிய நித்திரை (8மணி நேரம் )ஒழுங்கான உடற்பயிற்சி - நடத்தல், துவிச்சக்கரவண்டி ஓடுதல் - போன்ற உகந்த பழக்க வழக்கங்களைச் மிகச் சிறுவயதிலிருந்தே கட்டி எழுப்பி வருதல் எப்போதும் நன்மை பயக்கும். பதற்றமாகவும், பயமாகவும், கோபமாகவும் உணர்வது ஒன்றும் தவறானது இல்லை என்பதைப்பிள்ளைகள் விளங்கிக்கொள்வதும், தமது சொந்த மறை உணர்வுகள் ஏற்றுக்கொள்ளப்படும், செல்லுபடியாகும் என்பதைப் புரிந்து கொள்வதும் முக்கியமே. பிள்ளை கூறுவதை உற்றுக் கேட்பதற்குப் பெரியவர்கள் எப்போதும் ஆயத்தமாகவே இருக்கவேண்டும். எமது சமூகத்தில் பிள்ளையின் பரீட்சை தொடர்பான வெற்றிகளைப் பாராட்டுவது சில வேளை அளவுக்கு அதிகமாகவே நடப்பதுண்டு. உண்மையில் வெற்றிகளுக்கு மட்டுமில்லை - பிள்ளையின் முயற்சிகளுக்கு உரிய நேர்மீள வலியுறுத்தல் அவசியம் வழங்கப்படவேண்டும். வளர்ந்து வரும் பராயத்தில் சிலவேளை பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளப் பிள்ளைகள்திணறக்கூடும். அந்தச் சமயங்களில் நடிபங்காற்றுதல் மூலம் தாமே தீர்த்துப்பழக உற்சாகப் படுத்தலாம். பின்னர் அதனை உண்மையான வாழ்வில் பிரயோகப் படுத்தலாம். சுவாசப் பயிற்சிகள் , தளர்வுப்பயிற்சிகள் செய்வதில் குடும்பம் ஒன்றாக ஈடுபடலாம். பிரச்சினைகளை உடைத்துப்பார்த்துப்பழகுதல், தேவையானபோது உதவி கோருதல் போன்றவிடயங்களைப் பெற்றோரும் ஆசிரியரும் செய்கிறபோது பிள்ளைகள் அந்த முன்மாதிரியைப் பின்பற்றுவார்கள். மற்றவர்களுடன் உரையாடும்போது நேரான எண்ணங்கள் தெறிப்பதை உறுதிப்படுத்திக்கொண்டால் உள்ளே நடைபெறும் சுய உரையாடலும் நேராக அமையும் என்பதைப் பிள்ளைகளுக்கு அவ்வப்போது எடுத்துக்கூறலாம். நேரான சுய உரையாடலுக்குத் தனி நடிப்புகள் செய்யவும் ஊக்கப்படுத்தலாம்.

தாங்கு திறனை மட்டும் நாம் வளர்த்துக் கொள்வோமாயின் வலிகள் சுதந்திரங்களாகும். பயங்கள் தைரியங்களாகும். வேதனைகள் வலிமைகளாகும். நாம் வளர்த்துக்கொள்வதைப்பார்த்துப் பிள்ளைகளும் பின்பற்றுவார்கள். "பெருமரம் காற்றை எதிர்த்துநின்று முறிந்துபோனது. புல்லோ வளைந்து கொடுத்துப் பிழைத்துக் கொண்டது" என்பதுபோன்ற கருத்தைக் கொண்ட பழமொழிகளும் சிறு கதைகளும் உலகத்தின் எல்லா மொழிகளிலும் உண்டு. அந்த விடயத்தையும் கருத்தில் கொள்ளத்தான் வேண்டும். "என்னைத் தோல்வி அடையச் செய்வதற்காக எது சூழலில் இருந்து வந்தாலும், அதைவிட எனக்குள் இருக்கும் வலிமை பெரியது." என்று நினைத்துக்கொண்டு முடிவுகளைச் செய்வோம்.

ஒரு ஐந்து நிமிடம் முந்தி நித்திரை விட்டெழுதல், ஆரோக்கியமான காலை உணவு உட்கொள்ளல், சிறிய உதவிகளுக்கும் நன்றி கூறுதல், ஒரு பயனுள்ள நூலின் சில பக்கங்களையாவது நாள்தோறும் வாசிப்பது போன்ற சிறு தெரிவுகள் நீண்ட காலத்தில் பெரிய சேர்க்கை விளைவைக் கொண்டுவரும்.

ஒரு மனிதரைக் கண்டவுடன் நல்ல வார்த்தை ஒன்றைக்கூற நாம் எத்தனை பேர் பழக்கப்பட்டுள்ளோம்?

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக்காய் கவர்ந்தற்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறளை நாம் மறந்து வெகுகாலம் ஆயிற்றா? மனிதரையல்ல ஒரு முலையூட்டி விலங்கை, பறவையைக் கண்டால் கூட நல்ல வார்த்தை கூறினால் அவற்றின் மறுதாக்கம் சிறப்பாக இருக்கும். எளிய கலாசார உடையில் எப்போதும் தோன்றுதல் எந்நாளுமே சிறந்த தெரிவு. எங்களைச்சுற்றிப் பல்வகைப் பட்ட ஆளுமையுள்ள மனிதர்கள் வாழுகிறார்கள். அவர்களில் யாருக்கு நாம் மரியாதை கொடுக்கப் போகிறோம்? யாருடன் அதிக நேரம் செலவிடப் போகிறோம்? அதிக அறிவுள்ளவர்களுடனா? அதிக பணம் உள்ளவர்களுடனா? அதிக பலம் உள்ளவர்களுடனா? யார் மனிதகுல மேன்மைக்கு உதவுகிறவர்கள்? யார் மறைமுகமாக மனிதகுல அழிவுக்கு வித்திடுகிறவர்கள்? இவற்றைப்பற்றிய புரிதல் இருக்கும்போது எமது தெரிவுகள் சரியாக இருக்கும். வேறு பலர் செய்வதைப் பார்த்துப்பிரதி பண்ணுபவர்களாக நாம் இருக்கவேண்டியதில்லை.

தொலைக்காட்சியில் எதனைத் தெரிவுசெய்து பார்க்கிறோம்? கணனித் திரையில் எது எமது தெரிவாக இருக்கிறது? ஒரு நாளில் எத்தனை முறை சிரித்தோம்? எத்தனை முறை எரிந்து விழுந்தோம்? எத்தனைமுறை இன்னொருவருடன் ஒத்துணர்வுடன் கதைத்தோம்? எத்தனைமுறை தேவையற்ற விவாதத்தில் ஈடுபட்டு நாம் தான் சரியென நிறுவப்பாடுபட்டோம்? மேலே கூறப்பட்ட பல கேள்விகள் தொடர்பான கவனம் எமது வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும்.

ஒருவர் எடுக்கும் சிறு முடிவுகளே காலப் போக்கில் அவர்களை "அடிமையாதல்" நிலைக்கு இட்டுச் செல்கின்றன என்பது யாவரும் அறிந்த உண்மைதான் என்றாலும் அந்த முடிவை எடுக்காதிருக்க முடியவில்லை எம்மால். பணம் மகிழ்வைக் கொண்டுவராது என்பது நிச்சயம். ஷேக்ஸ்பியர் எழுதிய ஒதெல்லோ நாடகத்தில் இயாகோ என்ற வில்லன் பாத்திரம் ரொட்ரிகோ என்ற பாத்திரத்துக்கு ஆலோசனை சொல்லும் ஒரு நிமிட உரையாடலில் எட்டு முறை "பணத்தை உன் "பொக்கெற்றில்" நிரப்பு" என்று கூறுவான். நாடகத்தின் முடிவில் நல்ல பாத்திரங்கள் எல்லாம் நலிந்துபோவதற்கு அடிப்படைக் காரணமானவன் இந்த இயாகோ தான். அதிலிருந்தே அவனுடைய ஆலோசனைகள் மிகத் தவறானவை என்பது பார்வையாளருக்குப் புரியும். பணத்தை நிரப்பும் முடிவுகளை எடுப்பது எந்தவகையிலும் ஆரோக்கியமானதில்லை என்று மத்திய காலத்தில் ஷேக்ஸ்பியர் போன்ற நல்ல எழுத்தாளர்கள் கூறி ஆறு நூற்றாண்டுகள் சென்ற பின்னும் மக்கள் மத்தியில் அந்த எண்ணமும் முடிவு எடுக்கும் வகையும் பெரும்பாலும் மாறவில்லை.

உலகின் ஒரு இடத்தில் எடுக்கப்படும் சிறிய தெரிவு மற்றோர் இடத்தில் கூடப் பாரியவிளைவை ஏற்படுத்தலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது "வண்ணாத்திப்பூச்சி விளைவு" எனப்படும். கணிதவியலாளரும், வானிலை ஆய்வாளருமான Edward Norton Lorez இன் கருத்துக்களோடும் இந்த வண்ணத்துப்பூச்சி விளைவு ஒத்துப்போகும். உளவியல் ரீதியாக மனித வாழ்வோடும் மிகவும் ஒத்துப்போகும்.

நாங்கள் அடைகின்ற ஒவ்வொரு சிறு வெற்றி வளையங்களையும் மேல் நோக்கி நகர்த்தல் என்பது மற்றோர் திறமையாகும். அப்படி நகர்த்தும்போது பாதுகாப்பு, மனித உறவுகளைப்பேணுதல் ஆகிய வற்றிலும் கவனம் செலுத்தியே தீரவேண்டும்.

வாழ்வில் முன்மாதிரியாக வாழ்ந்துகாட்டும் பெரியோர்களைப் புகழ்மின், தொழுமின், பூப்புனைமின்!

(தொடரும்)

11. 05. 2024 இல், ஒட்டால் என்னும் மலையாளத் திரைப்படக்காட்சியுடன் ஆரம்பமான யாழ்ப் பாணத் திரைப்படக் கழகம், மாதந்தோறும் ஒரு கலைத்திரைப்படமென இதுவரை பத்துத் திரைப் படங்களை இலவசமாகக் காட்டியுள்ளது: கடைசியாக 23. 03. 2025 இல் காட்டிய திரைப் படம் பொன்மணியாகும். 1977 இல் யாழ்ப் பாணத்தில் தயாரிக்கப்பட்ட இத்திரைப்படம் - சீதனம், சாதி, மத வேறுபாடுகளால் உருவாகும் பிரச்சினைகளைச் சித்திரிக்கும் சிறந்த திரைப்படமாகும்! புகழ்பெற்ற தர்மசேன பத்திராஜ இதன் நெறியாளராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடுலாவு காதை பாகம் 2
## நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2

*25*

"புதுக்கணக்கன் சேதி இருக்க இருக்கத் தெரியும், வரண்ட பீ நாத்தம் மழை தூறத்தெரியும்" என்ற பழமொழி லெச்சிமியின் மனதில் வந்தது. அவளது சின்னவயதில் அடிக்கடி கேட்ட பழமொழிதான். மலசலகூடங்கள் பாவனையிலில்லாத அந்தக்காலத்தில் கிராமத்து மக்களின் காலைக் கடன் பாவனையிலிருக்கும் நிலத்திலிருந்து வரும், அதே நெடி இங்கே வீரியமாக ஒரு வெப்பத்தோடு முகத்திலறைந்தது.

மடுவுக்கு இன்னும் மூன்று மைல்கள் இருந்தன. மக்கள் விட்டு வீதியாக ஒரு போத்தல் தண்ணீருடன் இந்தக் காட்டுக்குள் போய்க்கொண்டிருப்பது அங்கங்கே தெரிந்தது. முப்பத்தையாயிரம் மக்களுக்கும் அதிகமாக மடுவிலிருந் தார்கள். ஆயினும் அவர்களது எண்ணிக்கை சரியான கணக்கிலில்லை. பீர்பல் கணக்குத்தான். அதென்ன பீப்பல் கணக்கா?

அக்பர் என்ற மன்னனின் சபையிலே பீர்பல் என்றொரு மதியூகி மந்திரி இருந்தான். நமது தெனாலி ராமனைப்போல, ஒருநாள் மன்னன் தனது வீரர்களை அழைத்து "எமது மண்ணில் எத்தனை காகங்கள் இருக்கின்றன என, கணித்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான். அவர்களும் நாடு முழுதும் அலைந்து, மறுநாள் விபரம் கொடுத்தார்கள். ஆனால் விபரங்கள் ஒவ்வொன்றும் வேறு வேறாக இருந்தன. மன்னன் கோபமடைந்தான். எதுவுமே தெரியாதவனாக பீர்பல் "என்ன விடயம்" என்று கேட்டான். அதற்கு அரசர் தனது ஊரிலுள்ள காகங்களை எண்ணிச் சொல்லச் சொன்ன கதையை சொன்னார். பீர்பல் சிரித்து, அதை ஏன் புதிதாக எண்ண வேண்டும். அதுதான் நான் முன்னமே எண்ணிக் குறித்து வைத்திருக்கிறேனே என்றார்.

அரசன் வியந்து, "எத்தனை" என்றார். பீர்பல், "திட்டமாக மொத்தம் நாலாயிரத்து இருநூற்று எழுபது" என்றார். அரசன், "அதிகமாக இருந்துவிட்டால்..." என்று கேட்க,

"அவை நமது ஊருக்கு விருந்தினராக வந்து இருக்கும்" என்றார். "குறைவாக இருந்தால்." நமது காக்கைகள் அடுத்த ஊருக்கு விருந்தினராக போயிருக்கும்." என்றார். அரசன் வாயடைத்துப் போனான்.

அதே கணக்குத்தான் இங்கேயும், முப்பத்தையாயிரம் மக்களில் அன்றாடம் இந்தியாவுக்கென போய்க் கொண்டிருப்போரும், புதிதாக தம்மை மடுவின் அகதிகளாக பதிய வருவோருமாக கணக்கினை நிரவல் செய்து கொண்டிருந்தார்கள். மடுத்திருப்பதியின் திருவிழாக்காலங்களில் மக்கள் வந்து தங்குவதற்காக கட்டப்பட்டிருந்த அறைகளும் அவற்றுடனான கழிப்பறைகளும் மக்களுக்கு போதவில்லை. எனவே அவர்கள் பக்கத்துக்காடுகளிலும் மூன்று மைல்களுக்கும் அப்பாலும் போய் தமது காலைக்கடன்களை முடித்தார்கள்.

அந்தக் கொடுமையான மணத்தை முகர்ந்தபடி மடுவை அடைந்தனர். தமக்கு தெரிந்த இரண்டொரு வீடுகளுக்கு போயிருந்து கதைத்தார்கள். மாமியின் மகன் ஏற்கெனவே அங்கே குடியிருந்தான் அவனது வீட்டுக்கு போனார்கள். நால்வருக்கும் மத்தியான உணவை அவர்கள் தயாரித்தார்கள். மடுவில் ஒரு கடைத்தெரு இருந்தது. அங்கே சகல பொருட்களும் கிடைத்தன. அவர்கள் கிராமசேவையாளரின் அலுவலகத்தில் சென்று தம்மை அகதியாக பதிந்து கொண்டனர். உடன் உதவியாக அரிசி மாவு பருப்பு பால்மா சீனி என்பன கிடைத்தன. அவற்றையும் பெற்றுக்கொண்டு, வீடு திரும்பினார்கள். மடுவில் அன்றாடம் செத்தவீடு, அன்றாடம் பிறந்தநாள் கொண்டாட்டம். இடைக்கிடையே திருமண நிகழ்வு, புதிய பிரசவங்கள் என கோலாகலமாக நடந்து கொண்டுதான் இருந்தது. இருக்காதா பின்னே மடுவில் ஒரு மாவட்ட சனத்தொகை குவிந்திருந்தது. அதுமட்டுமல்ல அந்த குட்டி வத்திக்கானில் அங்குள்ள திருத்தந்தையின் தனி ஆட்சியே வலிமையுள்ளதாகவும் இருந்தது. அங்கே இயக்கத்தின் அதிகாரம் செல்லவில்லை. இயக்கம் ஏதாவது கூட்டம் போட்டு மக்களுக்கு செய்தி சொல்வதாயினும் வரவேற்பு மாதா என கோவில் வளாகத்தின் எல்லைக்கு அமைக்கப்பட்டுள்ள சிலைகளுக்கு அப்பால்தான் செய்ய முடியும். ஆயுதங்களுடன் கோவில் வளாகத்தில் நடமாடத்தடை. எனவே சாதாரணமாக மக்களைப்போலவே இயக்கப் போராளிகளும் அங்கே சென்று வந்தனர்.

இதற்காக இயக்கம் தனது வேலைகளை நிறுத்தி வைக்கவில்லை. உள்ளக பிரச்சாரம் வேகமாக முடுக்கி விடப் பட்டிருந்ததால் அங்கிருந்து இயக்கத்திற்கு வரும் பிள்ளைகள் வந்து கொண்டிருந்தார்கள். அதேபோல் மக்களிடையே கசிப்பு விற்பனையும் நடந்தது. சமூக சீர்கேடாக பாலியல் தொடர்புகளும், திருட்டு ஏமாற்று வேலைகளும் நடந்தன. ஓரளவுக்கான அதிகாரம் கொண்ட திருப்பதி நிர்வாகம் பாடசாலை நிர்வாகத்தையும், நடத்தியது. அதாவது இளையவர்களை தனது கட்டுக்குள் வைத்திருந்தது. கோவில் வளாகம் மிகவும் சுத்தமாக பேணப்பட்டது.

லெச்சிமி பாப்பாமாமி, சுதன் கமலா ஆகியோர் தமது நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு மீண்டும் தமது கிராமத்துக்கு திரும்பினர். எப்படியும் அன்றைய பொழுது அத்தோடு முடிந்தது. அடுத்தநாள் காலை அவள் எள் வாங்கிக் கொண்டு போன கோபால் வந்துவிட்டானா எனப்பார்க்க, மடுக் குளம் கிராமத்திற்குப் போனாள். அவன் வரவில்லை. என்ற செய்தியே காத்திருந்தது. என்னதான் வீட்டில் பொருட்கள் இருந்தாலும், கையில் பணமில்லாதது பெரிய குறையாகவே பட்டது. இரண்டு மாதங்களாக கஷ்டப்பட்டு முழு உழைப்பையும் கடனாக கொடுத்துவிட்டு அலைவது எவ்வளது வேதனையான விடயம்.

அவள் இப்படி துயரப்பட்டுக்கொண்டிருக்க சுதன் பெரிய முடிச்சோடு வந்தான்.

"என்னடா பொட்டணம் பெரிசாயிருக்கு"

"மரை இறைச்சி கிளியண்ணை வெடிவச்சவர். உதவிக்கு வரச்சொன்னவர் போனன்"

அவள் அதில் கணிசமான அளவை எடுத்து மலருக்கு கொடுத்தனுப்பினாள். பிள்ளைகளுக்கு கொடுக்கட்டும். மீதத்தை சமைக்க ஆரம்பிக்க மாமி வந்தார்.

"என்ன வேட்டையா?"

"ஓம், என்ன... தேங்காயில்லை மற்றதெல்லாங் கிடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைப்பம் உள்ளதைவச்சு," என்றாள் லெச்சிமி,

"என்னவாம் கோவாலு"

"அவனெங்க இன்னும் வரயில்லையாம் போயிற்றுத்தான் வாறன்" என்றாள் சோர்வாக.

மாமி தானாகவே இறைச்சியை சிறு துண்டுகளாக வெட்ட ஆரம்பித்தாள். சுதன் அடுத்த வளவிலிருந்து தண்ணீர் ஒரு குடம் கொண்டு வந்தான். அவர்கள் கட்டின வீட்டின் முன்னே ஒரு ஐந்து முழம் கிடங்கு வெட்டி அதிலும் தண்ணீர் நின்றது. அதில் கழுவுகிற வேலைகளை செய்வார்கள். லெச்சிமி வெங்காயம் மிளகாய் என்பவற்றை வெட்டிக் கொடுத்தாள். நிவாரணப் பொருட்களுடன் சமையல் எண்ணையும் வந்திருந்தது. அதைவிட்டு ஒரு தாளிசம் போட்டு அதில் வெட்டிய இறைச்சியை கொட்டி அளவாக உப்பும் போட்டு அதை பிரட்டிப்பிரட்டி எண்ணையில் வதக்கி அதன்பிறகு அளவாக நீர் விட்டு தளதளக்க இறக்கினாள் மாமி தேங்காய் இல்லாத குறையே இல்லாமல் கறி அவ்வளவு சுவையாக இருந்தது. சாப்பிட்டுவிட்டு கைகழுவ இரண்டு பெண் போராளிகள் வீட்டுக்கு வந்தனர் மீதமிருந்த சோற்றைப் போட்டு அவர்களுக்கும் கொடுத்தாள் லெச்சிமி. இப்போதெல்லாம் முன்னைய கூச்ச உணர்வு அவர்களிடம் இல்லை. தேநீர் என தொடங்கி, சாப்பாடு என்று கேட்பதுவரை போராளிகள் நெருங்கியிருந்தார்கள். லெச்சிமியும் இவற்றை உவந்தளித்தாள். சாப்பிடும் போதே செண்பகா சொன்னாள்,

"அக்கா உங்களை கூட்டிக்கொண்டு வரட்டாம். ரெண்டு மூண்டு நாளைக்கு நிக்கிறமாதிரி வரட்டாம்"

"அய்யைய்யோ அப்பிடி எப்பிடி..."

"நீ போகில் போ சுதனோட நான் நிக்கிறன்தானே" சுதனை திரும்பிப்பார்த்த லெச்சிமிக்கு கண்கள் கலங்கின. அவனை ஒரு வக்கீலாக மாற்றவேணும் என்ற அவளுடைய கனவு கண்ணீரில் தழும்பியது. படிப்பு அவன்ர படிப்பு இப்படி வேட்டையில போகுதே? பேரன்ர வழிவழி அவன்ர எண்ணங்களை கொண்டு நடத்திறது என்ன? இதுதான் "ஜீனில" ஊறினது என்பதோ... அவள் எதுவும் பேசத் தோன்றாமல் ஒரு சேலையை எடுத்து வைத்துக்கொண்டு கிளம்பினாள். அவள் போன போது பொறுப்பாளர் அங்கே இல்லை. இருந்தவர்கள் சமைத்து சாப்பிட்டார்கள் அவள் தனது பையை இறப்பில் கொழுவிவிட்டு உட்கார்ந்தாள். மொத்தம் ஏழு பேர் வவுனியா மாவட்ட அரசியற்றுறை மகளிர்அணி  கல்மடு ஏரியா, சாத்திரி கூளாங்குளம் ஏரியா, சேமமடு ஓமந்தை ஏரியா, இரணை இலுப்பைக்குளம் ஏரியா, செட்டிகுளம் ஏரியா என மிகப் பரந்த ஏரியா, வட்டாரம் என்பதே "ஏரியா" என ஆங்கிலத்தில் பேசப்பட்டது. தொலை தூர வட்டாரங்களை உடையவர்கள் தினமும் வரத்தேவையில்லை. அவர்கள் ஒருநாளில் செல்லும் இடங்களில் என்னவெல்லாம் விபரங்கள் தேவையோ அதையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்துவிடுவார்கள். எல்லை. அதாவது இராணுவப்பகுதிக்கும் இவர்களுக்கும் உள்ள பிரதேசத்தின் எல்லை ஒன்று வரையறை செய்யப்பட்டிருக்கும். அதற்கும் அப்பால் போவதில்லை. அந்த எல்லையில் ஆண் போராளிகளின் காப்பரண்கள் இருக்கும். அவர்கள் அரசியற்றுறை அல்ல. "குறூப்" என குறிப்பிடப்படும் படையணியை சேர்ந்தவர்கள். இவர்களுடன் மகளிர் அணிக்கு தொடர்பில்லை இவர்களை அடுத்து இராணுவ கட்டமைப்பாக உள்ள பகுதிக்கும் இடையே ஒரு ரவை செலுத்தமுடியாத அளவு தொலைவு இருக்கும். அது "கொலைவலயம்" என்று பேசப்படும் இடம்.

இந்த எல்லைகளில் லெச்சிமி இப்போது அவர்களுடன் செல்ல வேண்டிய தேவை இல்லை என்றாலும், போராளிகள் தனியாக பக்கத்து வீட்டுக்குக்கூட செல்ல முடியாது. இன்னொரு வரை அழைத்துக் கொண்டே செல்ல வேண்டும். என்பது இயக்க கட்டுப்பாடு. அதாவது எந்த போராளிக்கும் தனிப்பட்ட பேச்சு நட்பு இருக்கக்கூடாது. அங்கு பேச்சு வாக்கிலேனும் தகவல் எதுவும் போக முடியாது. போகாது ஆயினும் அவர்களிடமிருந்து தகவல்களை பெற முடியும். முதன் முதலாக லெச்சிமி ஒரு கிராமத்திற்கு செல்ல வெண்டியேற்பட்டது முக்கியமாக அந்தப்பகுதி ஏரியாக்காரியுடன் பாவற்குளம் ஐந்தாம் வட்டாரத்திற்கு செல்ல வேண்டியேற்பட்டது. ஆக அதற்கான சொந்த வழியில்லை

குறுக்கு வழிகள்தான் அது ஏறக்குறைய கொலை வலயமும் தான் அப்போது அவர்கள் சென்ற பிரதேசத்தின் மீது இராணுவ வேவும் நடக்கும். இயக்க வேவும் நடக்கும், எனினும் குடிமக்கள் வாழ்ந்தார்கள். இவர்களும் வவுனியா நகரத்துக்கு செல்வதாயின் தாண்டிக்குளம் வந்தே செல்ல முடியும் அப்படியே ஆறேழு மைல் தொலைவில் நகரம் இருந்தாலும் அந்தப் பாதை அடைக்கப்பட்டிருந்தது. எனவே இவர்கள் பூவரசன்குளம் இரணை இலுப்பைக்குளம் என சுற்றி பல மைல்கள் கடந்தே நகரத்துக்கு வரவேண்டும். அங்கே சிலர் "இரகசியப்பாதைகளால்" நகருக்குள் செல்வதாக தகவல் கிடைத்திருந்தது. அதையும் மீறி அவர்களிடம் தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்வதாகவும் தகவல் இருந்தது. ஆனால் அதையெல்லாம் இந்த மகளிர் அணி கேட்கவோ பார்க்கவோ முடியாது. அது அவர்களுடைய வேலையுமல்ல. அவர்கள் ஒரு பெண்ணை விசாரிக்க அழைத்து வருவதற்காக அங்கே போனார்கள். நல்ல வேளையாக அவள் பம்பமடுவிற்கு இடம் பெயர்ந்து போய்விட்டதாக தகவல் கிடைத்தது. அவர்கள் அந்த மந்துக்காடுகளின் ஊடாக உயிரைக்கையில் பிடித்தவாறே பூவரசன்குளம் வந்து சேர்ந்தார்கள். மாலை அவர்கள் முகாமுக்கு வந்தபோது பானு என்ற போராளி வந்திருந்தாள். நளாயினி இன்னும் வரவில்லையா எனக்கேட்க, "அவா அவசரமா யாழ்ப்பாணம் போறா உங்களை கிளிநொச்சிக்கு அனுப்ப சொல்லீற்றுப் போறா" என்றாள். நேரம் போயிற்றுது நாளைக்கு காலமை போகலாம்" என்றாள் செண்பகா, அவர்கள் சாப்பிட்டுவிட்டு சென்றி போட்டபின் படுத்தார்கள்.

மறுநாட்காலை சாப்பாட்டை பார்க்காமல் தேநீரைக் குடித்துவிட்டு செண்பகாவும் லெச்சிமியும் கிளிநொச்சிக்குப் புறப்பட்டார்கள்.

"வெயிலேறினா சைக்கிளோடேலாது. கேதியா கெதியா" என்றபடி இருவரும் வீதிக்கு இறங்கினார்கள். பால மோட்டை ஊடாக மாதர் பணிக்க மகிழங்குளம், கதிரவேலர் பூவரசங்குளம் கொந்தைக்காறன்குளம் வரை வந்து அங்கிருந்து உள்ளே திரும்பி காடுகளூடாக பயணித்து ஓர் குக்கிராமத்தை கடந்து விளக்கு வைத்த குளம் கடந்து ராமனூர் மேட்டில் கண்டிவீதியை அடைந்தார்கள். அதற்குமேல் தார் போட்ட வீதி வேகமாக உழக்க ஆரம்பித்தனர். ஒன்பது மணிக்கெல்லாம் புளியங்குளத்தை அடைந்து ஒரு கொட்டலின் முன் சைக்கிளை நிறுத்தினாள் செண்பகா.

"வாங்க, இருங்க என்ன சாப்பிடுறீங்க தோசை இடியப்பம்..." என நீட்டினார் கடைக்காரர். செண்பகா வாங்கக்கா என லெச்சிமியையும் அழைத்துக் கொண்டு வசதியாக ஒரு மேசைக்கருகே வாங்கில் உட்கார்ந்தாள். அவர் மனைவி தட்டை எடுத்து வைத்துவிட்டு முகத்தைப்பார்த்து...

"இவங்கதானே அன்னைக்கு பேசினாங்க"என்றாள்.

"அவங்களேதான் கமலாக்கா பசிக்கிது முதல் சாப்பாடு பிறகு கதை" என்றாள்.

என்ன இவள் கையிலே ஒரு சதக்காசில்லை கடையில் வந்து அதிகாரம் பண்ணுகிறாளே என லெச்சிமி வியக்க அருமையான கறியுடன் இடியப்பம் வந்தது. இருவரும் வயிறார சாப்பிட்டனர். பின்னர் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினர். கண்டி வீதி வெறிச்சோடிக்கிடந்தது. எந்த வாகனமும் இல்லை அவர்களுக்கு முன்னோ பின்னோ மிதிவண்டிகளும் இல்லை. சாப்பிட்ட புளுகில் செண்பகா வீதியை சுலாவியோடினாள்.

"ஆர் ஆக்கள் தெரிஞ்சவையா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா ஜெயவர்த்தனா சிங்களம். அம்மா கமலா தமிழ். ரெண்டு பிள்ளையள் போராளியள் அவரை உள்ளுக்க போறதெண்டா போகலாம் எண்டு இயக்கம் சொன்னாலும், அவர் போகயில்லை எங்களோட நிண்டிட்டார்"

லெச்சிமிக்கு ஒரு சந்தேகம். ஆனா அதை வெளியில சொல்லவில்லை. ஏனென்றால் அவள் இன்னும் இயக்கத் தின்ர வலையமைப்பை விளங்காமத்தான் இருந்தாள்.

## *26*

மத்தியான உணவு நேரத்திற்கு அவர்கள் கிளிநொச்சியை அடைந்துவிட்டனர். லெச்சிமி ஓடுவது அவளுடைய மிதிவண்டி. அது ஆண்களுக்கானது. சேலையை ஒதுக்கி பாவாடையுடன் சேர்த்து மிதிவண்டியின் சீற்றில் வைத்து அதன்மீது அவள் லாவகமாக உட்கார்ந்துதான் மிதி வண்டி ஓடுவாள். சேலை அப்படி இப்படி அசையாது. இந்த ரகசியம் யாருக்கும் தெரியாது. பெண்களுக்கான வண்டியின் சில்லின் சுற்றளவைவிட இது அதிகமானதால் வேகமும் அதிகம். காலையில் புறப்பட்டு ஐந்தரை மணித்தியாலத்தில் அவர்கள் எழுபத்தைந்து கிலோமீட்டர்களை கடந்து வந்திருப்பது கொஞ்சம் அதிகம்தான் செண்பகா தன் தோழி களுடன் விவாதித்தாள். "அடியப்பா அக்காவோட சைக்கிள் ஓடவே ஏலாது."

கொஞ்ச நேரத்தில் அங்கு வந்த பொறுப்பாளர் சுருதி, "சாப்பிட்டீங்களா? என விசாரித்தாள்.

"இல்லை இன்னும் இல்லை களைப்பாயிருக்கு குளிச்சிட்டு சாப்பிடுவம்" என்றாள் லெச்சிமி. சரி என்றவள். "பிள்ளை ஆர் நிக்கிற அக்காவுக்கு தண்ணி அள்ளிக்குடுங்க குளிக்கவாம்" என்றாள்.

"ஓமக்கா" என்றவள் தொடர்ந்து, "பெரல்ல தண்ணியடிச் சிருக்கு நீங்க குளியுங்க" என்றாள். லெச்சிமி குளித்துவிட்டு வர சுருதி உணவுக்காக அழைத்தாள் அவளுடைய மேசை யிலேயே உணவு வந்தது. லெச்சிமிக்கு ஒரு தட்டில் பரிமாறி விட்டு அதை எடுத்துக் கொடுத்துவிட்டு லெச்சிமியோடு பேசியவாறே சாப்பிட்டாள் சுருதி.

"சந்திரன் அண்ணை வீரச்சாவு. இவளநாளும் விசாரணையில வச்சிருந்து இப்பதான் இயக்கம் "கிளைம்" பண்ணியிருக்கு, கிளிநொச்சிதானே அவற்ற சொந்த இடம். வீரவணக்கக் கூட்டங்கள் போட்டிருக்கினம். வட்டக்கச்சி இண்டைக்கு அஞ்சு மணிக்கு, நீங்க களைச்சிருப்பியள் வேண்டாம். நாளைக்கு உருத்திரபுரம் நாளையிண்டைக்கு கிளிநொச்சிக்க கூட்டம் நீங்கதான் பேச வேணுமாம் எண்டு கேட்டவங்கள். அதுதான் வரவைச்சன்." என்றாள்.

லெச்சிமிக்கு சந்திரனைப்பற்றித் தெரியாது. ஆனால் அவன் பேசிய கூட்டம் ஒன்று புலிகள் நகருக்குள் வந்தபோது அவர்களுடைய கிராமத்தில் நடந்தபோது பார்த்திருக்கிறாள். உரைத்துப் பொட்டு வைக்கலாம் போல அவ்வளவு கறுப்பன். அவனது குரலில் ஒரு கம்பீரமும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வைக்கும் திடமும் இருந்தது. சில மாதங்களுக்கு முன் இந்தியாவிற்குப் போய்விட்டுத்திரும்பும் வழியில் படகு கவிழ்ந்து அவனும் அவனுடன் கொண்டு வரப்பட்ட பொருட் களும் கடலில் மூழ்கிவிட்டன. என்று பேசிக் கொண்டார்கள். இந்த சம்பவம் விபத்தா? அல்லது சதியா? என்பதை விசாரித்த பின்னர்தான் அதை பிரகடனப்படுத்தியுள்ளார்கள். லெச்சிமி அவனைப்பற்றி பேசப்போவதில்லை.

மேடையை கட்டுப்படுத்தி யார் என்ன பேச வேண்டும் என்பதை வன்னிப்பிராந்திய அரசியற்றுறைப் பொறுப்பாளர் குணா ஒழுங்குபடுத்தினான். அவனுடன் இன்னுமொருவன் பேச வந்திருந்தான். அப்பகுதி அரசியற்றுறைக்காரன் என்றார்கள். குணாவும் ஒரு பேச்சாளர். எனவே "ஒருவர் பேச எடுத்த விடயத்தில் மற்றவர் மூக்கை நுழைக்காமல் நீங்கள் பேச வேண்டிய விடயத்தை எப்படிபேசினாலும் சரிதான்" என்றான். அதன்படி அவளுக்கு பெண்களை போரின்பால் கவரும்படி பேசவேண்டியேற்பட்டது. அதுதான் அவளது துறையும் எனவே அவள் பெரிதாக எதையும் அலட்டிக்கொள்ள வில்லை. இன்னுமொரு விடயம் ஒழுங்கில் வந்தது. அது நேரம். எட்டுமணிக்கு கூட்டம் ஆரம்பிக்கும். என்றால் ஏழு ஐம்பத்தைந் திற்கு பேச்சாளர்கள் மேடையின் பின்னே நின்றாக வேண்டும். என்பதை, குணா போட்ட அந்த கட்டளையை, அன்றும் அதன் பின் அவள் கலந்து கொண்ட பல கூட்டங்களிலும் தவறாமல் அனைவரும் பின்பற்றியதை இங்கு சொல்லியே ஆக வேண்டும்.

இரண்டு கூட்டங்கள் இரண்டு நாள் வந்ததில் ஒருநாள் மூன்று தினங்கள் கழிந்தது. இப்போது அவள் வீடு திரும்ப வேண்டும். எனவே சொல்லிக்கொண்டு புறப்பட்டாள். இப் போது பானு என்ற போராளி அவளுடன் வந்தாள். நாளாயினி பூவரசன் குளத்தில் காயமடைந்து வைத்தியசாலைக்குப் போனவள் இந்த வாரமும் வரவில்லை. அதனால் பானுதான் அப்பகுதியின் பொறுப்பாளராக தற்காலிக கடமையிலிருந் தாள். வரும்போது அவர்கள் எங்கும் தங்கி உணவோ தேநீரோ எடுக்கவில்லை. விரைவாக முகாமிற்கு வந்து சேர்ந்தனர். நேரம் போதுமானதாக இருந்ததால் லெச்சிமி தனது வீட்டிற்கு கிளம்பிப் போனாள். புறப்படும் போது சுருதி அவளிடம் ஒரு நூறு ரூபா நோட்டைக் கொடுத்தாள். "செலவுக்கு இருக்கட்டும்" என்றாள். அதைவாங்கிக் கொண்டுவந்தாலும் கடைகள் எது வும் எதிர்ப்படவில்லை. இரணை இலுப்பைக்குளத்தில் அவளுடைய பால்யவயது செவிலித்தாய் ஒருத்தியை கண் டாள். நீண்ட நாட்களின்பின் கண்டதால் ஆர்வமாக கட்டித் தழுவி அந்தப் பெண் மகிழ்ந்தாள். லெச்சிமிக்கு மனம் பூரித்தது. அவள் ஒரு தேநீர் ஊற்றிக் கொடுத்தாள் பின்னர் தன் சேனை யில் விளைந்த சோளக்கதிர்களையும் கெக்கரிக்காய் விளாம் பழம் என்பவற்றையும் மூடையாக கட்டிக் கொடுத்தாள். அவள் அதற்கு பணம் வாங்க மறுத்துவிட்டாள். "அந்த நாளையில் அம்மாவும் அப்புவும் உங்களை பார்த்ததுபோலதானே எங்களையும் பாத்தவை. உன்னட்ட காசா? இதெல்லாம் ஒரு அன்புதான் கொண்டு போ" என்றாள். லெச்சிமிக்கு அது பிச்சையேற்றது போல ஒரு உணர்வைக் கொடுத்தாலும் மறுக்காமல் கொண்டு சென்றாள்.

அன்றிரவு உறக்கத்திலிருந்தவளை பக்கத்து வீட்டு தர்மலிங்கமய்யா வந்து எழுப்பினார். இரவில் ஊசாடுவதே மிக ஆபத்துத்தான் அந்த இடத்தில் இந்த நேரம் ஏன்? என்றவாறு மாமிதான் முதலில் எழுந்தாள். சைக்கிளோடிய களைப்பில் லெச்சிமியின் உறக்கம், ஆழமாக இருந்தது. என்றாலும் அது கலைந்து போனது. ஆனால், படுக்கையிலிருந்து எழ முடிய வில்லை. அவள் முயலவில்லை. மாமி வாசலில் நின்ற தர்ம லிங்கய்யாவுடன் உரையாடுவது தெளிவாக கேட்டது.

"அம்மா நம்ப எளங்கன்னி வலியில துடிக்கிறாம்மா அதான் லெச்சிமி அம்மாவ கூட்டிட்டு போலாண்ணு" லெச்சிமி வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தாள்.

"ஏன் என்ன ஆச்சு, நாள் கிடக்குத்தானே என்ன சாப்பிட்டா?" என் கேள்விகளை அடுக்கினாள்.

"இல்லம் இன்னம் ஓம்போது நா கெடக்கு அதுக் குள்ளாற..." அவள் மாமியை பார்த்தாள் உறங்கிக் கொண்டி ருந்த சுதனும் விழித்திருந்தான். மாமி அவளிடம் நீ போ... நான் சுதனோட நிக்கிறன்" என்றாள். லெச்சிமி தன் சட்டுவத்தை புரட்டி ஒரு நூல்கண்டையும் கத்தரிக்கோலையும் எடுத்தாள். "சரி நடவுங்க" என்றாள். தர்மலிங்கத்தின் பின்னே நடந்தாள். அவளிடம் இப்போது தூக்கக்கலக்கம் இல்லை.

"இளங்கன்னி"தர்மலிங்கத்தின் இரண்டாவது மகள் பதினேழு பதினெட்டு வயதிருக்கும். அந்த வீட்டின் படித்த பெண். ஓயெல் பரீட்சை எழுதியவள். இங்கிருந்து பூவரசன் குளம் பாடசாலைக்கு சென்று வருகையில் ஒரு போராளியின் வசமாகிவிட்டாள்: இந்திய பூவரசன்குளம் புலவனாவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

சந்தியின் முகாமில் ராணுவத்துடன் காவலில் நின்றவன் தினசரி அவளை மறித்து பேசிப்பேசியே வசமாக்கினான். எண்பத்தியொன்பதாம் ஆண்டு அக்டோபர் மாதம், அந்த இயக்கத்தை சேர்ந்தவர்கள் பெண்கேட்டு வந்தார்கள். தாய்க்கும் தந்தைக்கும் கொஞ்சம்கூட விருப்பமில்லை. ஆனால் திருமணம் மிக ஆரவாரமில்லாமல் நடந்தேறியது.

"யம்மா கண்ணாலமான அன்னிக்கு வந்தாம்மா ஒண்ணா இருந்தாங்க. மறுநாள் அவன எங்கயோ வேற காம்பில் போட்டிட்டாய்ங்க. வரல. அப்பதான் சொன்னாங்க இந்தியப்படை போவுது அவிங்ககூட இவிங்களும் ஓடப் போறாய்ங்க எண்ணு" தர்மலிங்கம் கண்களை துடைத்துக் கொண்டார். இளங்கன்னிக்கு பிரசவ வலி கண்டிருந்தது.. லெச்சிமி அவளை கொஞ்சம் வெந்நீரில் குளிக்கச் செய்தாள். சாப்பிடவைத்தாள். வலி வரும்போதெல்லாம் அலறினாள். அழுதாள் பின் சோர்வாக படுத்தாள். அவளுடைய அம்மா இவளை ரகசியமாக அழைத்தாள் "அம்மா ஒரு நா வாழ்க்கை. இப்பிடியாவிருச்சி அவ சின்னப்பொண்ணும்மா, எங்கிட்ட வந்து கேட்டாம்மா இந்தப்பிள்ள எதுவழியா பொறக்கும்னு... நா சொன்னே எதுவழியா நீங்க நடந்துகிட்டீங்களோ அதுவழியாத்தாம் பொறக்கும்னு" அவள் மனம் நொந்து பேசினாள். "பொழக்கமில்லாத வழியில பிள்ளை பெத்துக்க கஸ்டம் எண்ணு சொல்றாங்களேம்மா என்ன பண்ணப் போறாளோ"

"நீங்க எதுக்கும் பயப்படாதீங்க உங்கட குல தெய்வத்தை வேண்டிக் கொண்டு இருங்க, என்னவோ சொல்லுவாங்களே "அகதிக்கு ஆகாசம் துணை செட்டி கப்பலுக்கு தெய்வம் துணை" என்று. எல்லாம் கடவுள் விட்ட வழி" என்றாள் லெச்சிமி.

அவள் எதிர்பார்த்ததுபோல அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் இளங்கன்னி ஒரு ஆண்குழந்தையை பெற்றாள். சுகப்பிரசவம்.

"ரொம்ப பயந்திட்டம்மா, ஆசுபத்திரியும் இல்ல யாழ்ப்பாணத்தில சண்டை நடக்குதாம் அதால பாதையுமில்ல இல்லண்ணா நேரத்தோட கொண்அக்கிட்டுப் போயிருக்க லாம்" என்றார்.

அட ஆமாம் சண்டையொன்று நடக்கிறது என்பதை அவள் மேலோட்டமாக கேள்விப்பட்டிருந்தாள். அவள் குளித்து விட்டு உடைமாற்றிக் கொண்டு வர, தாரணி வந்தாள். "அக்கா ஒருக்கா சின்னத்தம்பனைக்கு போவமா?" என்றாள்.

நல்ல விசயம் அம்மா ராராவா நித்திரை கொள்ள யில்ல. நாளைக்கு அவவுக்கு ஏதும் வந்து படுத்தா ஆர் பாக்கிற. ங... உந்த மடுக்குளக்கட்டால ஏறி இறங்கினா சின்னத் தம்பனைதான் போங்க ரெண்டுபேர்தானே நிக்கிறியள்." என்று சுதன் பேசினான்.

"மெய்தான் பிள்ளை இஞ்ச ஒரு பிரசவம் இப்பதான் முடிஞ்சு வாறன் திரும்பவும் போய்கவனிக்க வேணும் ஒரு மூண்டு நாளைக்கு என்ர கண்காணிப்பு அவசியம் விட்டிட்டு வர ஏலாது." என்றாள்.

"ஒரு பிள்ளை வீரச்சாவு. வீட்டுக்கு தகவல் சொல்லப் போறம். பின்நேரம் பொடி வந்திரும். துயிலுமில்லத்துக்கு வாங்க" என்று கூறிவிட்டுப் போனார்கள்.

அவள் போகவில்லை. ஆனையிறவுச்சமரில் அந்த சாவு நிகழ்ந்திருந்தது. அங்கே என்ன நடக்கிறது என்பது யாருக்கும் தெரியவில்லை களமுனைக்குச் சென்று வீரச் சாவடைந்த உடல்களை எடுத்துவரும் பொறுப்பில் ஒரு வாகனமும் சில போராளிகளும் திரிந்தனர் அவர்கள் மூலம் சில வாய்த்தகவல்கள் கிடைத்தது. வானொலி கிடையாது. பத்திரிகை ஈழநாதம் நேற்றைய தினசரி இன்று மாலைதான் ஆண்கள் முகாமுக்கு வரும். சிலநேரம் வராது. அதை ஆண்கள் பிரித்து படித்து பின்னர் மகளிருக்கு அனுப்ப அது பழைய பேப்பராகிவிடும். என்றாலும் இப்போது இயக்கப் போராளிகளின் முக்கிய கடமையாக ஆட்சேர்ப்பு விதிக்கப் பட்டது. அவர்கள் மட்டுமே தகவல்களை மக்களுக்கு கூறினார்கள்.

மக்கள் வெளியே செல்ல முடியாத நிலை இருந்ததால் பழையபடி மருத்துவ நிலையத்தை நடாத்த வேண்டியதாயிற்று. எனவே லெச்சிமி பாலமோட்டைக்கு வந்தாள். பன்னிரண்டு மணியுடன் மருத்துவ நிலையம் மூடப்படும் அதன்பின் (ஆட்சேர்ப்புக்காக) சின்னச்சின்ன கிராமங்களில் கூட்டம் வைத்து போர் நிலவரங்களை பேச வேண்டியதாயிற்று. என்றாலும் மக்கள் எச்சரிக்கையாக கூட்டங்களுக்கு பெரியவர் களே சமூகமளித்தனர். நாளாந்தம் வீரச்சாவடையும் போராளி களின் உடல்கள் அவற்றை வித்துடல்கள் என்றே அழைப்ப துண்டு காரணம் அவர்கள் விதைக்கப்படுவதால் புதிய போராளிகள் பிறக்கிறார்கள் என்ற கருத்தாகும். சொன்னால் நம்புங்கள். ஒவ்வொரு வீரச்சாவின் பின்னும் புதிய பிள்ளைகள் போராட்டத்தில் இணைந்தார்கள். லெச்சிமிக்கு இது பெரிய புதிராக இருந்தாலும், அவள் உரையாற்றிய பின்னரும் அந்த உரைகளால் புதியவர்கள் வருகிறார்கள் என்பதை அவள் நம்ப வில்லை. ஆனால் அது தனக்கு காலத்தால் விதிக்கப்பட்ட கடமை என நினைத்தாள்.

என்னதான் வீராப்பாக காட்டிக் கொண்டாலும் அவள் அடிக்கடி அரசியற்றுறை பொறுப்பாளரை கண்டு தனது மகனை எங்கேயென்று தேடித்தருமாறும் ஒரு தடவை பார்க்க அனுமதி தருமாறும் கேட்டுக் கேட்டுச்சலித்தாள். முன்னர் நாளாயினி இருந்தபோது அவளுக்காக அவளுடன் வருவாள். பானு அப்படியல்ல. அவளுக்குள்ள சிந்தனை வேறு அவளால் லெச்சிமிக்கல்ல வேறு யாருக்கும் உதவ முடியாது.

இப்போது யாழ்ப்பாணத்திலிருந்து புதிதாக போராட்டத் தில் சேர்ந்த போராளிகள் ஐந்து பேர் வவுனியாவிற்கு அனுப்பப்பட்டிருந்தனர். பிரச்சார வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். ஒவ்வொருவரும் ஓயெல் படித்திருந்தனர். அவர்களில் ஒருத்தி வரிச்சீருடையில் இருந்தாள். மற்றவர்கள் சாதாரண நீளக்காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தனர். வரிச்சீருடைகளுக்காக கொண்டுவரப்பட்ட பெருமளவு துணிகள் லெப்ரினட்கேணல் சந்திரனுடன் கடலில் புதைந்து விட்டதால் இப்போது சாதாரண துணிகளிலேயே போராளி களுக்கு ஆடை தைக்கப்பட்டது. லெச்சிமியைச் சுற்றிச்சுற்றி வந்த அந்த வரிச் சீருடைக்காரி வயதுக்கு மீறிய வளர்ச்சியும் அறிவும் கொண்டிருந்தாள். அவளுடைய வேகமும் விவேக மும் லெச்சிமிக்கு மிகவும் பிடித்திருந்தது. "கலோ அதென்ன எல்லாருக்கும் சாதாரண உடுப்பு உமக்குமட்டும் வரி" என்று கேட்டாள் லெச்சிமி,

"அக்கா எனக்களவான உடுப்புகள் கிடைக்கேல்ல அதால இதை தந்திட்டினம், என்றவள். அக்கா எங்கயும் கூட்டமெண்டா நானும் வரட்டா எனக்கு பேச ஆசை" என்றாள்.

(தொடரும்)

நூல்
ஆத்ம அசைவுகள்
(நாவல்)

ஆசிரியர்
மலரன்னை

விலை : 900.00

வெளியீடு : ஜீவநதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி வெளியீடுகள்



இ.சு.முரளிதரன்
கட்டுரைகள்
500.00

தாட்சாயணி
நாவல்
800.00

ந.இரவீந்திரன்
கட:டுரைகள்
400.00

முல்லைக்கோணேஸ்
சிறுகுதைகள்
750.00




ஐங்கரன் விக்கினேஸ்வரா
கட்டுரை
600.00

க.திலகநாதன்
நாடகம்
500.00

ஐங்கரன் விக்கினேஸ்வரா
கட்டுரை
800.00

மலரன்னை
நாவல்
900.00

க.பரணீதரன்
நேர்காணல்கள்
1000.00

க.பரணீதரன்
நேர்காணல்கள்
750.00

க.பரணீதரன்
கட்டுரை
250.00

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.